DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1426 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 4, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# Canada announces the first-ever Express Entry invitations for newcomers with experience in the trades

# கனடிய அரசு முதல் தடவையாக புதிய குடிவரவாளர்களான தொழில் சார் வல்லுனர்களுக்கு கடுகதி நுழைவு அழைப்பிதழ்கள் தொடர்பான அறிவித்தலை வெளியிடுகின்றது

Canada

ஒட்டாவாவில் உள்ள கனடாவின் கடுகதி நுழைவுத் திட்டத்தின் செயலகமானது தற்போது முக்கியமான துறைகளில் நிபுணத்துவம் பெற்றகளுக்கு ஒரு நெறிப்படுத்தப்பட்ட மற்றும் திறமையான பாதையை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வர்த்தகத்தில் மற்றும் தொழில்துறை வல்லுனர்கள் மற்றும் அனுபவமுள்ள திறமையானவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமைவஅளிப்பதன் மூலம், கனடாவின் திறமைக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதையும் நோக்கமாகக் கொண்டு இயங்கவுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

# கனடா வாழ் ரஜீவ் சுப்பிரமணியம் தயாரிப்பில் உருவாகியுள்ள 'Finder' திரைப்படத்தில் வைரமுத்துவின் பாடல்களுக்கு குரல் கொடுத்துள்ள ஈழத்துப் பாடகர் சிந்துஜன்



கனடா வாழ் ஈழத் தமிழரும் கலைஞரும் தொழிலதிபருமான ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில் தமிழகத்தில் இயக்குனர் வினோத் ராஜேந்திரன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'Finder" திரைப்படத்தில் கவிப்பேரரசு வைரமுத்துவின் பாடல்வரிகளுக்கு குரல் கொடுத்துள்ள ஈழத்துப் பாடகர் சிந்துஜன் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட பின்னர் நேற்று முன்தினம் நாடுதிரும்பினார். இதே வேளை கனடாவிலிருந்து தமிழகம் சென்றிருந்த தொழிலதிபர் ரஜீவ் சுப்பிரமணியம் திரைப்படம் தொடர்பான பணிகளை முடித்து விட்டு நாடு திரும்பினார்

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG Billiard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
ஐயப்பன் இந்து ஆலயம் திறந்தவெளி அரங்கில்
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
EVENT SPONSOR
KIDS RIDE
2023
AUG
5&6
JOYTHI
Blazing Minds
2023
POWERED BY
REALTOR
Ananth
THARMALINGAM
416.939.9525
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
$10,000 பெறுமதியான அதிஷ்டலாபப்பரிசுகள்
அனுமதி இலவசம்
FREE ADMISSION
Singer Rajaganapathy
Play back Singer Ananthu
Zee Tamil Title Winner Varsha
Play Back Singer Latha Krishna
Mega Tuners
SILVER SPONSORS
SPONSORS
New Premium Stone Ltd
416.858.1290
K.Theepan
SKYROUTE
TRAVEL SERVICES INC.
416-439-4000
SEYON TAX
RANGANAS
AUGUST 5th, 6th - ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8


Tasty தமிழா ™
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தொடர்ச்சியாக தவறிழைக்கும் அரசாங்கங்களும் ஜனாதிபதிகளும் பதவிகளை மட்டும் அணைத்த வண்ணம்

இலங்கையில் மாறி மாறி பதவியில் அமரும் ஜனாதிபதிகளும் பிரதமர்களும் ஆட்சியில் ஏறும் பல அரசாங்கங்களும் இது வரை எதைச் சாதித்துள்ளன என்ற கேள்விகள் எழுந்தவண்ணம் உள்ளன.

பாராளுமன்றப் பதவிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு உச்ச சலுகைகளை வழங்காவிட்டாலும்.. அவர்களுக்கு அடிப்படையான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பெற்றுள்ளன.

இதேபோன்று ஜனாதிபதி போன்ற பதவியில் ஏறி குந்திக் கொண்டிருப்பவர்களுக்கும் பெறக்கூடிய அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ளும் வகையில் அரசியலமைப்பு வகை செய்துள்ளது. இவ்வாறான எத்தனை ஆண்டுகளை பாராளுமன்றத்திலும் அமைச்சுகளின் அலங்காரமான அலுவலகங்களிலும் கழித்து வரும் இலங்கை அரசியல்வாதிகள் மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்ற கேள்விகளை தங்கள் கைகளில் வைத்துக் கொண்டு. 'விடை கிடைக்காதா? என்றும் ஏங்கிய வண்ணம் உள்ளனர்.

நீண்ட கால அரசியல் ஏமாற்று 'வித்தைகள்' தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பாரிய பின்னடைவை பெறும் அளவிற்கு அவர்களைப் பாதித்துள்ளன. அதே போன்று 'அரகலய' போராட்டங்களின் போது கடுமையாகப் போராடிய மக்கள் சார்ந்தவர்களை தலைமை தாங்கி நடத்தக் கூடியவர்கள் இல்லாமல் போனதால் அந்தப் போராட்டமும் நசுக்கப்பட்டது.

தற்போது வடக்கு கிழக்கு ஆகிய பகுதிகளில் மக்களின் தேவைகள் அதிகமாக உள்ளதும் ஆனால் அவைகளில் எதுவுமே தீர்க்கப்பட வேண்டும் என்ற இதயத்தை திறந்து பணியாற்றத் தொடங்கவல்ல சூழ் நிலை அங்கு காணப்படவில்லை. தற்போது மட்டுமல்ல மிகவும் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனையும் மிகுந்த பின்னடைவான நிலையோடு தொடர்ந்த வண்ணம் உள்ளன.

மேலும் அங்கு அரசியல்வாதிகளும் தலைவர்களும் கட்சிகளின் தலைவர்களும் மாறி மாறி அறிக்கைகளை வெளியிடுவதும் பாராளுமன்றத்தில் 'கர்ச்சிப்பதும்' இனவாத்தைக் கக்குவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஆனால் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக அறிக்கைகளில் எழுதப்பட்டாலும் அவை தொடர்பான நடவடிக்கைகளும் மந்தமாகவே நகர்கின்றன.

இவ்வாறான வேளையில் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தங்கள் பார்வை பட்டவர்களாக பயணங்கள் செய்து வருகின்றனர். ஆனால் மக்கள் குறைகளை சொல்வதற்கு கூட அங்கு வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் சந்தித்த மனோ கணேசன் எம். பி அவர்களும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அங்கு சில கருத்தரங்குகளில் பங்கெடுத்துள்ளனர்.

இலங்கையில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வரும் நிலையில் எமது தலைவர்கள் போராடி அதனை அமல்படுத்த முன்வர வேண்டும் என மலைய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அண்மையில் தெரிவித்தார். ஆனால் அவ்வாறு போராடக் கூடிய அரசியல் தலைவர்கள் எவரும் இயங்குவதாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் நேற்றைய கடந்த புதன்கிழமையன்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் வ இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட 13வது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் மோடி தொடர்ந்தும் பழைய பாணியில் அழுத்தங்களை பிரயோகித்து வருகிறார் என்றும் அதற்கான பதில் அழுத்தங்களை எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்விட்டு பேசிக் கொள்வதாகவே தெரிகின்றது

இலங்கை ஜனாதிபதி இந்தியா சென்ற போது இந்திய பிரதமர் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துங்கள், மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள் என்று அவர் இலங்கை ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் அவர் அமைதியாக இருக்கிறார்.

இதே வேளை 13வது திருத்தச் சட்டம் பற்றிய சரியான பார்வை இல்லாமல் துறை சார்ந்த அறிவு அற்ற நிலையில் அரசியல் காய்களை நகர்த்தலாம் என்று சிந்திக்காமல் காலங்களை வீணாக்குவது என்பதும் கவனிக்கப்பட வேண்யதாகும் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக கிடைக்கப்பெற்ற 13 வது திருத்தம் வடக்கு கிழக்கு ஒன்றாக இணைந்திருந்த போது வழங்கப்பட்டது. ஆனால் தற்போது வடக்கு கிழக்கு ஒன்றாக இல்லை. என்ற காரணமும் பெரும்பான்மை அரசியல்வாதிகளிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது

அது மட்டுமல்லாது பதின்மூன்றில் இருந்த அதிகாரங்கள் பல வர்த்தமானி மூலம் மத்திக்கு எடுக்கப்பட்டமை தவறான விடயம். அதை இந்தியாவும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தியா புதிதாக அழுத்தங்களை வழங்கவில்லை தொடர்ச்சியாகவே பதின் மூன்றை நடைமுறைப்படுத்துமாறு கூறி வருகின்ற நிலையில் இந்தியா எமக்கு துணை வர முடியுமே அல்லாமல் நாம் தான் போராடி உரிமைகளை பெற வேண்டும்.

இலங்கையில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வரும் நிலையில் எமது தலைவர்கள் போராடி அதனை அமல்படுத்த முன்வர வேண்டும் என மலைய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஆனால் எதையும் நல்லதாக நடப்பதற்கான அறிகுறிகள் எந்தப் பக்கத்திலும் இல்லை என்பது மட்டும் 'நன்றாகத் தெரிகின்றது.

# 13 — வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா துணை வரலாம் என்கிறார் மனோகணேசன் எம்.பி



இலங்கையில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வரும் நிலையில் எமது தலைவர்கள் போராடி அதனை அமல்படுத்த முன்வர வேண்டும் என மலைய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்றைய முன் முன் தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட 13வது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய பிரதமர் மோடி தொடர்ந்தும் பழைய பாணியில் அழுத்தங்களை பிரயோகித்து வருகிறார்.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி இந்தியா சென்ற போது இந்திய பிரதமர் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துங்கள், மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள் எனக் கூறி இருக்கிறார்.

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக கிடைக்கப்பெற்ற 13 வது திருத்தம் வடக்கு கிழக்கு ஒன்றாக இணைந்திருந்த போது வழங்கப்பட்டது. ஆனால் தற்போது வடக்கு கிழக்கு ஒன்றாக இல்லை.

அது மட்டுமல்லாது பதின்மூன்றில் இருந்த அதிகாரங்கள் பல வர்த்தமானி மூலம் மத்திக்கு எடுக்கப்பட்டமை தவறான விடயம். அதை இந்தியாவும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தியா புதிதாக அழுத்தங்களை வழங்கவில்லை தொடர்ச்சியாகவே பதின் மூன்றை நடைமுறைப்படுத்துமாறு கூறி வருகின்ற நிலையில் இந்தியா எமக்கு துணை வர முடியுமே அல்லாமல் நாம் தான் போராடி உரிமைகளை பெற வேண்டும்.

ஆகவே வடக்கு கிழக்கு தமிழர்கள் எமது உறவுகள் நாம் ஒரே இரத்தம் ஒன்றாக குரல் கொடுப்பதற்கு மலைய மக்கள் முன்னணி தயாராக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

Basement for Rent

Scarborough நகரில் Neilson & Mclevin சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் ஒரு அறைகொண்ட Basement உடனடியாக வாடகைக்கு உண்டு. செப்டம்பர் மாதம் தொடக்கம் வழங்கலாம்.
விபரங்களுக்கு 416-299-4904

மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

ரொறன்ரோவிற்கு மிக அருகில் மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிஞ்சு கோழிகள் விற்பனைக்குண்டு. இவையனைத்தும் திறந்த வெளியில் வளர்க்கப் பட்டவை. இயற்கையான வளர்ப்பு கொண்டவை.
தொடர்புகளுக்கு (647)920-5180

தெல்லிப்பளையில் காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இரண்டு வெவ்வேறு காணிகள் உடனடியாக விற்பனைக்கு உள்ளன.
ஒன்று 4 பரப்புவீடு கட்டக்கூடிய சதுரக் காணி.
மற்றையது மூன்றரைப் பரப்புக் காணி.
பழைய வீடு இடிந்த நிலையில் உள்ளது.
இரண்டு காணிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளன.
மின்னினைப்பு போன்றவை இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : இ.பி. முத்துத்தம்பி - கனடா- 905 554 3435

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பறித்த அதிகாரங்களை வழங்காது மாகாணசபை தேர்தல் வேண்டாம்: சிலர் தேர்தலை காட்டி பணம் பெற முயற்சி - கலாநிதி விக்னேஸ்வரன்



மாகாண சபைகளிடமிருந்து மத்திய அரசாங்கம் பறித்த அதிகாரங்களை மீள மாகாண சபைகளுக்கு வழங்காது தேர்தலை நடத்தக் கூடாது என வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சரின் செயலாளரும் பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான நிபுணருமான கந்தையா விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சனிக்கிழமை திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 13 நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் மாகாண சபைகளிடமிருந்து மத்திக்கு எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீள வழங்குவது தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நீதியரசர் விக்னேஸ்வரனும் நானும் கலந்துரையாடினோம்.

சிலர் மாகாண சபை தேர்தலை உடனடியாக வையுங்கள் என கூறுகின்ற நிலையில் மாகாண சபைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள எடுக்காமல் தேர்தலை நடத்துவதில் பயனில்லை.

அவ்வாறு தேர்தலை வைக்குமாறு கூறுபவர்கள் தேர்தலை காரணம் காட்டி வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெறுவதற்காக மாகாண சபை தேர்தலை வைக்குமாறு கோருகின்றனர்.

மாகாண சபையிலிருந்து பறிக்கப்பட்ட பாடசாலைகள் வைத்தியசாலைகள் என்பன மீண்டும் மாகாணத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

மேலும் மாவட்ட செயலகம் பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளர்கள் மீண்டும் மாகாண நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

மாகாணத்திடம் இருந்த கமநல சேவை சகநல அபிவிருத்தி என்ற போர்வையில் மாகாணத்திடமிருந்து மத்தி பறித்துள்ள நிலையில் குறித்த படைப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தால் மாகாணத்திடமே வழங்க வேண்டும் என தீர்ப்பு கூறியும் இதுவரை வழங்கப்படவில்லை.

திருகோணமலை கன்னியா பிரதேச சபையின் கீழ் இருந்த நிலையில் தற்போது மத்திய அரசாங்கம் அதனை எடுத்துள்ளது.

இவ்வாறு மாகாண சபைக்குரிய பல அதிகாரங்கள் மத்திய அரசின்-ால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனை மீள மாகாண சபைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

மாகாண சபைகள் செயற்பட்ட காலப்பகுதியில் செய்ய வேண்டிய விடயங்களை செய்யாமல் விட்டதன் காரணமாக தமிழ் மக்கள் பல அதிகாரங்களை இழந்துள்ளனர்.

ஆகவே மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்தை உரிய முறையில் சரி செய்யாமல் தேர்தலை நடத்துவது பயன் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.



# அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியைத் தவிர அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாகவே உள்ளன

## - சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

ஜனாதிபதி இந்தியா சென்று வந்த பின் சர்வகட்சி மாநாட்டை கூட்டி கலந்துரையாடினார். இதன் போது தேர்தல் தொடர்பில் முன்னொரு பேச்சும் அரசியல்த் தீர்வு தொடர்பிலும் வேறு பேச்சும் பேசுகிறீர்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதில் எந்த நியாயமும் இல்லை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியைத் தவிர அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாகவே உள்ளனர். மக்களின் விருப்பத்தின் படியே அவர்களது பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் பேசினர்.

மற்று கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் பற்றியும், இலங்கை சுகாதார நிலமைகள் கேள்விக் குறியாகியுள்ளமை தொடர்பிலும் பேசினார்.

# கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் "யாழ் ராணி" புகையிர சேவையின் ஓராண்டு பூர்த்தி விழா








யாழ் ராணி புகையிர சேவையின் ஓராண்டு பூர்த்தி விழா 28/07/2023 அன்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் இடம்பெற்றது. யாழ் ராணி புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளதை கொண்டாடும் வகையில் குறித்த நிகழ்வு கேக்வேட்டி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர், புகையிரத நிலைய ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு போக்குவரத்து இலகுபடுத்தலுக்காக சேவையில் ஈடுபட்ட யாழ் ராணி, தனது முழுமையான சேவையை வழங்கி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மாதா பிள்ளை வரம் கொடுக்காததால் சொரூபங்களை உடைத்தேன் — கைதானவர் வாக்குமூலம்

“மாதாவிடம் நேர்த்தி வைத்தும் பிள்ளை கிடைக்கவில்லை அந்த விரக்தியிலேயே யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டையில் மாதா சிலைகளை சேதப்படுத்தினேன்” என மாதா சிலைகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் காவல்துறை பிரிவில் ஆறுக்கு மேற்பட்ட இடங்களில் மாதா சிலைகள் வெள்ளிக்கிழமை (29) அதிகாலையில் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

அது தொடர்பில், தீவிர விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் காவல்துறையினர் சுதுமலை தெற்கு - சாவல்காடு பகுதியை சேர்ந்த 32 வயதான ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் காவல்துறை முன்னெடுத்த விசாரணையில், “நான் சைவ சமயத்தை சேர்ந்தவன். மனைவி கிறிஸ்தவர். இருவரும் திருமணம் செய்து சில வருடங்களாகி பிள்ளைகள் கிடைக்காத விரக்தியில் இருந்தேன். அவ்வேளையில் பிள்ளை வேண்டுமென மாதவிடம் நேர்த்தி வைத்தேன். இருந்தும், பிள்ளை கிடைக்காத விரக்தியில் இருந்தேன். இதனால், ஆத்திரத்தில் மாதா சிலைகளை சேதப்படுத்தினேன்” என தெரிவித்துள்ளார்.

# உறவுகளைத் தேடும் பயணத்தில் எல்லோருடைய ஆதரவும் வேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி கலாரஞ்சினி வேண்டுகோள்



எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் பயணத்தில் எல்லோருடைய ஆதரவும் தொடர்ந்து இருக்க வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி மற்றும் செயலாளர் ஆ. லீலாதேவி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பாக நடைபெற்ற பேரணி, பூரண கடையடைப்புக்கு ஆதரவு வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கும் ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

மேற்படி நிகழ்வானது சர்வதேச கவனத்தை ஈர்க்குமளவு மிகவும் வெற்றிகரமாக நடந்தேறியமை யாவரும் அறிந்ததே. இதற்கு உறுதுணையாக இதில் கலந்து கொண்ட அனைத்து தரப்பினருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றோம். அனைவரும் உங்களில் இனத்திக்கான கடமையை செய்ததை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

அதேநேரம் குறுகிய காலத்தில் எமது வேண்டுகோளை அனுப்பியிருந்தும் அதை ஏற்று பூரண ஒத்துழைப்பை நல்கிய வர்த்தக சங்கங்களுக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடிதம் மூலம் அழைப்பு அனுப்புவதற்கு நேரம் போதாமையால் தொலைபேசி வாயிலாக தொடர்பு ஏற்படுத்தி அழைப்பு விடுத்துருந்தோம். அதையும் பெரிய மனதுடன் ஏற்று பேரணிக்கு வருகை தந்த மதகுருமார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், நிறுவன பிரதிநிதிகள், தொழிற்சங்கத்தினர் அனைவருக்கும் எமது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

மேலும் எமது வேண்டுகோளை ஏற்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகளிற்கு பொருத்தமான நடவடிக்கைகளைச் செய்தது மட்டுமல்லாது தாங்களும் கலந்து கொண்ட கல்வியாளர்களுக்கும், எமது பிள்ளைகள் போல் எம்முடன் தொடர்ந்து பயணிக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எங்கள் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதியாக, நாங்கள் போராட்டம் தொடர்பில் அறிவித்தல் விடுத்ததும் தாங்களாகவே முன்வந்து எமது பேரணிக்கு ஆதரவு தெரிவித்த அனைத்து தரப்பினருக்கும் எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

தொடர்ந்தும் எமது உறவுகளை தேடும் பயணத்தில் உங்கள் அனைவரின் ஆதரவுகளையும் தொடர்ந்தும் வேண்டி நிற்கின்றோம் என குறித்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிலமும் மக்களும் இல்லாத சமஸ்டி யாருக்கு பயன்? 13 வது திருத்தம் இருப்பைத் தக்க வைக்கும் - நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



*சுமந்திரனுடைய கருத்தினால் கோபமடைந்த ஜனாதிபதி "ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கருத்தை கூற வேண்டாம் முதலில் பதிமூன்றை நடைமுறைப்படுத்துமாறு கூறினீர்கள் தற்போது தேர்தலை கேட்கிறீர்கள்" என்றார்.*

பதின்மூன்றாவது திருத்தத்தை வேண்டாம் என எதிர்ப்பவர்கள், எமது நிலமும் பறிபோய் இனப் பரம்பலும் மாற்றப்பட்டதன் பின் சமஷ்டியைப் பெற்று என்ன பயன் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதை அவர் இவ்வாறு எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சிலர் பதின்மூன்றாவது திருத்தம் வேண்டாம், பதின்மூன்றை கேட்பவர்கள் துரோகிகள் என தொடர்ச்சியாக கூறிக்கொண்டு வருகிறார்கள்.

அவர்கள் கூறும் போது நானும் பதின்மூன்றை வேண்டாம் எனக் கூறிவந்த நிலையில் தற்போது பதின்மூன்றை வேண்டும் என கூறுகின்றேன் எனக் கூறுகிறார்கள்.

நாங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான ஆரம்ப புள்ளியாக பதின்மூன்றை ஏற்றுக்கொண்டோமே அல்லாமல் தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வாக இன்றும் பதின்மூன்றை ஏற்கவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் எமக்கு வழங்கப்பட்டுள்ள 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாது விட்டால் தமிழ் மக்களின் இருப்புக் கூட கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

காணிகள் பறிபோனபின் சமஷ்டி யாருக்கு?

வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள், தொல்லியல் மற்றும் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு வருவதுடன் நிலத்தினிவுகளை பெரும்பான்மையினர் வாழும் மாகாணங்களுடன் இணைக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகிறது.

அதுமட்டுமல்லாது மகாவலி என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வரும் நிலையில் அதனை தடுப்பதற்கு 13 வது திருத்தத்தில் வழங்கப்பட்ட காணி அதிகாரத்தை பயன்படுத்த முடியும்.

மேலும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் புத்திஜீவிகள் துறை சார்ந்த நிபுணர்கள் எனப் பலரும் நாட்டை விட்டுத் தொடர்ச்சியாக வெளிநாடுகள் சென்று கொண்டிருக்கும் நிலையில் தமிழ் இன விகிதாசாரம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

இவ்வாறான ஒரு நிலையில் பதின்மூன்று வேண்டாம் சமஸ்டி தான் வேணும் என கேட்பவர்கள் இவ்வளவு விடயங்களும் நடந்து முடிந்த பின்னர் சமஸ்டியை பெற்று என்ன செய்யப் போகிறார்கள்.

ஒரு இனத்தின் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு நிலப்பரப்பு அவசியம் நிலங்களை இழந்து எமது அடையாளங்களை காக்க முடியாது.

ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளின் தலைவர்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய நிலையில் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினோம்.

இறுதியாக இடம் பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் தமிழ் கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்த ஜனாதிபதி பெரும்பான்மை இன கட்சிகளை சேர்ந்த கட்சியின் தலைவர்களையும் மாநாட்டுக்காக அழைத்திருந்தார்.

பதின்மூன்று தொடர்பில் கலாநிதி கந்தையா விக்னேஸ்வரன் தயாரித்த வரைவு ஒன்றை ஏற்கனவே ஜனாதிபதியிடம் நாம் கையளித்து உள்ள நிலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சியைகளின் தலைவர்களை ஏன் ஜனாதிபதி எம்முடன் அழைத்தார் எனச் சிந்தித்தேன்.

ஒருவேளை பதின்மூன்றைக் குழப்புவதற்காக அழைத்தாரோ என சிந்தித்தபோது நடைபெற்ற மாநாட்டில் சிலரை தவிர பெரும்பாலானோர் பதின் மூன்று தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டை கொண்டிருந்தனர்.

குழப்பிய சுமத்திரன்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு முன்னர் கூறிய சுமந்திரன் இறுதியாக இடம்பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் 13-ஐ நடைமுறைப்படுத்துவதை விடுத்து மாகாண சபை தேர்தலை உடனடியாக வைக்குமாறு கூறினார் அதற்கு ஜி.எல்.பீரிஸ் ஆதரவாக பேசினார்.

கோபமடைந்த ஜனாதிபதி

சுமந்திரனுடைய கருத்தினால் கோபமடைந்த ஜனாதிபதி ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கருத்தை கூற வேண்டாம் முதலில் பதிமூன்றை நடைமுறைப்படுத்துமாறு கூறினீர்கள் தற்போது தேர்தலை கேட்கிறீர்கள் முதலில் உங்களின் நிலைப்பாட்டை சரியாக அறிந்து வாருங்கள் என கூறினார்.

அன்று இரவு எனக்கு தொலைபேசியில் அழைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுமந்திரன் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்கிறார் உங்களின் நிலைப்பாடு என்ன நாங்கள் கலந்துரையாடல்களை தொடர்ந்து நடத்துவதா இல்லையா என கேட்டார்.


சுமந்திரன் கருத்தை சாதகமாக வைத்து குழப்ப வேண்டாம். சுமந்திரனுடைய கருத்தை சாதகமாக பயன்படுத்தி பதின்மூன்றை நடைமுறைப்படுத்தும் விடையங்களில் இருந்து நழுவாக் கூடாது என தெரிவித்தேன்.

பதின் மூன்றை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவை கோரிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்மந்தன் உடல்நல குறைவுக்காக சுமந்திரன் பங்குபற்றியுள்ளார்.

அவரின் கருத்தை சாட்டாக வைத்து 13 நடைமுறைப்படுத்துவதில் இருந்து தாங்கள் விலகிக்கொள்ள பார்க்கிறீர்களா என ஜனாதிபதியிடம் கேட்டேன்

அதற்கு அவ்வாறு இல்லை பதின்மூன்று தொடர்பில் எமது கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டு செல்வோம் நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் பேசுவோம் என்றார்.

ஆகவே தமிழ் மக்களின் அரசியல் அவிலாசைகளை பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்களின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 13வது திருத்தத்தை தமிழ் கட்சிகள் ஓரணி யில் நின்று நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தனேஸ்வரி இரவீந்திரன் பேராசிரியராகப் பதவி உயர்வு!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரே'ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் 29, சனிக்கிழமை காலை, துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த மனித வள முகாமைத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தனேஸ்வரி இரவீந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி. தனேஸ்வரி இரவீந்திரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

# வடக்கு என்பது தமிழர்களின் மாகாணமா என்று கேட்கும் நிலை விரைவில் உருவாகும் என்கிறார் யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் பத்மநாதன்



*யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான பீடங்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் கைகளுக்கு சென்றுள்ள நிலையில் ஐந்து வருடங்கள் சென்றால் வடக்குமாகாணம் தமிழர்களின் மாகாணம் எனக் கூறும் நிலை மாறிவிடும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரும் வேந்தருமான பத்மநாதன் தெரிவித்தார்.*

29ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையானவர்களு டையதாக மாறியது போல் வடக்கு மாகாணமும் தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தில் இருந்து மாறக்கூடிய வகையில் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

தமிழ் மக்களுடைய மொழி கலாச்சாரம் பண்பாடு ஆகிய பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதனைப் பாதுகாப்பதற்கு 13 வது திருத்தத்தில் உள்ள பறிக்கப்பட்ட பல அதிகாரங்களை மீளப்பெற்று நடைமுறைப்படுத்துவதன் மூலம் எமது இருப்பை ஓரளவு நிலை நாட்ட முடியும்.

நான் அரசியல்வாதியோ அல்லது அரசியல் கட்சியின் பிரதிநிதியாகவோ எனது செயற்பாடுகளை என்றைக்கும் மேற்கொண்டதில்லை. ஆனாலும் எனக்கு பத்துக்கும் மேற்பட்ட விருதுகளை தந்துள்ளார்கள்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நீண்ட வரலாறு உண்டு. தமிழ்த் தலைவர்கள் உரிய நேரத்தில் கேட்கவேண்டியவற்றை கேட்காமையின் தவறே இலங்கையில் இனப் பிரச்சினை உருவெடுத்தது.

இராமநாதன் தொடக்கம், 50:50 திட்டத்தினை முன்வைத்த காலம் வரையான தலைவர்களின் மகத்தான தவறாகும்.

அப்போதைய தமிழ்த் தலைவர்கள் கொழும்பை மையமாக கொண்டு வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினையை நோக்கினார்கள்.

கிழக்கு மாகாணம் மூன்று சமூகங்களின் பிரதேசமாக உள்ளது அதிலும் குறிப்பாக முஸ்லீம் சமூகம் தமிழ் சமூகத்திலும் பார்க்க கூடுதலாக காணப்படுகின்றனர்.

திருகோணமலையில் பெருந்தொகையான தமிழர்கள் முஸ்லீம்களாக மாறிவிட்டார்கள். ஏனனில் தமிழர்களை கவனிப்பார்கள் இல்லை. அவர்களை கவனிப்பதற்கு அதிகாரமும் இல்லை.

எமக்கான அதிகாரங்களை பெற்றுக்கொண்டால் நிலங்களையும், கடல் வளங்களையும் பயன்படுத்தி பொருளாரத்தில் பலமடையமுடிவதோடு தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

எனவே உரிய முறையில் மாகாணசபை அதிகாரங்களை நடைமுறைப்படுத்த எல்லா கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும். கல்வியலாளர்கள், பொதுமக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

மாகாணசபை முறைமை தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வல்ல. காலா காலம் இலங்கை ஜனாதிபதிகள் ஒவ்வொரு தீர்வு முறைமைகளை முன்வைத்தனர்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதித் தீர்வை முன்நிபந்தனையாக வைத்தால் சிங்கள ஆட்சியாளர்கள் ஒற்றையாட்சியையே வலியுறுத்துவார்கள்.

5 வருடங்கள் சென்றால் வடக்குமாகாணம் தமிழர்களின் மாகாணம் என்று கூறும் நிலை மாறிவிடும். அதற்கு பின் எந்த அதிகாரத்தை கேட்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எப்படி கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையானவர்களுடையதாக மாறியதோ அது போல் வடக்குமாகாணமும் மாற்றமடையும்.

தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் தமது சமூதாயத்தின் அபிலாசைகளையும், அவர்களது இருப்பைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இதுவே அரசியல் தலைவர்களின் கடமை எனத் தெரிவித்தார்.

ௐ

கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

கனடா இந்து மாமன்றம் இதுவரை களிப்புடன் படைத்திருந்த
சர்க்கரைப் பொங்கல் ஆண்டு விழா தவிர்க்கமுடியாத
காரணங்களால் தாமதமாகி இவ் ஆண்டின் பொங்கல் விழா,
"சிவநெறிக் காவலர்" அமரர் நந்தீஸ்வரர் அவர்களின் நினைவாஞ்சலி நிகழ்வுடன்,
தேனாய் சுவைக்கும் இன்னிசை, மனதைவயப்படவைக்கும் வீணாகானம், மற்றும்
கண்களுக்கு விருந்தாகும் நடனம் போன்ற சிறப்பு மிக்க கலை நிகழ்சிகளுடன்
விழா இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது.

காலம்: August 12, 2023 சனிக்கிழமை மாலை 6:00 - 9:00 மணி வரை
இடம்: "தமிழ் கலை அரங்கம்", தமிழிசைக் கலா மன்றம்,
1120 Tapscott Road, Scarborough

அனுமதி இலவசம்

Sri Lanka News இலங்கை செய்திகள்

# யாழ்ப்பாணம் – தாவடி அம்பலவாணர் முருகன் ஆலய திருமஞ்சத் திருவிழாவில் கலந்துகொண்ட தென் இந்திய நடிகர்கள்!





**பு. கஜிந்தன்**

யாழ்ப்பாணம் - தாவடி அம்பலவாணர் முருகன் ஆலய திருமஞ்சத் திருவிழாவில் கலந்துகொண்ட தென் இந்திய நடிகர்கள்!

வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் - தாவடி அம்பலவாணர் முருகன் கோவிலின் திருமஞ்ச திருவிழா நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக சிறப்பாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்று, விநாயகப் பெருமான் மற்றும் முருகப் பெருமான், வள்ளி தெய்வயானை சமேதரராக உள்வீதி வலம் வந்து யாகசாலை பூஜை இடம்பெற்றது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் முருகப் பெருமான் - வள்ளி தெய்வயானை சமேதரராக, விநாயகப் பெருமானுடன் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தார்.

இந்த திருமஞ்சத் திருவிழாவில் தென்னிந்திய திரைப்பட நடிகர் ஜெய் ஆகாஷ் மற்றும் நடிகை கஸ்தூரி ஆகியோரும், பக்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# யாழ்ப்பாணம் உரும்பிராய் காளியம்பாள் தேவஸ்தானத்தின் இரதோற்சவம்





யாழ்ப்பாணம் உரும்பிராய் காளியம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த இரதோற்சவம் இன்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கடந்த 23.07.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மஹோற்சவத்தில், 30.07.2023 அன்று சப்பரத்திருவிழாவும், 31.07.2023 அன்று இரதோற்சவமும் நடைபெற்றது. அத்துடன் 01.08.2023 அன்று தீர்த்ததோற்சவத்தின் பின் மாலை கொடியிறக்கத்துடன் இனிதே மஹோற்சவம் நிறைவடையும்.

இவ் வருடாந்த மஹோற்சவத்தின் கிரியைகளை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கௌரி சாந்த சர்மா குருக்கள் தலைமையிலான குருக்கள் நடாத்தி வைத்தனர்.

இதில் பலபாகங்களில் இருந்து வருகைதந்த பக்தர்கள் கலந்து கொண்டு இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றனர்.

**படங்கள் - கஜிந்தன்**

# இலங்கையில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அரிச்சல்முனையில் அகதிகளாக தஞ்சம்



இலங்கை ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள ஈழத் தமிழர்கள் வாழ வழியின்றி தமிழகத்தில் தஞ்சம் அடைந்து வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் இன்று இலங்கை வவுனியா பகுதியில் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் தனுஷ்கோடிக்கு அடுத்த அரிச்சல்முனை கடற்கரை பகுதியில் அகதிகளாக தஞ்சம் அடைந்தனர்.

இதை அடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற மரைன் பொலிசார் அவர்களை மீட்டு மண்டபம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைக்கு பின்னர் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட உள்ளனர்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா வாழ் ஈழத் தமிழர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில் உருவாகியுள்ள 'Finder' திரைப்படத்தில் கவிப்பேரரசு வைரமுத்துவின் பாடல்வரிகளுக்கு குரல் கொடுத்துள்ள ஈழத்துப் பாடகர் சிந்துஜன்



கனடா வாழ் ஈழத் தமிழரும் கலைஞரும் தொழிலதிபருமான ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில்தமிழகத்தில் இயக்குனர் வினோத் ராஜேந்திரன் இயக்கத்தில் உருவாகியுள்ள ''Finder'' திரைப்படத்தில் கவிப்பேரரசு வைரமுத்துவின் பாடல்வரிகளுக்கு குரல் கொடுத்துள்ள ஈழத்துப் பாடகர் சிந்துஜன் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட பின்னர் முன்தினம் நாடுதிரும்பினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தனது இசைத்துறை நண்பர்களோடு சென்னை சென்றிருந்த அவர் யாழ்ப்பாணத்தில் வரவேற்கப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பாக கனடா ஆரபி படைப்பகத்தினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

தென்னிந்தியாவில் எமது ஆரபி படைப்பகத்தின் தயாரிப்பில் உருவாகி வருகின்ற 'Finder' திரைப்படத்தின் பாடல்கள் கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளில் உருவாகியிருக்கும் நிலையில் எமது நிறுவனத்தலைவர் ரஜீவ் சுப்பிரமணியத்தின் எண்ணத்திலும் சிந்தனையிலும் நம்மண்ணின் மூன்று சொல்லிசைக் கலைஞர்களை அறிமுகப்படுத்தும் மகிழ்ச்சிகரமான செய்தியை அறிவிப்புச் செய்திருந்தோம்.

இன்று மற்றுமொரு அறிமுகமாக, இசையின் நுணுக்கங்களை படிப்படியாக கற்றுக்கொண்டு பலநூறு பாடல்களை ஒலிப்பதிவில் பாடியும் இசையமைத்தும் வருகின்ற நம்மண்ணின் பாடகர் வெற்றி சிந்துஜன் கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளிலான பாடலை பாடி தென்னிந்திய திரைத்துறைக்குள் பாடகராக அறிமுகமாகின்றார் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை பகிர்ந்துகொள்வதில் நாம் பெருமை கொள்கின்றோம்.



இங்கே காணப்படும் படங்கள் சென்னையில் நடைபெற்ற விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.

படங்களில் பாடகர் சிந்துஜனை கவிப்பேரரசு வைரமுத்து கௌரவிப்பதையும் கனடா வாழ் ஈழத் தமிழரும் கலைஞரும் தொழிலதிபருமான ரஜீவ் சுப்பிரமணியம் அவர்கள் திரைப்படத்தின் தயாரிப்பாளர் என்ற வகையில் கவிப்பேரரசு அவர்களைக் கௌரவிப்பதையும் காணலாம்.

# 12 நாட்கள் நடைபெறும் இவ்வருடத்தின்ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஈழத்திலிருந்து கம்பவாருதி ஜெயராஜ், கனடாவிலிருந்து "உதயன்" லோகேந்திரலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர் பட்டியல் இடம்பெறுகின்றனர்

12 நாட்கள் நடைபெறும் இவ்வருடத்தின்ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஈழத்திலிருந்து கம்பவாருதி ஜெயராஜ், கனடாவிலிருந்து "உதயன்" லோகேந்திரலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர் பட்டியல் இடம்பெறுகின்றனர்.

தமிழ்நாட்டில் பெருமளவில் மக்கள் வரவேற்பைப் பெற்று எதிர்வரும் 4ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 12 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்வருடத்தின் ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஈழத்திலிருந்து கம்பவாருதி ஜெயராஜ் கனடாவிலிருந்து "உதயன்" லோகேந்திரலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர் பட்டியல் இடம்பெறுகின்றனர்.

இவ்வருடத்தின் ஈரோடு புத்தகத் திருவிழாவில் 12 நாட்களும் மேற்படி இருவர் உட்பட 24 பேர் உரையாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசின் உதவியோடு நடத்தப்பெறும் ஈரோடு புத்தகத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளை நிறுவனர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் தலைமையில் இயங்கும் விழாக்குழுவினர் செய்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க.

தமிழ்நாடு அரசு மற்றும்
மக்கள் சிந்தனைப் பேரவை
இணைந்து நடத்தும்
ஈரோடு புத்தகத் திருவிழா - 2023

நாள் : 04.08.2023 முதல் 15.08.2023 வரை ( 12 நாட்கள் )
நேரம் : தினசரி காலை 11.00 மணிமுதல் இரவு 9.30 மணிவரை
இடம் : சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானம், ஈரோடு

தமிழகத்திலுள்ள அனைத்துத் தலைசிறந்த தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகப் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் பங்கேற்கின்றனர். வட மாநிலங்களிலிருந்தும் புகழ்மிக்க ஆங்கில நூல் பதிப்பாளர்கள் வருகை புரிகின்றனர்

( சொற்பொழிவு நிகழ்ச்சிகள் யாவும் மாலை சரியாக 6.00 மணிக்குத் தொடங்கும் )

| நேரம் | தேதி | சிறப்பு விருந்தினர் | தலைப்பு |
|---|---|---|---|
| 04.08.2023 | வெள்ளி | அமைச்சர் சு. முத்துசாமி<br>ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்<br>அந்தியூர் ப. செல்வராஜ்<br>அ. கணேசமூர்த்தி | தொடக்கவிழா |
| 05.08.2023 | சனி | பேராசிரியர் ப. மணிகண்டன்<br>அறிவியலாளர் வெ. பொன்ராஜ் | இரு மகாகவிகள்<br>தொழில்நுட்ப வளர்ச்சி ஆக்கத்திற்கா? அழிவிற்கா? |
| 06.08.2023 | ஞாயிறு | திரைக்கலைஞர் ஈரோடு மகேஸ்<br>எழுத்தாளர் ஈரோடு கதிர் | நான் என்பது நாம்<br>வாழ்தல் அறம் |
| 07.08.2023 | திங்கள் | கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் | மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் |
| 08.08.2023 | செவ்வாய் | எழுத்தாளர் இமையம்<br>எழுத்தாளர் சல்மா<br>எழுத்தாளர் கா. உதயசங்கர் | அண்மையில் எனைக்கவர்ந்த ஐந்து புத்தகங்கள்<br>எழுத்தும் வாழ்வும்<br>குழந்தைகளின் அற்புத உலகில்... |
| 09.08.2023 | புதன் | பேராசிரியர் த. இராஜாராம்<br>கவிஞர் கே. ஜீவபாரதி | செய் அல்லது செத்துமடி<br>பாரதி வழியில் பட்டுக்கோட்டை |
| 10.08.2023 | வியாழன் | இசைக்கவி ரமணன்<br>ஆர்.என். லோகேந்திரலிங்கம்<br>இதழாளர் - கனடா | வாழ்வோடு கலந்த வண்ணத் திரைப்பாடல்கள்<br>என்னைச் செதுக்கிய படைப்புகள் |
| 11.08.2023 | வெள்ளி | வழக்கறிஞர் சி. பாண்டித்துரை<br>மலேசியா | திரைப்பாடல் தரும் பாடம்<br>( இன்னிசையோடு ஓர் இலக்கிய உலா ) |
| 12.08.2023 | சனி | இயக்குனர் கரு. பழனியப்பன்<br>இயக்குனர் ராசி அழகப்பன் | சங்கத்தமிழ்<br>விட்டு விடுதலையாகி... |
| 13.08.2023 | ஞாயிறு | பேராசிரியர் பி.கே. பொன்னுசாமி<br>விஞ்ஞானி த.வி. வெங்கடேஸ்வரன் | ' அறிவியல் மேதை<br>ஜி.டி.நாயுடு விருது ' வழங்கும் நிகழ்வு |
| 14.08.2023 | திங்கள் | முனைவர் கரு. ஆறுமுகத்தமிழன்<br>முனைவர் வை. தாமோதரன் | சிந்தனை செய் மனமே !<br>உன்னுள் உந்து சக்தி |
| 15.08.2023 | செவ்வாய் | முனைவர் வெ. இறையன்பு | நிறைவு விழா |

அனைவரும் குடும்பத்துடன் பங்கேற்றுப் பயன்பெறுவீர்

மக்கள் சிந்தனைப் பேரவை
A-47, சம்பத்நகர், ஈரோடு - 638 011. போன் : 0424 - 2269186

# கனடா முதல் தடவையாக புதிய குடிவரவாளர்களான தொழில் சார் வல்லுனர்களுக்கு கடுகதி நுழைவு அழைப்பிதழ்கள் தொடர்பான அறிவித்தலை வெளியிடுகின்றது



ஒட்டாவாவில் உள்ள கனடாவின் கடுகதி நுழைவுத் திட்டத்தின் செயலகமானது தற்போது முக்கியமான துறைகளில் நிபுணத்துவம் பெற்றகளுக்கு ஒரு நெறிப்படுத்தப்பட்ட மற்றும் திறமையான பாதையை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வர்த்தகத்தில் மற்றும் தொழில்துறை வல்லுனர்கள் மற்றும் அனுபவமுள்ள திறமையானவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமைவஅளிப்பதன் மூலம், கனடாவின் திறமைக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதையும் நோக்கமாகக் கொண்டு இயங்கவுள்ளது.

2023 மே 31 அன்று, குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சராக இருந்த கௌரவ சீன் ∴ப்ரேசர், வகை அடிப்படையிலான தேர்வு மூலம் கடுகதி நுழைவுக்கான மாற்றங்களை அறிவித்தார். இந்த மாற்றங்கள் குறிப்பிட்ட பணி அனுபவம் அல்லது பிரெஞ்சு மொழி திறன் கொண்ட விண்ணப்பதாரர்களை நிரந்தர குடியிருப்புக்கு விண்ணப்பிப்பதன் மூலம் அடையாளம் காணப்பட்ட பொருளாதார இலக்கை ஆதரிக்கும் தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உதவுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை இன்று, குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமைக்கான புதிய அமைச்சரான மாண்புமிகு மார்க் மில்லர், வகை அடிப்படையிலான தேர்வுக்கான முதல் வர்த்தகச் சுற்று இந்த வாரம் திறக்கப்படும் என்று அறிவித்தார். தச்சுவேலை, நீர்க்குழாய்த் தொழில் மற்றும் கனடாவின் கட்டுமானத் துறைக்கு நாடு முழுவதும் தேவைப்படும் திறமையான தொழில் வல்லுனர்களை ஈர்க்க உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

வகை அடிப்படையிலான தேர்வு, சிறந்த உலகளாவிய திறமைசாலிகளை ஈர்ப்பதற்கும், பொருளாதாரத்தை ஆதரிக்கும் வர்த்தகர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் கனடாவின் அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. இந்த வகை அடிப்படையிலான தேர்வு சுற்றுகள், பொது அழைப்பிதழ் சுற்றுகளுடன் ஆண்டு முழுவதும் தொடரும் என்றும் மேலும் விவரங்கள் எதிர்வரும் வாரங்களில் அறிவிக்கப்படும் எனவும் அறியப்படுகின்றது.

--------------------------------

Immigration, Refugees and Citizenship Canada
Immigration, Réfugiés et Citoyenneté Canada

## Canada announces the first-ever Express Entry invitations for newcomers with experience in the trades

August 1, 2023 - Ottawa - Canada's Express Entry system is now tailored to provide a streamlined and efficient pathway for individuals with expertise in critical fields. By prioritizing the invitation of skilled newcomers with experience in the trades, Canada aims to meet the increasing demand for talent and fill key positions that contribute to the nation's economic growth and advancement.

On May 31, the Honourable Sean Fraser, the previous Minister of Immigration, Refugees and Citizenship, announced changes to Express Entry through category-based selection. These changes help address labour shortages that support an identified economic goal by inviting candidates with specific work experience or French language ability to apply for permanent residence.

Today, the Honourable Marc Miller, the new Minister of Immigration, Refugees and Citizenship, announced the first trades round for category-based selection will open this week. This focus on candidates with trades expertise - including carpentry, plumbing, and welding - will help Canada's construction sector attract the skilled talent it needs across the country.

Category-based selection signals Canada's commitment to attract top global talent and help meet the need for tradespeople to support the economy. These category-based selection rounds will continue throughout the year, alongside general invitation rounds, and more details will be announced in the coming weeks.

உ
சிவமயம்



# துர்க்கேஸ்வரம்
# ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில்

**30 Carnforth Road, Toronto, Ontario, CANADA M4A 2K7 www.durka.com Tel: 416-759 9648**

## அஷ்டோத்திர (1008) சகஸ்ர சங்காபிஷேக
# மண்டலாபிஷேக பூர்த்தி விழா

## 5-8-2023 (ஆடி மாதம் 20ம் திகதி) சனிக்கிழமை

பக்தப்பெருமக்களே!

தெய்வானுக்கிரகத்தினால் துர்க்கேஸ்வரம் திருக்கோவில் புனருத்ததாரணம் செய்யப் பெற்று, வெகுவிமரிசையாகவும் பக்திபூர்வமாகவும் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நிகழ்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் விபரங்களைத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நிகழும் சுவஸ்திஸ்ரீ மங்களகரமான சுபகிருது வருடம் ஆடி மாதம் 20ம் திகதி

## 5-8-2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு

ஸ்ரீமஹாகணபதிப் பெருமான், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத கல்யாணசுப்ரமண்யப் பெருமான் மற்றும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மண்டலாபிஷேகம் பூர்த்தியுறும் அருள்நிகழ்வு கீழே தரப்பட்ட நேரப்பிரகாரம் இடம்பெற உள்ளது. இத்தருணத்தில் பக்தர்கள் அனைவரும் தவறாது ஆசாரசீலர்களாக ஆலயம் வருகைதந்து அம்பாளின் திருவருட்கடாட்சம் பெற்றுய்வீர்களாகுக.

### 4-8-2023 வெள்ளி

**காலை 10:00 மணி முதல்**

விக்ஸேஸ்வர பூஜை,
புண்யாகவாசனம்
அனுக்ஜை
அன்னதானம்
முதலியன

........................................

**மாலை 6:00 மணி முதல்**

கடஸ்தாபனம்
யாகசாலாபிரவேஷம்,
1ம் கால யாகபூஜை
அக்னிகார்யம், ஹோமம்
பூர்ணாகுதி, தீபாராதனை
சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை
பாராயணம்
அன்னதானம் முதலியன

# 5-8-2023 சனி

**பகல் வழிபாடு**

காலை 9:00 மணி முதல்

- ✮ 2ம் கால யாக பூஜை
- ✮ ஹோமம் - திரவ்யஹோமம்
- ✮ பூர்ணாகுதி
- ✮ தீபாராதனை
- ✮ 1008 சங்காபிஷேகம்

**மண்டலபூர்த்தி**

- ✮ விஷேட பூஜை
- ✮ அஷ்டோத்ர சதநாமாவளி
- ✮ சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம்
- ✮ அன்னதானம் முதலியன

**இரவு வழிபாடு**

மாலை 5:30 மணி - சாயரட்சை பூஜை
மாலை 6:00 மணி - மங்கள இசை
மாலை 6:45 மணி - இசை நிகழ்ச்சி
மாலை 7:30 மணி - விஷேட பூஜை
இரவு 8:00 மணி - வசந்த மண்டப பூஜை
இரவு 8:30 மணி - விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்
இரவு 9:00 மணி - அன்னதானம்

**மண்டலாபிஷேக தலைமை சிவாச்சாரியார்**

**மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்**

**சிவாச்சாரியார்கள்**

சிவஸ்ரீ. வி. ராமநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. வி. மணிக் குருக்கள்
சிவஸ்ரீ. கா. புவனேந்திரக் குருக்கள்
சிவஸ்ரீ. க. கோபிசர்மா குருக்கள்
சிவஸ்ரீ. சு. கேதீஸ்வரநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. நா. ஹரீந்திரன் குருக்கள்
சிவஸ்ரீ. கெ. வெங்கடரமணசர்மா குருக்கள்

**ஆலய மங்கள இசை கலைஞர்**


சுவாமிமலை A.ராஜேஷ் (நாதஸ்வரம்)
திருமருகல் B.பார்த்திபன் (நாதஸ்வரம்)

மேட்டுப்பாளையம் M.வினோத் (தவில்)
திருநெல்லிக்காவல் A.மணிகண்டன் (தவில்)

**என்றும் அம்பாள் பணியில்**
மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்
பிரதம குருக்கள், அறங்காவலர் சபைத்தலைவர்

# ரணிலும் அமித் ஷாவும்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



அண்மையில் இந்திய இலங்கை தலைவர்களுக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பின்போது இலங்கை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கும் இலங்கைக்கு இடையிலான ராமர் பாலத்தை புதிதாகக் கட்டுவதற்கான முன்மொழிவை முன் வைத்துள்ளார். இது தொடர்பாக சிங்கள பௌத்த தீவிரவாதிகள் ஆங்காங்கே எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.தயான் ஜெயதிலக்க ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். ரணில் இலங்கையை இந்தியாவிடம் விற்கிறார் என்று குற்றம் சாட்டுகிறார்.தயான் காலத்துக்கு காலம் விசுவாசத்தை இடம் மாற்றிக்கொள்பவர்.

ரணில் விக்கிரமசிங்க அந்த யோசனையை இப்பொழுதுதான் முன்வைக்கிறார் என்பதல்ல. 2014 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த காலத்திலும் அவர் அந்த யோசனையை முன்வைத்தார். முன்பு பிரதமராக இருக்கும் பொழுது வைத்த அதே யோசனையை இப்பொழுது நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதியாக இருக்கும்போது முன்வைக்கின்றார். முன்பு பிரதமராக இருந்த பொழுது அவருடைய ஆட்சியை இரட்டை ஆட்சி என்று அழைத்தார்கள். அப்பொழுது சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தார். அரசாங்கம் என்ற வண்டிலை இரண்டு மாடுகளும் இரு வேறு திசைகளுக்கு இழுத்தன. முடிவில் ரணில் விக்கிரமசிங்க, தான் நினைத்த எதையும் செய்ய முடியவில்லை. இப்பொழுதும் அவர் மக்கள் ஆணை இல்லாத ஓர் அரசுத் தலைவர். தனது முன்னாள் அரசியல் எதிரிகளான ராஜபக்சங்களின் தயவில் தங்கியிஇருப்பவர். எனவே இப்பொழுதும் அவர் பாலம் கட்டும் அளவுக்கு பலமான ஒரு தலைவர் அல்ல. ஆனாலும் அவர் அரசுத் தலைவர். இரண்டு தடவைகள் இந்தியாவுக்கு அவர் அந்த ஐடியாவைக் கொடுத்துவிட்டார். எனவே இந்தியாவைப் பொறுத்தவரை அது ஒரு வாய்ப்பு. அவருக்கு மக்களாணை இருக்கிறதோ இல்லையோ ஒரு நாட்டின் தலைவர் கொடுத்த வாக்குறுதி அது என்ற அடிப்படையில் இந்தியா அதை பற்றிப் பிடித்துக் கொள்ள முடியும்.

2004 ஆம் ஆண்டு ரணில் இந்த வாக்குறுதியை வழங்கிய பின் மீண்டும் அவர் 2015 ஆம் ஆண்டு மைத்திரியோடு இணைந்து ஆட்சிக்கு வந்த பொழுது, இந்தியா பாலம் கட்டும் யோசனையை முன்வைத்தது. அப்பொழுது இந்திய அமைச்சராக இருந்த நிதின் கட்டாரி அந்த வேண்டுகோளை விடுத்தார். ஆனால் ரணில் விக்கிரமசிங்க அப்பொழுதும் பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார் .நிறைவேற்று அதிகாரம் மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்தது. எனவே நிதின் கட்டாரியின் வேண்டுகோளுக்கு அவர் பதில் சொல்லவில்லை.

இப்பொழுது ரணில் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி. ஒப்பீட்டளவில் முன்னய இரண்டு ஆட்சிக்காலங்களையும் விட அவர் பலம். ஆனால் மக்கள் ஆணை இல்லை. அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். அதுவரை ராஜபக்சங்களில் தங்கியிருக்க வேண்டும். எனவே இடைப்பட்ட காலகட்டத்தில் இந்தியாவை சமாளிக்கவும் இந்தியாவை தன்பக்கம் வென்றெடுக்கவும் அவர் தன்னுடைய முன்மொழிவை 19 ஆண்டுகளின் பின் மீண்டும் புதுப்பித்து இருக்கிறார். குறிப்பாக கடந்த ஆண்டு முழுவதும் இலங்கை இந்தியாவிடம் கடன் பட்டிருக்கும் ஒரு பின்னணியில், இலங்கை இந்தியாவை நிராகரிக்க முடியாத ஒரு பின்னணியில், அவர் அந்த வேண்டுகோளை முன்வைக்கின்றார்.

அப்படி ஒரு பாலம் கட்டப்பட்டால் தூத்துக்குடியில் இருந்து மன்னாருக்கும் பின்னர் மன்னாரில் இருந்து திருகோணமலைக்கும், கொழும்புக்கும் புகையிரதப் பாதைகள் அமைக்கப்படும் என்றும் நம்பலாம். ரணில் மோடி சந்திப்பின்போது திருகோணமலையை பிராந்தியத்தின் பொருளாதார அச்சாக மாற்றலாம் என்று உரையாடப்பட்டுள்ளது.

ஆனால் அதன்மூலம் இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலமாக மாற்றப்பட்டு விடும் என்ற அச்சத்தை சிங்கள பௌத்தர்கள் மத்தியில் தூண்டி விடுவது இலகுவானது.அதன் பின் பொருளாதாரம் உட்பட எல்லா விடயங்களிலும் இலங்கை அதன் சுயாதீனத்தை இழந்து விடும் என்ற அச்சத்தையும் தூண்டி விடலாம். பாலத்தைக் கட்டினால் இச்சிறிய தீவு இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாகிவிடும் என்ற அச்சத்தை சிங்கள பௌத்தர்கள் மத்தியில் தூண்டி விடுவது இலகுவானது. குறிப்பாக தமிழ் மக்களுக்கு ஒரு புதிய பலம் கிடைத்துவிடும் என்றும் அவர்கள் அஞ்சுவார்கள். சிங்கள மக்களின் இந்த அச்சத்தை முன்வைத்து எதிர்க்கட்சிகள் ரணிலுக்கு எதிராக பெரிய போராட்டங்களை ஒழுங்குபடுத்தும். பிக்குகளையும் தெருக்களில் இறக்கும். அவற்றையெல்லாம் மீறி ரணில் பாலத்தை கட்ட முடியாது.

ஆனால் ஒரு தலைவராக அவர் அந்த ஐடியாவை கொடுத்து விட்டார். அந்த ஐடியா எத்தகையது என்பதற்கு ஒரு கிராமிய உதாரணத்தை இங்கே சுட்டிக் காட்டலாம்.நாய்களுக்கு இடையே சண்டை வரும் பொழுது தோற்றுப் போன நாய் என்ன செய்யும் தெரியுமா? நான்கு கால்களையும் வானத்தை நோக்கி உயர்த்தியபடி தன் வயிற்றுப்பகுதியைக் காட்டியபடி மல்லாக்கக் கிடக்கும். அது ஒரு முழுச்சரணடைவு. நாயின் உறுப்புகளில் மிகப் பலவீனமானது அடி வயிற்றுப் பகுதி. அந்த மென்மையான அடிவயிற்று பகுதியை எதிரியிடம் முழுமையாக ஒப்படைத்து விட்டு நான் மோதலுக்கு தயார் இல்லை எனது பலவீனத்தை நீ தாக்கலாம் என்று சரணடைவது ஏறக்குறைய அதே தற்காப்பு உத்தியை ரணில் நினைவுபடுத்துகிறார். சீன விரிவாக்கத்தில் ஒரு பகுதியாக மாறி இருக்கும் இச்சிறிய தீவை உங்களோடு கொண்டு வந்து இணைக்கிறோம் உங்களுடைய பாதுகாப்பு தொடர்பான அச்சங்கள் எல்லாவற்றையும் போக்க நாங்கள் தயார் என்ற ஒரு செய்தியை அவர் மோடிக்கு வழங்குகிறார்.

அவர் மட்டுமல்ல எந்த ஒரு சிங்களத் தலைவரும் அந்த பாலத்தை கட்டத் துணிய மாட்டார்கள் என்பது இந்தியாவுக்கும் தெரியும். ஆனால் இந்தியாவை பொறுத்தவரையிலும் அது ஒரு பிடி. ஏற்கனவே பலாலிக்கும் மீனம்பாக்கத்திற்கும் இடையிலான விமான போக்குவரத்து முழுமையாக தரம் உயர்த்தப்படவில்லை. தமிழகத்திற்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து தொடங்கப்படவே இல்லை. யாழ்ப்பாணத்தில் இந்தியா கட்டிக் கொடுத்த கலாச்சார மண்டபத்தை முழுமையாக இயக்க முடியவில்லை. சீனாவிடம் இருந்து இந்தியா தன் வசப்படுத்திய தீவுப் பகுதிகளுக்கான மீள புதுப்பிக்கும் எரிசக்தி திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இவ்வாறாக கடந்த 14 ஆண்டுகளில் இந்தியா தமிழ் பகுதிகளோடு தன்னை பிணைத்துக் கொள்ளும் வகையில் முன்வைத்த பிணைப்புத் திட்டங்கள் எதுவும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இப்படிப்பட்டதோர் பின்னணியில் நிலத் தொடர்ச்சியைப் பேணும் வகையில் ஒரு பாலத்தைக் கட்டுவது என்ற முன்மொழிவு எத்துணை கடினமானது என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும். ரணில் விக்கிரமசிங்க தற்காப்பு நிலையில் நிற்பது போல நடித்து இந்தியாவை சமாளிக்க முயற்சிக்கின்றார்.

அவர் அவ்வாறு வாக்குறுதியளித்த சில நாட்களின் பின் கடந்த 27 ஆம் தேதி ராமேஸ்வரத்தில் வைத்து இந்திய உத்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்த ஒரு கருத்தை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். "காங்கிரஸ் மற்றும் திமுகவின் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சி காலத்தில்தான் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை நடந்தது, தமிழக மீனவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள்..." என்று அமித் ஷா கூறியுள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழக அமைப்பாளர் அண்ணாமலை ஒரு நடை பயணத்தை ஆரம்பித்திருக்கிறார். அதைத் தொடக்கி வைத்து ராமேஸ்வரத்தில் உரையாற்றும் பொழுதே இந்திய உள்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அதில் பயன்படுத்திய வார்த்தைக்கு ஆங்கிலத்தில் முதல் அர்த்தம் பெரிய அளவிலான மனிதப் படுகொலை என்பதாகும். எனினும் அதை இனப்படுகொலை என்றும் வியாக்கியானம் செய்யலாம் என்று விவரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். அமைச்சர் அமித் ஷாவின் உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் தமிழில் இனப்படுகொலை என்றே உள்ளது. அமித்ஷா இந்தியாவின் உள்துறை அமைச்சர். இந்தியப் பிரதமருக்கு அடுத்தபடியாக உள்ள அமைச்சுப் பதவி அது. தமது உள்நாட்டுக் கட்சித் தேவைகளுக்காக திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டைப் பலவீனப்படுத்துவதற்காக அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். தமிழகத்தின் ஈழ ஆதரவு வாக்குகளை ஹைஜாக் பண்ணும் நோக்கம் அதில் இருக்கலாம்.

ஆனால் உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக வெளியுகறவுகளோடு சம்பந்தப்பட்ட விடயங்களை பேசும் பொழுது, அதுவும் ஒரு உள்துறை அமைச்சர் பேசும்போது அதற்குரிய அரசியல் பரிமாணத்தை உணர்ந்து பேச முடியும். அமித்ஷா பெரும் மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்ற அர்த்தத்தில் ஒரு வார்த்தையை பயன்படுத்துகிறார். அப்படியென்றால் அது இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடா? அல்லது தமிழ்நாட்டின் உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட ஒரு வார்த்தையா? அதுவும் ரணில் விக்கிரமசிங்க ராமர் பாலத்தை கட்டலாம் என்று சம்மதம் தெரிவித்த பின் பாரதிய ஜனதாவின் பெரும் பிரதானிகளில் ஒருவர் அவ்வாறு கூறுவதன் மூலம் அதையும் ராமேஸ்வரத்தில் வைத்து கூறுவதன் மூலம் இலங்கைக்கு இந்தியா எதையாவது உணர்த்த முற்படுகின்றதா?

இந்த வாரம் தொடக்கம் சீன நிறுவனம் ஒன்று இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் விநியோகத்தில் குதிக்கின்றது. ஏற்கனவே உள்நாட்டு சந்தையில் இந்திய நிறுவனம் இறங்கிவிட்டன. திருகோணமலையில் உள்ளஎண்ணெய்க் குதங்களை இந்தியா உபயோகப்படுத்துவதற்கு கொடுத்தது ரானில்தான். தன்னுடைய முன்னைய ஆட்சி காலம் ஒன்றின் போது அவர் அவற்றைக் கொடுத்தார். இப்பொழுது உள்ளூர் எரிபொருள் விநியோகத்தில் "சினோபெக்" நிறுவனம் 150 எரிபொருள் விற்பனை நிலையங்களை அமைக்கப் போவதாக கூறப்படுகிறது. தனது கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடம் காரணமாக எல்லாப் பேரரசுகளுக்கும் இடையில் இலங்கை சுழித்துக் கொண்டு ஓடுகிறது. இவ்வாறு சுழித்துக் கொண்டு ஓடக்கூடிய தலைவர்களில் அதிகம் தேர்ச்சியானவராக, முதிர்ச்சியானவராக, தந்திரங்கள் மிகுந்தவராக ரணில் விக்ரமசிங்க காணப்படுகின்றார். அந்த முதிர்ச்சி, தேர்ச்சி, தந்திரம் காரணமாகத்தான் அவர் தரைப்பாலம் என்ற தூண்டிலை இந்தியாவை நோக்கி வீசுகிறார். அவர் அவ்வாறு ஒரு தூண்டிலை போட்ட பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் அமித்ஷா ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாக கூறுவது எதை காட்டுகின்றது? அந்த வார்த்தை பிரயோகத்துக்குள் பொதிந்திருக்கும் ராஜதந்திர பரிபாசை எது?



இலங்கை செய்திகள் Sri Lanka News

# 1983 ஆம் ஆண்டு ஜூ லைக் கலவரத்தின்போசிறைகளில் சாவினைத்தழுவிய தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல்

சிறைகளில் சாவினைத்தழுவிய தமிழ் அரசியல் கைதிகளின் நினைவேந்தல் குறித்து குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு இன்றையதினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் சாவினைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் காரணங்களும் காலத்திற்கு காலம் வேறுபடுகிறது.

அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத்தடைச்சட்டம் போன்றவற்றின் கீழ் சந்தேகத்தின் பெயரில் பால், வயது வேறுபாடின்றி கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள், இனத்தின் பெயரில் வஞ்சிக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டவர்களாவர்.

இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் திட்டமிடப்பட்ட சிறைக்கலவரங்களாலும் நோய்வாய்ப்பட்ட நிலையில் போதிய மருத்துவ பராமரிப்பின்றியும் சிறையின் பரிதாபகரமாக நான்கு சுவர்களுக்குள்ளேயே நீதியின்றி கொல்லப்பட்டுள்ளார்கள்.

1983 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட ஜூலைக் கலவரத்தின்போது, வெலிக்கடை சிறையின் அதியுயர் பாதுகாப்புப் பிரிவுக்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உ, வெலிக்கடை சிறையின் அதியுயர் பாதுகாப்புப் பிரிவுக்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட்ட 54 தமிழ் அரசியல் கைதிகள் அரசின் கைக்கூலிகளால் சிறைக் கொட்டடிகளுக்குள்ளேயே கதறக் கதற கொன்றொழிக்கப்பட்டார்கள்.

1987 இல் அதேபோன்று பூசா தடுப்புமுகாமில் 9 தமிழ் அரசியல் கைதிகளும், களுத்துறை சிறையில் 5 தமிழ் அரசியல் கைதிகளும் கொடூரமாக சாகடிக்கப்பட்டார்கள். 2001 ஆம் ஆண்டில் காடையர்கள் நடாத்திய பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம்மீது இனவெறிகொண்ட மிருகத்தனமான தாக்குதலில் 27 தமிழ் அரசியல் கைதிகள் வெட்டியும் குத்தியும் செய்யப்பட்டுள்ளார்கள். 2012 இல் வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் சிறையதிகாரிகளாலும் விசேட அதிரடிப்படையினராலும் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவைமட்டுமல்ல, யுத்த காலங்களில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் நீண்டநெடுங்காலமாக கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களில் பலர் உடல் உள தாக்கங்களாலும் போதிய மருத்துவம் மற்றும் போசாக்கான உணவின்மையாலும் நோய் நொடிகளுக்கு ஆளாகி சிறைக்குள் சாவடையும் பெருந்துயரம் அண்மைக்காலம்வரை இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

இவ்வாறு நீண்டுசெல்கின்ற சிறைக்கொடுமைகளின் பட்டியலில், அங்க இழப்புகளுடனும் விழுப்புன்களுடனும் தப்பி பிழைத்து, இப்பூமிப் பந்தின் எங்கோர் மூலையில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், ஒரு இனச்சமூகத்தின் பெயரில் சிறையிலடைக்கப்பட்டு வஞ்சகமாக கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நினைவுகூரப்பட்டு தமிழர் எம் வரலாற்று ஆவணங்களில் இவர்களது சம்பவங்களும் சாவுகளும் சான்றாதாரங்களாக பொறிக்கப்படவேண்டும்.

அந்தவகையில் , "குரலற்றவர்களின் குரல்" அமைப்பானது ஆண்டுதோறும் வருகின்ற ஜூலை 25 ஆம் திகதியை "உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நாள்" என பிரகடனம் செய்து அதற்கான பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது.

அத்துடன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கு பொருளாதார ரீதியாக நெருக்கடி காணப்படுகிறது. இதனை தீர்ப்பதற்கு எம் நாட்டில் வசிக்கும் உறவுகளும் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் உறவுகளும் பொருளாதார ரீதியாக உதவி செய்வதற்கு முன்வரவேண்டும்.

இதற்காக நாங்களே நேரடியாக களத்தில் இறங்கி ஆராய்ந்து அந்த குடும்பங்களுடன் தங்களை இணைத்து விடுவோம், தாங்கள் அந்த குடும்பங்களுக்கு நேரடியாகவே உதவிகளை வழங்க முடியும்.

(குறிப்பு - கடைசியாக உள்ள இரண்டு பந்திகளும் அந்த அமைப்பின் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. அதையும் உள்ளடக்குமாறு அந்த அமைப்பினால் கூறப்பட்டதன் அடிப்படையில் இணைத்துள்ளேன்)


குரலற்றவர்களின் குரல்
හඬ නැත අයගේ හඬ
The Voice of the Voiceless

31-07-2023

**ஊடக அறிக்கை**

சிறைகளில் சாவினைத்தழுவிய தமிழ்அரசியல் கைதிகள்
நினைவேந்தல் - யூலை-2023

இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் சாவினைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் காரணங்களும் காலத்திற்கு காலம் வேறுபடுகிறது.
அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத்தடைச்சட்டம் போன்றவற்றின் கீழ் சந்தேகத்தின் பெயரில் பால்,வயது வேறுபாடின்றி கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள், இனத்தின் பெயரில் வஞ்சிக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டவர்களாவர்.

இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் திட்டமிடப்பட்ட சிறைக்கலவரங்களாலும் நோய்வாய்ப்பட்ட நிலையில் போதிய மருத்துவ பராமரிப்பின்றியும் சிறையின் நான்கு சுவர்களுக்குள்ளேயே நீதியின்றி பரிதாபகரமாக கொல்லப்பட்டுள்ளார்கள்.

1983 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட ஜூலைக் கலவரத்தின்போது, வெலிக்கடை சிறையின் அதியுயர் பாதுகாப்புப் பிரிவுக்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டிமணி,தங்கத்துரை, ஜெகன் உட்பட்ட 54 தமிழ் அரசியல் கைதிகள் அரசின் கைக்கூலிகளால் சிறைக் கொட்டடிகளுக்குள்ளேயே கதறக் கதற கொன்றொழிக்கப்பட்டார்கள்.

அதேபோன்று, 1987 இல் பூசா தடுப்புமுகாமில் 9 தமிழ் அரசியல் கைதிகளும் , 1997 இல் களுத்துறை சிறையில் 5 தமிழ் அரசியல் கைதிகளும் கொடூரமாக சாகடிக்கப்பட்டார்கள். 2001 ஆம் ஆண்டில் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம்மீது இனவெறிகொண்ட காடையர்கள் நடாத்திய மிருகத்தனமான தாக்குதலில் 27 தமிழ் அரசியல் கைதிகள் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். 2012 இல் வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் சிறையதிகாரிகளாலும் வி'ேட அதிரடிப்படையினராலும் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவைமட்டுமல்ல, யுத்த காலங்களில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள், நீண்டநெடுங்காலமாக கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களில் பலர் உடல் உள தாக்கங்களாலும் போதிய மருத்துவம் மற்றும் போ'ாக்கான உணவின்மையாலும் நோய் நொடிகளுக்கு ஆளாகி சிறைக்குள் சாவடையும் பெருந்துயரம் அன்மைக்காலம்வரை இடம்பெற்றுக்கொண்டுதானிருக்கிறது.

இவ்வாறு நீண்டுசெல்கின்ற சிறைக்கொடுமைகளின் பட்டியலில், அங்க இழப்புகளுடனும் விழுப்புன்களுடனும் தப்பிப் பிழைத்து, இப்பூமிப் பந்தின் எங்கோர் மூலையில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வாறாயினும், ஒரு இனச்சமூகத்தின் பெயரில் சிறையிலடைக்கப்பட்டு வஞ்சகமாக கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நினைவுகூறப்பட்டு தமிழர் எம் வறலாற்றாவனங்களில் இவர்களது சம்பவங்களும் சாவுகளும் சான்றாதாரங்களாக பொறிக்கப்படவேண்டும்.

அந்தவகையில், "குரலற்றவர்களின் குரல்" அமைப்பானது, ஆண்டுதோறும் வருகின்ற ஜூலை -25 ஆம் திகதியை " உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நாள் " என பிரகடனம் செய்து அதற்கான பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது.

-குரலற்றவர்களின் குரல்-

The Organizer
The Voice of The Voiceless

இல.27, புதுமை மாதா கோவில் கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
අංක.27, පුදුමේ මාතා කෝවිල් නැගෙනහිර පාර, කුරුනගර් , යාපනය.
No.27, Puthumai Matha kovil East Road, Kurunagar, Jaffna.
0776979535
thevoiceofthevoiceless2020@gmail.com

# இந்திய வர்த்தக் குழு யாழ்ப்பாணம் வருகை - முதலீடுகள் தொடர்பில் ஆராய்வு





**பு. கஜிந்தன்**

இந்திய வர்த்தக குழுவொன்று வட மாகாண ஆளுநர் திருமதி. பி.எச். எம். சார்ள்ஸ் மற்றும் மாகாண அரசாங்க அதிகாரிகளை திங்கட்கிழமை சந்தித்து மாகாணத்தில் பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தினால் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து, மேம்படுத்தப்பட்ட புவியியல் மற்றும் வர்த்தக இணைப்புகள் கலந்துரையாடப்பட்ட விடயங்களில், இந்திய தொழில்கள் கூட்டமைப்பு மற்றும் விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையின் பல துறை பிரதிநிதிகள், மரபுசார் போன்ற துறைகளில் நிபுணர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களை உள்ளடக்கியது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தளபாடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு கப்பல் போக்குவரத்து, நீர் மேலாண்மை, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகியவை மேலே குறிப்பிட்ட பகுதிகளில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தன.

இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடனான நெருக்கமான ஒத்துழைப்பு இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீள உதவும் அதே வேளையில் பகிரப்பட்ட செழிப்பை உறுதி செய்யும் என ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குறிப்பிட்டார்.

கைத்தொழில், நகர அபிவிருத்தி அதிகார சபை, முதலீட்டு சபை, கூட்டுறவு, பால் பண்ணை மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்திற்கான தமது 3 நாள் விஜயத்தின் போது சம்பந்தப்பட்ட முதலீட்டுத் தளங்களையும் பார்வையிடும் அதேவேளை, வடமாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களைச் சந்திப்பதற்கும் தூதுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம்

**பு. கஜிந்தன்**

தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வேண்டுமென வலியுறுத்தியும்இ தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் கடந்த மே 03 ஆம் திகதி தொடக்கம் எதிர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது.





அதன் தொடர்ச்சியாக இன்று பிற்பகல் வேளை கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. இந்த போராட்டமானது நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணிவரை சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு அண்மையில் இடம்பெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், அக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

அத்துடன் இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய செய்திகள் Canadian News

# தனது பேரன் அவனீஷ் கிரிகரனின் இசை அரங்கேற்றத்தை ரசிகர்கள் முன்னிலையில் சமர்ப்பித்த ஆசிரியை "இசை கலை மணி" பவானி ஆலாலசுந்தரம் அவர்கள்!

அண்மையில் கனடாவின் ஜோர்ஜ் ரவுண் நகரத்தில் இடம்பெற்ற இளம் கர்நாடக சங்கீதக் கலைஞர் அவனீஷ் கிரிகரன் அவர்கள் தனது "அம்மம்மாவும்" இசையாசிரியையுமான "இசைக்கலைமணி" பவானி ஆலாலசுந்தரம் அவர்களின் வழிகாட்டுதலில் பயின்று அற்புதமான தனது இசையரங்கேற்றத்தை அனைவருக்குமாக சமர்ப்பித்தார்.

அரங்கேற்றம் நடைபெற்ற தினத்தன்று அரங்கம் நிறைந்த மக்கள் கூட்டம் நிறைந்திருக்க சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்களட அவர்கள் நடத்திய ஆரம்பப் பூசை மற்றும் அவரது ஆசியுடன் ஆரம்பித்த இசைக்கச்சேரி தொடக்கத்தில் இருந்து முடியும்வரை சபையினரின் பலத்தகரகோசத்தின் மத்தியில் மிகுந்த ஆவலோடு ரசித்த இசை ரசிகர்களின் ஆர்ப்பரிப்புடன் தொடர்ந்தது.



ஜோர்ஜ் ரவுணில் இத்தனை ரசிகப் பெரு மக்களா? என்று அதிசயக்கும் வகையில் அவனீஷ் கிரிகரன் என்ற இந்த 14வயது கர்நாடக இசைச் செல்வனின் அரங்கேற்றப்பெருவிழா கானடா ராக அடதாள வர்ணத்துடன் தொடங்கி வாதாபியில் நிரவல், கற்பனாசுரம், குறைப்பு போன்றவற்றுடன், அமோகமாக நகர்ந்து சென்றது அவனுடைய கற்பனைத்திறனை நினைக்கும் பொழுது மெய்சிலிர்த்தது. ஆனந்தக்கண்ணீரே வந்து விட்டது என்று கூடச் சொல்லலாம்.

தொடர்ந்து தாயே திரிபுரசுந்தரி, கௌளை பஞ்சரத்தினத்தையும் இளம் கர்நாடக சங்கீதக் கலைஞர் அவனீஷ் கிரிகரன் அவர்கள் மிக அழகாகப் பாடினார். அடுத்து சண்முகப்பிரியா ராகாலாபனை, முருகா முருகா என்றபாடல் எல்லோரையும் பக்தியில் ஆழ்த்தியது. நிரவல், கற்பனைசுரம் மேலும் மெருகூட்டியது. மத்தியமாவதி ராக ஆலாபனை சரவணபவ என்ற சவுக்ககால கீர்ததனை நிரவல், குறைப்பு, அவருடைய இசைஞானத்தை சிறப்பாகக் காட்டியது. இந்தநேரத்தில் அவனீஷின் கடின உழைப்பை மெச்சவேண்டும். அடுத்து நளினகாந்தியில் மனவியாலகிஞ் மிகவும் விறுவிறுப்பாகவும், இனிமையாகவும் பாடி சபையோரை உற்சாகப்படுத்தினார் இளம் கர்நாடக சங்கீதக் கலைஞர் அவனீஷ் கிரிகரன் அவர்கள்.

அடுத்து மோகனராகம், தானம், பல்லவி இராகமாலிகைஸ்வரம் மிக அழகாகவும், வெகுசிறப்பாகவும் பாடி சபையோரை ஆனந்தத்தில் மூழ்கச்செய்தார். அதற்கேற்ப பக்கவாத்திய கலைஞர்களின் கடின உழைப்பும் சேர்ந்து மேலும் மெருகூட்டியது. அடுத்து என்ன பாடப்போகிறார் இவர் என்ற ரசிகர்களின் ஏக்கத்தைபோக்க சினம் அடையாதே, என்ற பாடல் இனிமையாகவும் இளைஞர்களிற்கு நல்ல தகவலை புகட்டுவதாகவும் அமைந்தது. மனமே கணமும், சின்னஞ் சிறுகிளியே மற்றும் பாரதியார் பாடலையும் பாடி சபையோரின் கரகோசத்தையும் பாராட்டையும் பெற்றார் அவனீஷ் கிரிகரன். தொடர்ந்து சிவரஞ்சனி தில்லானாவை விறுவிறுப்பாகப்பாடி மங்களத்துடன் கச்சேரியை நிறைவு செய்தானர்.



அவனீஷ் கிரிகரன்அவர்களின் குரல்வளமும், மனத்தைரியமும், சாந்தமான முகமும் எல்லோரையும் கவர்ந்தது. மாணவர்களும், பெற்றோர்களும் சேர்ந்து வந்தவர்களை ஒருவித குறையும்இல்லாமல் உபசரித்தார்கள் மேலும் பிரதமவிருந்தினரின் நுணுக்கமான இசை விளக்கங்களையும் மிக அவதானமாகக் கவனித்து முழு உருப்படிகளையும் பற்றி மிக அழகாக உரையாற்றினார். இவ்வளவு அழகாக விமர்சனம் செய்த இசைக் கலைஞர் GRS மூர்த்தி அவர்களை உண்மையில் பாராட்ட வேண்டும். மேலும். குருவான அவனீஷ் கிரிகரன் அவர்களின் குருவான "இசைக்கலைமணி" பவானி ஆலாலசுந்தரம் அவர்களின் 40 வருட சதாகான இசைக் கல்லூரியின் இசைப் பயணத்தில் இசைச் செல்வனின் அரங்கேற்றம் பெரிய சாதனை படைத்து விட்டது. என்றும் தொடர்ந்தும் அவனீஷ் கிரிகரன்அவர்களின் கர்நாடக இசைத்துறை முயற்சிகள் வளர வாழ்த்துகிறேன்.





**இசைரசிகன் - மிசிசாகா**




மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## கோடை கால ஒன்றுகூடல் ஒன்றுகூடல்

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா நடாத்தும் கோடை கால ஒன்றுகூடல் **Aug** 12ம் திகதி சனிக்கிழமை காலை 10:00 மணி தொடக்கம் இரவு 08:00 மணி வரை **L'Amoreaux Kids-town Park** ல் **(3159 Birchmount Rd)** நடைபெறும். இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள் மாணவிகள் அவர்தம் வாழ்க்கை துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| சிசி.கணேசலிங்கம் | ராஜு கனகறாஜ் | க.கமல்ராஜ் |
| (416-499-6248) | (416-858-6316) | (416 -8217870) |

(பின் பக்கத் தொடர்ச்சி)

## கனடாவில் அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளர் ஆசி. கந்தராஜாவின் விழா...



மங்கள விளக்கேற்றல் வைபவத்தில் பல அழைக்கப்பட்ட அன்பர்கள் பங்கெடுத்தனர்.

முதலில் வாழ்த்துரைகள் இடம்பெற்றன. முதலில் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களின் எழுத்துவடிவிலான வாழ்த்துரையை தலைவர் திருச்செல்வம் வாசித்தார். தொடர்ந்து உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் வாழத்துரை வழங்கினார்.

தொடர்ந்து நூல் ஆய்வுரையை தமிழ்நாட்டிலிருந்து கனடாவிற்கு வருகை தந்துள்ள முன்னாள் பேராசிரியர் அ.இராமசாமி ஆற்றினார் வெளியீட்டுரையை பேராசிரியர் உ. சேரன் ஆற்றினார். தொடர்ந்து நூல் பற்றிய பார்வை என்னும் தலைப்பில் பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் மற்றும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் அகணி சுரேஸ் ஆகியோர் உரையாற்றினார்கள்.

பதிலுரையாற்றிய எழுத்தாளர் ஆசி கந்தராஜா அவர்கள் தனது எழுத்துல அனுபவம் மற்றும் விஞ்ஞானத்தின்உண்மைகளை இலக்கியங்களில் இணைத்துக் கொள்ளும் தனது முடிவுகள் தொடர்பாக அனுபவங்களை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பில் ஆசி கந்தராஜாவிற்கு பொன்னாடை வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

ஏராளமான நண்பர்கள் மற்றும் கலை இலக்கியவாதிகள் அழைக்கப்பெற்றவர்கள் என அனைவரும் நூல் பிரதிகளை மேடையில் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது வாள்வெட்டு தாக்குதல் – ஒருவர் காயம்!



யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில்திங்கள் அதிகாலை வாள்வெட்டு சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றின் மீது 29ம் திகதி அதிகாலை இரண்டு மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்தவாறு சென்ற நால்வர் தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

இதன்போது வீட்டின் தளபாடங்கள் மற்றும் ஜன்னல்கள் என்பனவற்றை உடைத்து சேதமாக்கியுள்ளதுடன், தங்கி இருந்த மாணவன் ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாண ஆலயத்தில் தேர் திருவிழாவில் தங்க நகைகள் திருட்டு – நான்கு பெண்கள் கைது

**பு. கஜிந்தன்**

யாழ்ப்பாணம் - நீர்வேலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது பெண் ஒருவரின் தாலிக்கொடியைக் களவாடிய சந்தேகத்தில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 4 பெண்களில் இந்தியப் பிரஜை ஒருவரும் உள்ளடங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்த்திருவிழாவில் தண்ணீர் பந்தலில் பானங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோது பெண் ஒருவரின் தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சிலாபத்தைச் சேர்ந்த 26 வயது பெண், வவுனியாவைச் சேர்ந்த 37 வயதான பெண், மாத்தறையைச் சேர்ந்த 28 வயதுப் பெண் மற்றும் 49 வயதான இந்தியப் பிரஜை ஆகியோர் மக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மண்கும்பான் பொது நிர்வாக ஓய்வு விடுதி அருகிலே விசமிகளின் செயலால் தீயில் கருகிய நிழல் தரும் மரக் கன்றுகள்

**பு. கஜிந்தன்**

மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் பல வருடங்களாக, தரவை நிலத்தில் சிறிது சிறிதாக வளர்க்கப்பட்ட மரங்கள் சிலரின் பொறுப்பற்ற செயற்பட்டால் தீயில் முற்றாக எரிந்து இன்று நாசமாகியது.

யாழ்ப்பாணம் - மண்கும்பான் பொது நிர்வாக ஓய்வு விடுதி அருகிலே மிகுந்த பணச்செலவில் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நிழல் தரும் மரங்கள் பொறுப்பற்றவர்களால் எரித்து அழிக்கபட்டுள்ளது.

மேய்ச்சல் தரவை புற்களை மாடுகளுக்கு உணவாக கூடாது என்பதற்காக எரித்து அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள விசமிகளினாலேயே இந்த வேலைசெய்யபட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.



அருகில் அரச பொது நிர்வாக ஓய்வு விடுதி இருந்தும் அங்குள்ள அரச ஊழியர்கள் கண்டும் காணாமலிருப்பது வேதனையளிக்கிறது என மக்கள் தெரிவிக்கின்றனர்.



# மத வெறியை விதைப்போர் தோல்வியே காண்பர் – சரத் பொன்சேகாவுக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் எச்சரிக்கை

**பு. கஜிந்தன்**

மத வெறியை விதைப்போர் தோல்வியே காண்பர் - சரத் பொன்சேகாவுக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் எச்சரிக்கை.

இறுதிப் போரில் படைத்தளபதியாக இருந்து போருக்குப் பின் நாட்டை விட்டு அமெரிக்கா சென்ற சரத் பொன்சேகா, தற்போது இலங்கை சிங்கள புத்த நாடு என்கிறார் - என சிவ-சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

நல்லாட்சி அரசில் சஜித் பிரேமதாசா அமைச்சராக இருந்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் புத்தர் சிலைகளை அமைப்போம் எனக் கொக்கரித்தார்.

கடந்த சில வாரங்களாகவே மேனாள் படைத்தளபதி சரத் வீரசேகரா கொக்கரித்து வருகிறார். இலங்கை சிங்கள புத்த நாடு. தீவு எங்கும் புத்தர் சிலைகளை வைப்போம் என்கிறார்.

போரில் வெற்றிக்குப் பின்னால் மத வெறியே வரலாறு.

மைசூரைக் கைப்பற்றினோம். மதுரையைக் கைப்பற்றுவோம் என 725 ஆண்டுகளின் முன் அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக் கபூர் அதே மத வெறியுடன் தமிழகம் வந்தான்.

இந்துக் கோயில்களை அழித்தான். அங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடித்தான்.

தொடர்ந்து அறுபது ஆண்டுகள் தமிழகத்தில் முகமதியர் ஆட்சி. இந்துக் கோயில்கள் இடிந்தன. மசூதிகள் எழுந்தன. இராமநாதபுரத்தின் பெயரே இலாலாபாத் என மாறியது.

அயோத்தியில் பல்லாயிரம் ஆண்டுத் தொன்மையான இராமர் கோயிலை 400 ஆண்டுகளுக்கு முன்பு இடித்தவன் பாபர். அங்கே மசூதியைக் கட்டினான்.

பாபர் வழிவந்த அவுரங்கசீப் காசியில் அருள்மிகு விசுவநாதர் கோயிலை முற்றாக அழித்து அங்கே மசூதியைக் கட்டினான்.

அலாவுதீன் கில்ஜி, மாலிக் கபூர், பாபர், அவுரங்கசீப் போன்றோர் வரிசையில், போரின் வெற்றியை மத வெறியாக்குகிறார். அந்தப் படைத்தளபதிகளைப் போலவே இந்துக்களை நோக்கிக் கொக்கரிக்கிறார் சரத் வீரசேகரா.

450 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் தென்கோடியில், பல்லாயிரம் ஆண்டு பழமையான, பல்லவர் திருப்பணி செய்த, சீனர் கல்வெட்டு எழுதிய, அருள்மிகு தென்னாவர நாயனார் கோயிலை கத்தோலிக்க மத வெறியோடு இடித்தவன் தளபதி தோமை சொயிசா. அங்கே உலூயிசா தேவாலயத்தைக் கட்டினான்.

416 ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்கத் தளபதி கான்ஸ்டன்டைன் கச்ச தீவில் அருள்மிகு கச்சாபகேச்சரர் திருக்கோயிலைத் தரைமட்டமாக்கினான்.

405 ஆண்டுகளுக்கு முன் இந்து அரசின் சங்கிலி மன்னனைத் தோற்கடித்த கத்தோலிக்க படைத்தளபதி இடி லீவரா யாழ்ப்பாணத்தில் 400 சைவக் கோயில்களை இடித்தான். அங்கே தேவாலயங்களைக் கட்டுவித்தான்.

மன்னாரில் திருக்கேதீச்சரத்தைத் தடயமே இல்லாமல் முற்று முழுதாக அழித்தான்.

தோமை சொயிசா வழியில், கொன்ஸ்டன்டைனின் வழியில் இடி லீவரா வழியில், மத வெறியோடு இந்துக் கோயில்களைத் தாக்கியோர் அழித்தோர் கொக்கரித்தோர் வழியில் போரில் வெற்றி பெற்ற மதகளிப்பில், வெற்றியைக் கொண்டாடும் மெய்சிலிர்ப்பில் இலங்கை, சிங்கள புத்த நாடு என்கிறார் மேனாள் படைத்தளபதி சரத் வீரசேகரா.

வெற்றியும் தோல்வியும் இரவும் பகலும் போல, மாறி மாறி வருவன அறியாரோ, மேனாள் படைத்தளபதி சரத் வீரசேகரா?

போரின் வெற்றிக்குப் பின்னால் நிதானமும் பெருந்தன்மையும் மாவீரன் அலெக்சாண்டருக்கு இருந்தது. இலங்கையில் மாவீரன் எல்லாளனுக்கு இருந்தது.

அத்தகைய நிதானமும் பெருந்தன்மையுமே இலங்கையில் புத்தர் கூறிய அன்பையும் அறனையும் அருளையும் அறிவையும் பெருக்கும்.

இலங்கையின் அழிவுக்கான வாயிலாகப் புத்தர் சிலைகளை, புத்த சமயத்தை, புத்தரின் கொள்கைகளை சரத் வீரசேகரா நஞ்சாக விதைக்கிறார். படு தோல்வியையே காண்பார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் புத்தர் சிலை?



இன்றையதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட வளாகத்தில் புத்தர் சிலை வைத்து, பல்கலைக்கழக வளாகத்தில் பௌத்த கொடிகள் என்பன கட்டப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றதாக அறிய முடிகிறது.



நீண்டகாலமாக, தமிழர் தாயக பகுதிகளில் புத்தர் சிலையை வைப்பது, பின்னர் அங்கு அடாத்தாக காணிகளை பிடித்து விகாரைகளை அமைப்பது போன்ற செயற்பாடுகள் அரங்கேறி வருவது யாவரும் அறிந்த ஒன்றே.

அந்தவகையில் போயா தினமான இன்று பல்கலைக்கழக வளாகத்தில் புத்தர் சிலை வைத்து வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டதாகவும், பின்னர் அந்த புத்தர் சிலை அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இவ்வாறு புத்தர் சிலைகளை கொண்டுவந்து வைப்பதுவும் எடுத்துச் செல்வதுமாக செய்து, பின்னர் ஒரேயடியாக சிலையை வைத்துவிட்டு விகாரை அமைக்கக்கூடிய சூழல் இருப்பதாக பல தரப்பினரும் அச்சம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் எம்மிடம் இருந்து பறிபோகக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த புத்தர் சிலையை பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து வழிபட பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி வழங்கியதா? என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



# கிளிநொச்சியில் சீமெந்து ஆலை அமைப்பதற்கு எதிர்ப்பு

**- எமது செய்தியாளர்**

கிளிநொச்சி பொன்னாவெளியில் சீமெந்து தொழிற்சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டம் ஒன்றை வியாழக்கிழமை (3) தினம் முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளி கிராமத்தில் டோக்கியோ நிறுவனத்தினால் விரைவில் சீமெந்து தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டு வருகின்றது. இதற்காக அப் பகுதியில் ஒரு ஏக்கர் காணியை முதல் கட்டமாக பெற்று அங்கே ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அமைக்கத் திட்டமிடப்படும் சீமேந்து தொழிற்சாலை காரணமாக தமது வளம் சுரண்டப்படுவதுடன் எதிர்காலத்தில் அயல் கிராமங்களின் நிலங்களும் உவராக மாறும் நிலைமையுள்ளதோடு சுவாசம் சார்ந்த பிரச்சனைகளும் ஏற்படும் எனவும் தெரிவித்தே கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு கிராமங்களைச் சேர்ந்த 200ற்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



இவ்வாறு இடம்பெற்ற போராட்டமானது பொன்னாவெளி பொதுநோக்கு மண்டபத்திலிருந்து ஆரம்பித்து சீமேந்து ஆலைக்காக ரேக்கியோ நிறுவனம் ஆய்வுப்பணியை முன்னெடுத்து வரும் இடம் வரை பேரணியாக சென்றது.



ஆய்வு பணிகள் மேற்கொள்ளுகின்ற இடத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணித்தியாலம் வரை இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் மத தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தொடரும் நில அபகரிப்பு : தீவகப் பகுதிகளும் பறிபோகவுள்ளதா?

**- நடராசா லோகதயாளன்**

இலங்கையிலுள்ள தீவகம் முழுவதையும் அதிகார சபை ஒன்றுக்குள் கொண்டுவந்து அனைத்து நிர்வாகத்தையும் கொழும்பின் கீழ் கொண்டு வருவதற்குரிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

த.தே.ம. முன்னணியின் அலுவலகத்தில் வியாழனன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவலை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

"13ம் திருத்தத்தை அமல்படுத்துவதாக கூறி மக்களை ஏமாற்றும் அதே தருணம் இந்த அரசு தீவகம் முழுவதையும் ஒரு அதிகார சபைக்குள் கொண்டுவந்து அனைத்து நிர்வாகத்தையும் கொழும்பின் கீழ் கொண்டு வருவதற்குரிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தீவகத்தின் அதிகார கட்டைமப்பானது மகாவலி அபிவிருத்தியை விட மிக மோசமாக தமிழரின் தலைவிதியை மாற்றியமைக்கக் கூடிய வகையில் கொழும்பால் மட்டும் நிர்வகிக்கக்கூடியவாறானதாக உத்தேச சட்டம் காணப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்காவிற்கு முண்டுகொடுக்கும் தரப்பிற்கு இவ்விடயம் முற்றாக தெரிந்த விடயம். மக்களின் வாழ்க்கையை நடாத்த முடியாதவளவிற்கு மக்கள் அங்கிருந்து இடம்பெயரும் நிலையே உள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சுற்றுலா போன்ற விடயங்களை காட்டி சிங்கள மயமாக்லுக்காகவே பயன்படுத்தப்படுகினது.

தீவகம் இந்திய இலங்கைக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. எனவே அது பேரம் பேசுதல்களுக்காக சிங்களத் தரப்பிடம் இருக்க வேண்டுமென்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்திய ரோலர்கள் எமது கடற்தொழிலாளர்களின் சொத்துக்களை அழித்து தொழில் செய்வதற்கு அவமதித்தலைப் போலவே தீவக கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது" என்று செய்தியாளர்களிடம் கூறினார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

"13ம் திருத்தச்சட்டத்தை அமல்ப்படுத்தல் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி செயலகத்திலிலுந்து மீண்டுமொருமுறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுகப்பட்டுள்ளது. சர்வதேசத்திற்கு தமிழ்மக்களிற்கு தீர்வு வழங்கப்போவதாக கூறி அரசியலமைப்பிலுள்ள 13ம் திருத்தச் சட்டத்தை அமலாக்க பேச்சுவர்த்தை நடாத்துவதானது ஈழத்தமிழர்களை ரணில் விக்கிரமசிங்க கணக்கெடுக்கத் தயாரில்லை என்பதைக் காட்டுகின்றது. இதை தெரிந்துகொண்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழ்த் தரப்புகளின் பேச்சுதலுக்கு வாய்ப்புக்ளை இல்லாமலாக்கி சிங்கள மக்கள் ஏற்றுகொள்ளாத ரணில் விக்கிரமசிங்காவிற்கு முண்டு கொடுப்பதாகவே அமைகின்றது".

சட்டபூர்வமாக ஒன்றுமில்லாத 13ம் திருத்தச் சட்டத்திற்குள் பேச்சுவார்த்தையை முடக்கி அரசாங்கத்திற்கு வெள்ளையடித்து சிங்களமயமர்கலுக்கு அவர்கள் உதவுகின்றனர் என்றார் அவர்.

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர்களின் சுயநிர்ணயத்தை பாதிக்கும் எவ்வித அபிவிருத்திகும் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அதற்கு துணைபோகும் தரப்பினர்களுக்கெதிராக மக்களை அணிதிரட்டுவோம் என்றும் அவர் கூறினார்.

மலையக மக்களின் வருகையின் 200ஆம் ஆண்டை நினைவு கூரும் சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட மக்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கில் கடன் சீரமைப்பு அமைந்துள்ளது. சகல விதத்திலும் எடுத்து நோக்கினால் இந்த ஆட்சி மலையக மற்றும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கான எவ்வாற நீதியையும் வழங்கப்போவதில்லை என்பதுடன் சிங்களவருக்கும் எவ்வித தீர்வையும் வழங்கப் பபோவதில்லை என்றார்.

வடக்கு-கிழக்கில் சமஷ்டிக்கான ஆணையைப் பெற்றவர்கள் 13ம் திருத்தச் சட்டத்திற்குள் முடக்குவதற்கு செயற்படுகின்றார்கள். இத்துடன் மனோ கணேசன் 13ம் திருத்தச்சட்டம் பற்றியும் இந்தியாவின் நிலைப்பாடும் பற்றி கூறிய கருத்தானது மலையக அரசியலை மையமாகக் கொண்டு செயற்படும் மனோ கணேசனேசனுக்கு வடகிழக்கு அரசியல் தன்மை புரியாமலுள்ள விதமே காரணமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்துடன் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் மலையக மக்களின் பங்களிப்பை நினைவுபடுது-கின்றோம். 1983ம் ஆண்டு இடம்பெயர்ந்து வடக்கிற்கு வந்த போது எமது உரிமைப் போராட்டத்தில் இணைந்து பயணித்தனர். அவர்களின் பங்களிப்பு போராட்டத்தில் உச்சமாக இருந்தது.

இதேவேளை எமது கட்சியினுடைய முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ராஜினியுடைய வீட்டினுள் புகுந்த பொலிசார் அவருககு அச்சுறுத்தும் விதமாகவும் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தும் விதமாகும் நடந்துள்ளனர். இது சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது என்றார்.

தற்போது வடகிழக்கிற்கு இடமமாற்றத்தில் வரும் பொலிசார் பொரும்பாலும் தண்டணை முறை இடமாற்றத்தினூடாகவே பணிக்கமர்த்தப்படுகின்றனர். அவர்கள் நீதியின்பால் செயற்படாமல் மக்களின் காசை கெள்ளையடித்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கலாச்சாரத்ததையே தொடரந்துகொண்டிருக்கின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## இலண்டன் பிபிசி வானொலி முன்னாள் ஒலிபரப்பாளரும் சட்டத்தரணியுமாகிய விமல் சொக்கநாதன் அகால மரணத்தைத் தழுவினார் என்ற சோகமான செய்தியை பகிர்ந்து கொள்கின்றோம்




உலகப் புகழ்பெற்ற இலண்டன் பிபிசி வானொலி முன்னாள் ஒலிபரப்பாளரும் உலகெங்கும் வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கட்டுரைகளை எழுதிவந்தவரும் தொழில் ரீதியாக சட்டத்தரணியுமாகிய விமல் சொக்கநாதன் அவர்கள் அகால மரணத்தைத் தழுவினார் என்ற சோகமான செய்தியை அனைவரோடும் பகிர்ந்து கொள்கின்றோம்.

கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து தனது புத்தகங்களின் வெளியீட்டு விழாக்களை வெற்றிகரமாக நடத்தியும் எதிர்வரும் ஒக்டோபர் 14ம் திகதி சனிக்கிழமை கனடாவிலும் தனது நூல்கள் சிலவற்றை வெளியிடும் முயற்சியில் இறங்கி அதற்கான ஏற்பாடுகளை செய்வதில் கனடாவில் உள்ள பல நண்பர்கள் பலரோடு கலந்துரையாடல்களை நடத்தி வந்த நிலையில் எதிர்பாராத விதமாக நாம் நண்பர் விமல் சொக்கநாதன் அவர்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவரது இழப்பு உலகெங்கும் வாழும் எம் போன்ற அவரது நண்பர்கள் உறவினர்கள். நேயர்கள். வாசகர்கள். அபிமானிகள். பத்திரிகையாளர்கள். எழுத்தாளர்கள். ஒலிபரப்பாளர்கள் என இலட்சக் கணக்கானவர்களின் இதயங்களை தாக்கியிருக்கும் என்பதையும் நாம் அறிவோம்.

அவரது இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரங்கள் எமக்கு கிடைக்கும் பட்சத்தில் அனைவரும் அறியும் வகையில் நாம் பதிவு செய்வோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**கனடா உதயன் ஆசிரிய பீடம்**




SULLIVAN AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
2023
POWERED BY
FREE ADMISSION!
AUGUST
26 & 27
TAMIL FEST
2023
MARKHAM RD
(BETWEEN MCNICOLL AVE.
& PASSMORE AVE.)
Largest Tamil Street Festival outside of Asia
FOR MORE INFORMATION PLEASE CONTACT
THE CANADIAN TAMIL CONGRESS AT
416-240-0078
INFO@CANADIANTAMILCONGRESS.CA
WWW.TAMILFEST.CA
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
POWERED BY
HOSTED BY
Canadian Tamil Congress
Congrès Tamoul Canadien
SUPPORTED BY
Canada
TORONTO
MARKETING PARTNER
PRINT FAST
ZONE SPONSORS
MEDIA SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
NAVA WILSON
TD
VIBRANT HOSPITALITY GROUP
ATN
metroland

# கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada
Tel: 416-321-6104 | Fax: 416-321-7557
www.ayyappan.com

## கொடியேற்ற மஹோற்சவ விஞ்ஞாபனம் (ஐயப்பன்) ஐயனார் அலங்கார உற்சவம் (அனலைதீவு ஐயனார் உற்சவ காலம்)

கொடியேற்றம் (ஐயப்பன்)
23-07-2023 ஞாயிறு
காலை 11:00 மணி

ஐயனார் உற்சவ ஆரம்பம்
28-07-2023 வெள்ளி

தேர்த்திருவிழா
(ஐயப்பன், ஐயனார்)
05-08-2023 சனி

அபிசேகம்: காலை 7:00 மணி
பூசை: காலை 8:00 மணி
வசந்தமண்டப பூசை: காலை 9:00 மணி
தேர் புறப்பாடு: 11:00 மணி
பச்சை சாத்தல்: 12:00 மணி



சப்பறம் (ஐயப்பன், ஐயனார்)
04-08-2023 வெள்ளி
மாலை 7:30 மணி

தீர்த்தம் (ஐயப்பன், ஐயனார்)
06-08-2023ஞாயிறு

அபிசேகம்
காலை 8:30 மணி
வசந்தமண்டப பூசை 10:30 மணி
தீர்த்த உற்சவம் 11:00 மணி

பூங்காவனம்:
ஐயனார் திருக்கல்யாணம்
07-08-2023 திங்கள் மாலை

வைரவர் மடை
08-08-2023 செவ்வாய் மாலை

## கிரியா கால நேர விபரங்கள்

| காலை | | மாலை | காலை | | மாலை |
|---|---|---|---|---|---|
| 7:00 | நடை திறத்தல் | 4:30 | 10:30 | யாகபூசை, ஸ்தம்பபூசை | 7:00 மணி |
| 8:00 | பூசை | 5:00 | 11:30 | வசந்த மண்டப பூசை | 7:45 மணி |
| 9:00 | ஸ்நபனாபிசேகம் | 5:30 | 12:00 | சுவாமி வீதி உலா | 8:30 மணி |
| 10:00 | பூசை | 6:30 | 1:45 | நடை சாத்தல் | 9:15 மணி |

விழா காலங்களில் அடியார்கள் தவறாது ஆலயத்திற்கு வருகை தந்து விழாக்களைச் சிறப்பித்து ஐயப்பனின் திருவருள் பெற்றுச் செல்லுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். உற்சவத்திற்குரிய அபிஷேக, பூசைத் திரவியங்கள் ஆகியவற்றை அடியார்கள் தந்துதவலாம்.

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1059



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருமங்கலாய் சிவன் கோவில்
## திருக்கரைசையம்பதி, திருகோணமலை

*“ வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி*
*மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி*
*ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி*
*ஓவாத சத்தத் தொலியே போற்றி*
*ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி*
*ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி*
*காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி. ”*

தலபுராணம் என்பது வரலாற்றிற்குச் சமமானதாகக் கருதக்கூடிய பல விடயங்களைத் தன்னகத்தே அடக்கிக் காணப்படும். ஆலயத்தின் அமைவு, ஆலயத்தின் சிறப்பு, ஆலயம் சார்ந்த நிலப்பரப்பு, அந்நிலப்பரப்பிலே வாழ்ந்த மக்களின் பண்பாடு, நாகரீகம், போன்ற பல விடயங்களைத் தலபுராணங்கள் தன்னகத்தே கொண்டு காணப்படும். இத்தலபுராணங்களை கற்றறிந்த சான்றோர்கள் இயற்றுவதால் அவற்றிலே தெளிவு காணப்படும்.

திருமங்கலாய் சிவன்கோவில் என்ன காரணத்தாலோ அழிவுற்றபோதிலும், இவ்வாலயத்தின் ஆரம்பமும், அதன் சிறப்பும் இவ்வாலய தலபுராணமாகிய திருக்கரைசைப் புராணத்தின் மூலம் கிடைத்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். புராணம் என்றால் கட்டுக்கதை என்ற கருத்து மக்களிடையே நிலவுகின்றது. இக் கருத்து தவறானதாகும். புராணம் என்பது புராதன-மானது. தொன்மையானது என்ற கருத்துடையது.

வரலாறு உள்ளதை உள்ளபடி உரைக்கும்போது, புராணங்கள் வரலாற்றோடு வர்ணனைகளையும் சேர்த்து சேர்த்துக்கூறுவதால், மக்களிடையே இவ்வாறான எண்ணம் தோன்றியிருக்கலாம். இவ்வாறான தலபுராணங்களைப் பேணிக்காப்பது, சைவமக்களுடைய ஆதி வாழ்விடங்களையும், அவர்கள் பேணி வளர்த்த ஆலயங்களையும் அதன் சிறப்புக்களையும் அறிய வாய்ப்பளிக்கும். திருமங்கலாய் சிவன்கோவிலுக்குரிய திருக்கரசைப்புராணம், கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல ஆலயங்களிலே இன்றும் படிக்கப்பட்டு வருகின்றது.

திருமங்கலாய் சிவன்கோவில் தலபுராணக் குறிப்புக்களிலிருந்து திருமங்கலாய் சுவாமி பெயர் கந்தலிங்கேஸ்வரர் என அறியமுடிகின்றது.. இவ்வாலயத்திலே முக்கியமான இரு தீர்த்த தினங்கள் காணப்பட்டுள்ளன. திருமங்கலாய் சிவன் கோவிலில் இருந்து சுவாமி எழுந்தருளி, மகாவலிகங்கையில் ஆடி அமாவாசை அன்றும், மகரமாதத்திலும் தீர்த்தமாடுவார். இவ்வாலயம் அழிவுற்றபின்னர் இந்த வழமையின்படி கங்குவேலி சிவனும், தம்பலகாமம் கோணேசரும் மகாவலி கங்கையிலே தீர்த்தமாடுவது வழக்கம்.

திருமங்கலாய் சிவன்கோவிலுக்குரிய திருக்கரைசைப் புராணம் இவ்வாலயத்தின் தொன்மையையும், சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களிலே தமிழ் மன்னர்கள் பன்னெடுங் காலமாத்திற்கு முன்பே அரசாட்சி செய்துள்ளார்கள் என்ற செய்தியை திருக்கரசைப் புராணம் கூறுகின்றது. அக்காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் மன்னர்களும், யாத்திரிகர்களும், வியாபாரிகளும் சர்வசாதாரண-மாகச் வருவதும் போவதும் நிகழ்ந்துள்ளது.

இந்தியாவிலிருந்து மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிங்கபூதரன் என்பவன், அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வந்தான். தற்போது இலங்கைத்துறை என்று சொல்லப்படும் இடத்தில் கப்பலில் வந்திறங்கினான். அப்போது இப்பிரதேசத்தை எழில்வேந்தன் என்னும் அரசன் ஆண்டுகொண்டிருந்தான். இவனுடைய மகள் பெயர் திருமங்கை. திருமங்கையை சிங்கபூதரன் திருமணம் செய்து, எழில்வேந்தனுக்குப் பின், திருக்கரைசையம்பதியில் அரண்மனை அமைத்து ஆட்சி செய்துள்ளான். அரண்மனை அமைத்த இடத்திற்கு இரணியன்குன்று என்று பெயர். இப்பெயர் திரிபுபட்டு இரணியன் கொட்டு என்று வழங்கப்படுகின்றது. சிங்கபூதரனும், திருமங்கையும் சோந்து அமைத்த கோவிலே திருமங்கலாய் சிவன்கோவில் என்று வழங்கபப்ட்டது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையே பொருந்திச் சிறந்து விளங்கிய திருமங்கலாய் சிவன்கோவில், மகாவலிகங்கையின் பெருவெள்ளப் பெருக்கினால் அழிந்திருக்கலாம் என்றும், பின்னர் காடுவளர்ந்து மூடியிருக்கலாமென்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. இவ்வாறு காடு வளாந்து மூடியிருந்த காலத்தில், ஸ்ரீ தியாகராசக் குருக்கள் என்பவர், ஆலயத்திலிருந்த லிங்கத்தையும், அம்பாளையும் எடுத்துவந்து வெருகலம்பதியில் ஒரு சிறு கோவில்கட்டி வணங்கி வந்துள்ளார். இக்கோவிலும் பராமரிப்பாரின்றி அழிவுற்றிநிலையில், இந்தத் திருவுருவங்கள் மூதூரிலுள்ள பிள்ளையார் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்றடி உயரமான லிங்கமும், அம்பாளும் சிறிது பின்னப்பட்டிருந்தபோதிலும், மிக அழகிய திருவுருவங்களாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணியொன்று கங்குவேலிச் சிவன் கோவிலில் இருக்கின்றது.

வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயம், பழுதடைந்து காணப்படுகின்றது. ஆயினும் ஆலயச் சிதைவுகளைத் தேடியெடுத்து ஒழுங்குபடுத்திப் பாதுகாத்த பெருமை திரு. க.செல்லத்துரை சாமியாரைச் சார்ந்ததாகும். ஒரு காலத்தில் வரலாறு மீண்டு தமிழ்மக்கள் கோலோச்சும் காலத்தில், வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்கள் யாவும் தமது உன்னத நிலையை மீண்டும் பெறும் வாய்ப்பு ஏற்படும். “ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும், வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்” என்பதற்கிணங்க, “குடைநிழல் இருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்து நண்ணினும் நண்ணுவர்” என்பதை மனதிருத்தி, எமது வரலாறு மீண்டும் எழுச்சிபெற்று, அதன் மூலம் தமிழ் மக்கள் வாழ்வும், அவர்கள் பொற்றிப் பேணும் ஆலயங்களும் புதுப்பொலிவு பெறும். இது காலத்தின் நியதி என்பதை மனதிருத்திருத்துவதே பொருத்தமுடையது.

**- வளரும்...**




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# மலையக மக்களின் உரிமைகள் விடயத்தில் எமக்கு தீவிர கரிசனையுண்டு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



**- யாழ். பேரணியில் நிரோஷ்**

மலையக தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில் கரிசனை வடக்குக் கிழக்கு மக்களிடத்தில் மேலும் அதிகரித்துள்ளதையே இப்பேரணி உணர்த்துவதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் யாழ். மாவட்ட பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மாண்பு மிகு மலையக மக்கள் எழுச்சிப் பயணத்தின் யாழ்ப்பாணப் பேரணி வியாழக்கிழமை யாழ் நகரில் (03.08.2023) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயேஇவ்வாறு தெரிவித்தார்.

மேலும், மலையக மக்கள் நாட்டின் பொருளாதாரத்திற்காக முதுகெழும்பாக உழைத்துள்ளனர். ஆனால் இந் நாட்டில் அதிகம் அரசியல் சமூக பொருளாதார கலாச்சார உரிமைகள் விடயத்தில் மறுக்கப்படும் ஓர் தரப்பாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குடியிருப்பதற்கு ஒரு துண்டு நிலத்திற்காகப் போராடுகின்றனர். ஒரு துண்டு நிலத்தினை பகிர்ந்தளிப்பதற்கு மாறிமாறி ஆட்சிக்கு வந்த தரப்புக்கள் ஏமாற்றியே வருகின்றன. அதுபோல் அவர்களுடைய ஊதியம் தொடர்பான பிரச்சினை தொடர் ஏமாற்றத்திற்குரிய ஒன்றாகவுள்ளது. உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் குறைந்தபட்ச பொதுநலப் பண்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கூட ஏங்கவேண்டியுள்ளது. போராடவேண்டியுள்ளது. பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களது உரிமைகள் நிலைநிறுத்தப்படாமல் உழைக்கும் மக்களது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், தொழில் பாதுகாப்பு என அத்தனையும் கேள்விக்குள்ளாக்கப்பட்ட நிலையிலேயே மலையக மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பதையிட்டு நாடே வெட்கித் தலைகுனிய வேண்டும்.

பத்து அடி லயன் அறைகளில் குடும்பமாக வாழ முடியாது இன்றும் திண்டாடுகின்றனர். சாதாரணமாக தோட்டங்களில் தாய் மார் பிரசவத்திற்குச் செல்வதற்கே கிராமத்தில் வீதிகள் இல்லை. உண்மையில் மலையக மக்கள் மீது பிரயோகிக்கப்படும் சுரண்டல்கள் போன்று பொருளாதாரச் சுரண்டல் நிலைமையினை இலங்கையில் வேறு எந்தச் சமூகங்களும் எதிர்கொள்ளவில்லை என்ற கசப்பான உண்மையினைச் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். நாங்கள் அவர்களது துன்ப துயரங்களை நேரில் பார்க்கின்றோம்.

இந் நிலையில் மலையக மக்கள் தொடர்பாக விட்டுக்கொடுப்பின்றி செயற்படவேண்டிய பொறுப்பு வடக்குக் கிழக்கில் எமக்கு உள்ளது.

இச் சுரண்டலின் மலையக பிள்ளைகள் கொழும்பிலும் நாட்டின் பிறபாகங்களுக்கும் வீட்டுப்பணிப்பெண்களாகவும் இளைஞர்கள் பலர் கடைகளுக்கும் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதேவேளை மலையகத்தில் இவ்வாறாக ஒடுக்குமுறை நிலவும் போதும் அதையும் மீறி பல்துறைகளிலும் இளைய தலைமுறையொன்று முன்னேற்றம் கண்டு வருகின்றது. இப் பெருமையினையும் நாம் கொண்டாடுகின்றோம். வ்வாறு தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை வெளிக்கொண்டு வந்ததாலேயே நிலக்சன் படுகொலை செய்யப்பட்டார்



**- நினைவேந்தலில் நிரோஷ் தெரிவிப்பு**

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் அவர்களது அரசியல் அபிலாசைகளையும் உண்மைகளையும் வெளியுலகிற்குக் கொண்டு சென்றதன் காரணமாகவே தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலைகளுக்கு அரசு முழுப்பொறுப்புடையது. அதனால் எந்தப் படுகொலைகளுக்கும் நீதி வழங்கப்படவில்லை என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்ததார்.

சாளரம் பத்திரிகையின் ஆசிரியரும் முன்னாள் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவருமான சகாதேவன் நிலக்சனின் 16 ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாண ஊடக அமையத்தில் (0108.2023) செவ்வாய்க்கிழமை சிரேஷ்ட ஊடகவியலாளர் இ. தயாபரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், சாகதேவன் நிலக்சன் படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏராளமான பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் வீதிகளில் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்கள் யாரும் ஆயுதப் போராட்டத்தில் தொடர்புபட்டவர்கள் அல்ல. ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் மனித உரிமை மீறல்களுக்காகவும் துணிந்து செயற்பட்டவர்கள்.

இவ்வாறாக படுகொலை செய்யப்பட்டவர்கள் முழுமையான அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கடுமையான இராணுவ பிரசன்னமுள்ள பகுதிகளிலேயே படுகொலைசெய்யப்பட்டனர். இவ்வாறாக நடைபெற்ற படுகொலைகளின் உண்மையும் ஆரயப்படவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் இல்லை. அரசு பொறுப்புச் சொல்லவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களைக் கூட பரிகாரங்கள் ஏற்படுத்தாது சகித்துக்கொள்ளுங்கள் எனக் கூறி வேடிக்கையான நல்லிணக்கம் பற்றிக் கூறப்படுகின்றது.

இதில் ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற பணியாளர்கள், மனித உரிமைகளுக்காக செயற்பட்டவர்கள்இ மாணவர் சங்க செயற்பாட்டாளர்கள் என திறமையான இளைய தலைமுறையை நாம் இழந்துள்ளோம். இவர்கள் விடயத்தில் இன்றும் நீதிக்காக ஏங்குகின்றோம். நடைபெற்ற அநியாயங்களுக்கு பொறுப்புக்கூரல் இன்றி இரண்டு மூன்று தசாப்தங்கள் கடந்துவிட்டன.

இக்காலப்பகுதியில் நியாயத்திற்காக போராடும் தாய்மாரும் உறவினரும் சாட்சியங்களும் உடல் உள தாக்கங்கள் மற்றும் வயது முதுமை காரணமாக மரணித்துபோகின்றனர். இவ்வாறே மகனுக்கான நீதிக்காக ஏங்கியவாறே நிலக்சனின் தாயும் திடீர் என மரணித்தார். இவைகள் நடைபெற்ற படுகொலைகளை மறைப்பதற்கும் போர் மற்றம் போரின்பின்பான பாரதூரமான மனித உரிமை மீறல்களை மறைப்புச் செய்து அரசை வெள்ளையடிப்பதற்கான அணுகுமுறைகளே ஆகும். இவ்வாறு தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

*இந்த அறிக்கையானது, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13வது திருத்தம், நீண்டகாலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் வெளியிடப்படுகின்றது.*

*தமிழ் மக்கள், 1956 ஆம் ஆண்டு முதல், வடக்கு - கிழக்கில் சம்'டி ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கான ஆணை-யை, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளனர். 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது, இதில் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தது.*

*1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் விளைவாக இந்தியா வழங்கிய அனுசரணைகளை இலங்கை ஏற்றுக்கொண்டது முதல் கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசாங்கம் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. மிக சமீபத்தில் கூட, இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், இலங்கை அரசு தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்திற்கான மறுகட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லும் என்ற இந்தியாவின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருந்தார். மேலும் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும், இலங்கையின் தமிழ் சமூகத்திற்கு சுயமரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யவும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என்றும் அவர் தனது நம்பிக்கையை தெரிவித்திருந்தார். பின்னர், செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் இந்திய வெளியுறவு செயலாளர் பின்வருமாறு கூறியிருந்தார்.*

*"ஒன்றுபட்ட மற்றும் வளமான இலங்கை எனும் கட்டமைப்பிற்குள் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள், நிச்சயமாக சமத்துவம், நீதி மற்றும் சுயமரியாதைக்கான அபிலாஷைகளை நிவர்த்தி செய்யும் அரசியல் தீர்வை இந்தியா தொடர்ந்து எதிர்நோக்குகிறது என்ற உண்மையின் அடிப்படையில் இதைவிட வெளிப்படையாக எதுவும் இருக்க முடியாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் என்பன இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கும், அதனை எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகளாகும் என பிரதமர் மேலும் தெளிவாகக் கூறியிருந்தார். இதுவே எங்களின் நிலையான நிலைப்பாடாக இருந்து வருகின்றதோடு, இது இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போதும் முன்வைக்கப்பட்டது".*

*1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசியலமைப்பின் 13வது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்ல. ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியபிரமாணம் செய்துள்ளோம். இவ்வாறு அரசியல்மைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாதது விடுவது என்பது அரசியலமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும். எனவே எமது அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமுல்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம். எனினும் அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யாது. அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை பல்வேறு செயல்முறைகள் மூலம் அர்த்தமுள்ளதாக்க வேண்டும் என்பது,மங்கள முனசிங்க தெரிவுக்குழுவில் இருந்து 2016 - 2019 வரை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இடம்பெற்ற அரசியலமைப்பு பேரவை வரை, மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' வின் பதவிக்காலத்தின் போது இந்தியாவுடன் குறைந்தபட்சம் மூன்று தனித்தனி கூட்டு அறிக்கைகள் மூலம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள சட்ட காலதாமதங்கள் காரணமாக குறைபாடுகளுடன் இயங்கி வந்த ஒன்பது மாகாண சபைகள் செயலிழந்துள்ளன. பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான தேர்தல் சீர்திருத்தத் தெரிவுக்குழு கடந்த வருடம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், மூன்று வருடங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதாக இனங்கண்டு முன்பு இருந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என பரிந்துரை செய்ததோடு இதை செயல்படுத்த தகுந்த சட்டம் இயற்ற வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இந்த பரிந்துரைகளுக்கு இணங்க நான் ஒரு தனி நபர் சட்டமூலம் ஒன்றினை தயாரித்து முன்வைத்திருந்தேன், அதன் முதல் வாசிப்பு முடிந்த நிலையில் இந்த சட்டமூலம் உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் இதில் உள்ள சில சரத்துகளில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களைச் செய்தால், அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

*2022 டிசம்பர் 10 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது சர்வகட்சி மாநாட்டிலேயே மாகாண சபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது. அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம். ஜனாதிபதியுடன் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், 2023 ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் மீண்டும் எமது நிலைப்பாட்டை வலியுறுத்தினோம். கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதி நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டிலும் இதே நிலைப்பாட்டையே தெரிவித்தோம். இவ்விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை அவ்வாறே உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு அழைப்பு விடுப்பதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. மேலும் கூறுவதானால் ஒன்று இல்லாது மற்றொன்றில் எவ்வித அர்த்தமும் இல்லை.*

**ம. ஆ. சுமந்திரன்**
**பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாண மாவட்டம்**
**31 ஜூலை 2023**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாணஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது



யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 1ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில், ஊடகவியலாளர் நிலக்சனின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் சகாதேவன் நிலக்சனின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து நிலக்சனை நினைவுகூர்ந்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடகக்கற்கை மாணவனும் சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ்ப்பாண மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன், 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தனது வீட்டில் இருந்த சந்தர்ப்பத்தில் அதிகாலை 5 மணியளவில் ஆயுததாரிகள் நிலக்சனை வீட்டிற்கு வெளியே அழைத்து, அவரது பெற்றோர் முன்னிலையில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சமஸ்டி வழங்கப்படா விட்டால் சிங்களவர் வெளிநாடுகளுக்கு ஓடுவதை விரைவில் பார்ப்பார் கம்மன்பில — சபா குகதாஸ்



**பு. கஜிந்தன்**

சமஸ்டி தீர்வை தொடர்ந்து வலியுறுத்தினால் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என வழமையான பாணியில் இனவாதத்தை ஊடகங்களில் கக்கியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

தென்னிலங்கையில் குறிக்கப்பட்ட சிங்கள மக்களை தங்கள் பக்கம் திருப்பி தங்கள் பாராளுமன்ற கதிரைகளை தொடர்ந்தும் சூடாக்க இனவாத கருத்துக்களை கம்மன்பில உள்ளிட்ட சிலர் பயன்படுத்த முனைவதன் வெளிப்பாடே தமிழர்களின் அபிலாசைகளை, ஜனநாயக வெளிப்பாடுகளை இனவாதமாக சித்தரித்தல்.

இது 1956 ஆண்டில் இருந்து இன்றுவரை இலங்கைத் தீவில் தொடர்கிறது. இதன் அறுவடையை 2019 ஆண்டின் பின்னர் நாட்டு மக்கள் அனைவரும் மிகப் பாரிய பொருளாதார பின்னடைவாக சந்தித்த கள யதார்த்தம் நாட்டை தொடர்ந்து மிகப் பாரிய பின்னடைவுக்குள் தள்ளியுள்ளது.

நாடு மீண்டெழ முடியாத நிலைக்குள் பொருளாதாரம் முடங்கி விட்டது. பிச்சை எடுத்தும் இருக்கும் நிலபுலங்களை விற்றும் படம் காட்டுகிறார் ஜனாதிபதி ரணில். இந்த நிலையில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என தமிழர்களை மிரட்டுவது கம்மன்பிலவின் அரசியல் வங்குறோத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நாட்டின் இனப்பிரச்சனைக்கு சிங்கள ஆட்சியாளர் நிரந்தர தீர்வாக சமஸ்டியை கொடுக்க தவறினால் இன்னும் சிறிது காலத்தில் அன்று தமிழர்கள் சாரை சாரையாக வெளிநாடுகளுக்கு ஓடியது போல தென்னிலங்கையில் சிங்களவர் வெளியேறுவதை கம்மன்பில பார்ப்பார்.

தமிழ் மக்கள் 1952 ஆண்டில் இருந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் தங்களது அபிலாசையாக ஜனநாயக ரீதியாக சமஸ்டி தீர்வு வேண்டும் என்றே கூறுகின்றனர். வடகிழக்கு மாகாணங்களில் பெரும்பாண்மை தமிழ் மக்களின் ஆணை வழங்கப்பட்டதை நிராகரிக்கும் சிங்கள பேரினவாத ஆட்சியார்களின் எதேச்சதிகாரம் ஒட்டுமொத்த நாட்டையும் மீண்டெழ முடியாத நிலைக்கு தள்ளியுள்ளதை வெளிக்காட்டும் குறியீடாக தென்னிலங்கை சிங்களவர்கள் விரைவில் நாட்டை விட்டு ஓடுவார்கள் - என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை பாராளுமன்றத்தில் சுதந்திர கட்சி வழங்கும் — பிரதித்தலைவர் அங்கஜன் எம்.பி

**பு. கஜிந்தன்**

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் முன்னெடுக்கப்படுகின்ற 13வது திருத்தத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான முழுமையான ஒத்துழைப்பை பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வழங்கும் என சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13வது திருத்தம் தொடர்பான விவாதம் ஒன்றை பாராளுமன்றத்தில் நடத்த உள்ளமை தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு சிறிலங்கா சுதந்திர கட்சியை பொறுத்த வரை அன்றிலிருந்து இன்று வரை சாதகமான நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நானும் கலந்து கொண்டோம்.

எமது கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமிடம் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எமது கட்சி வெளிப்படைத் தன்மையுடன் கருத்துக்களை முன்வைத்ததுடன் கட்சியின் விருப்பத்தையும் தெரிவித்தார்.

ஆனால் 13வது திருத்தத்தில் என்னென்ன விடயங்களைப் பற்றி பேசப் போகிறோம் அல்லது நடைமுறைப்படுத்தவுள்ளோம் என தெளிவான விளக்கத்தை சமர்ப்பி யுங்கள் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

30 வருட யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு இதுவரை முன்வைக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைக்கு 13வது திருத்தம் முழுமையான தீர்வை முன்வைக்காத நிலையில் ஆரம்ப புள்ளியாக முன்னோக்கி செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

ஏனெனில் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13வது திருத்தம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13வது திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தெரியவரும் நிலையில் எமது கட்சியின் தலைவர் முன்னர் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் எமது செயற்பாடுகள் பாராளுமன்றத்தில் அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் — வல்வைப் படுகொலைகளின் 34ம் ஆண்டு நினைவேந்தல் புதன்கிழமையன்று அனுஸ்டிக்கப்பட்டது



**பு. கஜிந்தன்**

1989ம் ஆண்டு ஓகஸ்ட் 2ம் திகதி வல் வெட் டித் துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்திய இராணுவத்தால் 63 தமிழ் பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டனர்.

அவர்களை நினைவுகூரும் நினைவேந்தல் அன்றையதினம் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.



இதன்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி, அக வணக்கத்துடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதில் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவுகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், த.தே.ம.மு பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் முக்கியஸ்தர் காண்டீபன், கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் அளவுக்கு அதிகமான ஹெரோயின் பாவனையால் இளைஞன் மரணம்!

**பு. கஜிந்தன்**

அதிக ஹெரோயின் பாவனை காரணமாக யாழ்ப்பாணமனத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது. குருணாகல் பகுதியைச் சேர்ந்த லாபீர் றைசூஸ் சமன் என்ற 27 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், மின்சார உபகரண விற்பனைக்காக குறித்த இளைஞன் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார். இந்நிலையில் கல்வியங்காட்டில் அவர் நேற்றையதினம் உபகரணங்களை விற்பனை செய்துகொண்டிருந்தவேளை மயங்கி விழுந்துள்ளார்.

இதன்போது அவருடன் சேர்ந்து வியாபாரத்தில் இளைஞன் அவரை விடுதிக்கு அழைத்துச் சென்றார். பின்னர் அங்கிருந்து அழைத்துச் சென்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை நேற்றையதினம் 2.30 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மீதான மரண விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். அவர் ஹெரோயினை பாவித்துவிட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார், அத்துடன் அதிக ஹெரோயினை பாவித்தமையால் குறித்த மரணம் நிகழ்ந்துள்ளதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ரொறன்ரோ



3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch)

## ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்
## 11.08.2023 வெள்ளி முதல் 20.08.2023 ஞாயிறு வரை

10 தினங்களும் யாக மண்டபத்தில் மாலையில் தேவி மஹாத்மிக பாராயணமும் விசேட ஹோமமும், துர்க்கா-லக்ஷ்மி-சரஸ்வதிக்கு விஷேட துர்க்காசூக்தம், ஸ்ரீசூக்தம், மேதாசூக்த ஹோமங்கள், குங்கும அர்ச்சனை என்பன சிறப்பாக நடைபெறும்.



மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் (குழந்தைச் செல்வம்) பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

**கைலாச வாகனம்**
**11.08.2023 வெள்ளி**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

**சப்பறத் திருவிழா**
**18.08.2023 வெள்ளி**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

**தேர்த் திருவிழா**
**19.08.2023 சனிக்கிழமை**
காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை



## ஆடி அமாவாசை
## பிதிர்தர்ப்பண மோட்ச்ச சாந்தி வழிபாடு
## 15.08.2023 செவ்வாய்க்கிழமை

ஆடி அமாவாசை தினத்தில் இறைபதம் அடைந்த நம் முன்னோர்களை நினைந்து, பிதிர்தோஷங்கள் நீங்க பிதிர் தர்பணம் செய்து மோட்ச்ச தீபம் ஏற்றி மோட்ச்ச சாறந்தி வழிபாடு செய்வது சிறந்தாது.
விரத தினத்தை முன்னிட்டு 15.08.2023 செவ்வாய்க்கிழமை காலை 8:00 மணி முதல் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம், 10:00 மணிக்கு விஷேட பூஜை, சுவாமி வீதிஉலா என்பன நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**காலை 6:00 மணிமுதல் 2:00 மணிவரை ஆலயத்தில்**
**பிதிர்தர்ப்பண மோட்ச்ச சாந்தி வழிபாடுகள் செய்யலாம்.**
**அடியார்களின் காலதாமதத்தை தவிர்க்க பல சிவாச்சார்யர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

## 25.08.2023 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்
### சுமங்கலிப் பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு காலை 7:30 மணிமுதல் ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு மகாலட்சுமி அம்பாள் வீதிவலம்வரும் அருட்காட்சியும் நடைபெறும்.

**திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

416.291.8500 vinaayagar.com vinaayagar

கனடிய செய்திகள் Canadian News

## மொன்றியலில் வீணைமைந்தனின் மூன்று நூல்கள் வெளியீடு
- குரும்பையூர் மூர்த்தி -

# தன்னுடைய 20 வயது சம்பவங்களை 75 வயதில் நிறைந்த அனுபவத்தோடு எழுத்தாளர், வீணைமைந்தன் பண்டைய தமிழ் இலக்கியங்களோடு தொடர்புபடுத்தி எழுதியுள்ளார்

## - விமர்சகர் பாலசிங்கம் கருணாநந்தன்




கனடா வாழ் எழுத்தாளரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தை நிறுவிய சிலரில் ஒரு-வருமாகிய வீணைமைந்தனின் மூன்று நூல்கள் கடந்த 30-07-2023 ஞாயிற்றுக்கிழமையன்று மொன்றியால் மாநகரில் வெளியிடப்பட்டன.

இந்த விழா பாரதி தமிழ்ச் சங்க ஆதரவில் மீட்பின் அன்னை மறைத்தள மண்டபத்தில் நடைபெற்றது. இந்த வெளியீட்டு விழாவில் பல எழுத்தாள நண்பர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோர் உரையாற்றினர். திருமதி. உமா வேலு தொகுத்து வழங்கிய இந்த நிகழ்வில், மொன்றியல் அருள்திரு முருகன் ஆலய பிரதம குரு வெங்கடேஸ்வர சர்மா தலைமை ஏற்று ஆசி உரையும் தலைமை உரையையும் வழங்கினார். பாரதி தமிழ்ச்சங்க நிறுவுனர், ஆசிரியர் செல்லையா மூர்த்தியின் வரவேற்புரை வழங்க நூல் அறிமுகங்கள் இனிதே நடந்தேறின.

கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் ஆர் என் லோகேந்திரலிங்கம் அவர்களும் யுகம் வானொலி அதிபர், நாடகக் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்களும் ரொரொன்ரோவில் இருந்து வருகை தந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

"தமிழ் சினிமாவில் பாரதியார் பாடல்கள்" என்ற நூலை வியாபார நிறுவுனர், எழுத்தாளர், சமூக ஆர்வலர் திருமதி. இளவரசி இளங்கோவன் அறிமுகம் செய்து வைத்தார். "மண்ணும் மனசும்" என்ற நூலை ஆசிரியர். முன்னைநாள் சைவ மகாசபைத் தலைவர் திரு. பாலசிங்கம் கருணாநந்தன் அறிமுகம் செய்ய "மறக்கத்தெரியாத மனசு" என்ற மூன்றாவது நூலை திரு. செல்லையா மூர்த்தி அவர்கள் சுவை பட அறிமுகம் செய்து வைத்தார். நூலாசிரியர் வீணைமைந்தன் கே ரீ சண்முகராஜா அவர்களின் ஏற்புரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.











இந்த விழாவில் "மண்ணும் மனசும்" என்ற நூலை திரு. பாலசிங்கம் கருணாநந்தன் அறிமுகம் செய்தபோது பின்வருமாறு உரையாற்றினார்.

"சண்முகராஜா அவர்கள் கனடாவில் சுமார் 35 வருடங்களுக்கு முன் எனக்கு அறிமுகமானவர். அண்மைக் காலங்களில் இல்லாவிட்டாலும் முன்னய காலங்களில் நீண்ட நேரம் அவருடன் சம்பாசிப்பதில் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். அவரை உங்களுக்கு நான் அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும், ஒரு வார்த்தை, மற்றவர்களுடைய திறமையை அறிந்து அவர்களை தேவைக் கேற்ப உற்சாகப்படுத்துவது அவரிடம் காணக் கூடிய ஒரு நல்ல குணம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இது இவருடைய தொலைந்து போன வசந்த காலங்கள் என்ற நூலின் நீடிப்பு அதாவது EXTENTION என்று கூறியிருந்தார். இது இவர் பிறந்து வளர்ந்த காங்கேசந்துறை பிரதேசத்தைப் பற்றியது. நானும் 1956 ஆம் ஆண்டு எனது மாமனார் அமரர் குருநாதபிள்ளை காங்கேசந்துறையில் விதானையாராகக் கடமை புரிந்த போது ஒரு வருடம் நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்றதால் இந்த நூலில் குறிப்பிடப்பட்ட இடங்கள் எனக்கும் பரிச்சயமானதாக இருப்பதாகத் தோன்றியது. இருந்தாலும் 100 பக்கங்களுக்குக் குறைவாக உள்ள இந்த நூலை விரைவாக வாசித்து முடிக்குமளவிற்கு அது இலகுவானதாக இருக்கவில்லை.

இதில் எதுவும் கற்பனையற்ற உண்மைச் சம்பவங்கள், அசல் மனிதர்கள், நிஜ உணர்வுகள் பற்றியது என அறிகிறேன். தன் மனதுக்குள் காக்கப்படும் இளமைக் கால ஞாபகங்களைத் தொகுத்து தனிப்பட்ட பதினெட்டு சிறு தலைப்புக்களுடன் வழங்கியிருக்கிறார். தன்னுடைய 20 வயதுகளில் நிகழ்ந்த சம்பவங்களை 75 வயது நிறைந்த ஒரு அனுபவ எழுத்தாளர், கவிஞர், விமர்சகருடைய பார்வையில் ஒவ்வொரு சம்பவத்தையும் திருக்குறள், பாரதி பாடல்கள், சிலப்பதிகார வரிகள், திருமங்கையாள்வார் பாடல், பகவத்கீதை, சினிமா பாடல்கள் என்ற வற்றில் ஒன்றுடன் தொடர்பு படுத்தி எழுதியிருக்கிறார்.

எனது அபிப்பிராயத்தில், ஒரு மனிதனின் உள்ளுணர்வு உண்மையானது அதற்கு சாதி வேற்றுமை கிடையாது. சாதிக் கட்டுப்பாடு என்பது போலியானது அதற்கு உண்மை முகம் கிடையாது. உதாரணமாக பகிரங்கமாக மது அருந்துபவன் குடிகாரன். குடிகாரன் என்றால் கௌரவக் குறைவு. களவாக மது அருந்துபவன் வெளியில் போலிக் கௌரவம் என்றாலும் உண்மையில் அவனும் குடிகாரனே. சாதி வேற்றுமை / சாதிக் கட்டுப்பாடும் அதுபோல் ஒரு போலித் தன்மையே அன்றி உணர்வுகளுக்கு முன் அவை அர்த்தம் அற்றவை. மற்றவன் என்னை குறைவாக நினைப்பான் என்ற எண்ணத்தில்தான் பலர் சாதிக் கட்டுப்பாட்டை கடைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என நான் நம்புகிறேன்.

யாழ்ப்பாணத்தில் கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்த சாதி ஆசிரியர் வெறியை "வெள்ளையம்மா", "அவள் பெயர் ஆலயமணீ", "கற்பென்னும் திண்மை", "நீரில் விழுந்த நிலா" என்ற தலைப்புக்களின் மூலம் வெளிப்படுத்துகிறார். யாவும் நிஜமே அன்றி கற்பனை அல்ல என்று ஆரம்பத்தில் கூறியதை திரும்பவும் நினைவு படுத்துகிறேன்.

"பாப்பா பாப்பா கதை கேளு" என்ற அத்தியாயத்தில் எமது சிறு வயதில் பாட்டிமார் கதை சொல்லிக் கேட்பது ஒரு முக்கியமான அம்சமாக இருந்தது. நல்லொழுக்கத்திற்கான கருத்துக்கள் அக் கதைகளில் புதைந்து கிடந்தன. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக எமது தமிழ் சமூகக் குழந்தைகள் அப்படியான அறம் கற்பிக்கும் இதிகாசக் கதைகளை அறியாமல் வளர்ந்து விட்டனர். தற்போதைய பாட்டன் பாட்டி மார்களே, அம்மா அப்பாக்களே உங்கள் குழந்தைகளுக்கு நலல அறம் கூறும் கதைகள் சொல்லிக் கேட்க வையுங்கள். கர்பிணிப் பெண்களே கருவில் வளர்ந்து வரும் சிசுவிற்குக் கேட்பது போல் நல்ல கதைகளை உரத்து வாசியுங்கள். மஹாபாரதத்தில் வீரஅபிமன்யு கருவறையிலேயே தாயிடம் கதை கேட்டுச் சிசுவானான். இந்தக் குறைகளை, அறிவுரைகளை தனது குடும்பத்தினருக்கும் சேர்த்துத்தான் ஆசிரியர் கூறியிருக்கிறார்.

"தாலாடுப் பாடவா" என்ற தலைப்பில் குழந்தைகளைத் தாலாட்டுப் பாடி தூங்க வைக்கும் பழக்கம் இளம் தாய் மார்களிடம் அற்றுப் போவதை சுட்டிக் காட்டி அதன் முக்கியத்தை உதாரணங்களோடு விளக்கியுள்ளார். புகழ் பெற்ற கர்நாடக சங்கீத மேதை பாலமுரளி கிருஷ்ணா தனது தாயின் வயிற்றில் தான் கருவாக இருந்த போது தாயார் பாடிய பாடல்கள் அவருள் ஜீவிதமாகியது என்று குறிப்பிடுகிறார். இதை விட சினிமாவில் வந்த பிரபலமான, மனோ அவர்கள் பாடிய "தூளியிலே ஆட வந்த மாடத்து விண் விளக்கே" போன்ற பல பாடல்களை குறிப்பிட்டு அத்தியாயத்திற்கு மெருகு ஊட்டியிருக்கிறார்". என்று தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார் திரு. பாலசிங்கம் கருணாநந்தன் அவர்கள்.

*ரொரொன்ரோவிலும் வெகு விரைவில் அறிமுக விழா நடக்க இருக்கின்றது. இந்த நூல்களை பெற்று வாசிக்க விரும்புவோர் 438 779 9697 என்ற இலக்கத்தில் எழுத்தாளர் வீணைமைந்தனை தொடர்பு கொள்ளலாம்.*

# மிட்லண்ட் மறைத்தளத்தில் புனித யாகப்பர் திருச் சுரூபம்!

யாழ். ஊர்காவற்றுறை மேற்கிலுள்ள புனித யாகப்பர் ஆலயத்தின் கனடா வாழ் பங்கு மக்கள், தமது கனடா கிளையின் 30 ஆண்டு நிறைவையொட்டி, 2023 ஆடி 30ம் திகதி மிட்லண்ட் வேதசாட்சிகள் யாத்திரைத் தலத்தில், புனித யாகப்பரின் திருச்சுரூபம் ஒன்றை நிறுவி, புனிதரின் விழாவை வெகுவி-மரிசையாகக் கொண்டாடினர்.

அருட்பணியாளர்கள் மைக்கல் நொக்ஸ், சாள்ஸ் கெ-ாலின்ஸ், யூட் நிக்சன் ஆகியோர் திருவிழாத் திருப்பலியை நிறைவேற்றினர். இந்த சுரூபத்தின் அத்திவாரமிடலுக்கான அடிக்கல், ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, யாழ் ஆயர் அதிவண ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் ஆசீர்வதித்து இச் சுரூபத்தின் கீழ் பதிக்கப்பட்டுள்ளது. இதன் படங்களை இங்கே பார்க்கலாம்.









# ஓவியர் மாருதி என்ற இரங்கநாதன் மறைந்தார்

- குரு அரவிந்தன் - கனடா




**மா**ருதி என்ற புனைப்பெயரைக் கொண்ட புகழ்பெற்ற ஓவியர் இரங்கநாதன் சென்ற 27 ஆம் திகதி யூலை மாதம் தனது 85 வது வயதில் புணே நகரில் இதய நோயால் பாதிக்கப்பட்டு எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். 1938 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் புதுக்கோட்டையில் இவர் பிறந்தார். இவரது பெற்றோர்கள் மராத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தஞ்சாவூரைச் சேர்ந்த விமலா என்பவரைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். தீவிர இலக்கிய ஆர்வலர்கள் எப்படி ஒரு எழுத்தாளனின் படைப்பை நினைவில் வைத்திருப்பார்களோ, அதே போல அந்தப் படைப்புக்கு உயிரூட்டிய ஓவியனையும் கட்டாயம் நினைவில் வைத்திருப்பார்கள்.

பிரபல இதழ்களுக்கு ஓவியம் வரைந்த மாருதியின் முதலாவது ஓவியம் குமுதம் இதழில் 1959 ஆம் ஆண்டு வெளிவந்தது. மாணவப் பருவத்தில் தமிழக நூல்களை வாசிக்கும் பழக்கம் எனக்கு ஏற்பட்டதால், அதில் வரும் கதைகளுக்கு வரையப்படும் ஓவியங்களைப் பார்த்து நான் வியப்பதுண்டு. நானே ஒரு கதை எழுதி அதற்கு ஓவியர் மாருதி, ஓவியர் ஜெயராஜ் போன்றவர்கள் படம் வரைந்தால் எப்படி இருக்கும் என்று சில சமயங்களில் கற்பனை செய்து கனவுகூடக் கண்டிருக்கின்றேன். ஆனால் எதிர்பாராமல் அந்தக் கனவு ஒருநாள் நினைவாகிய போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

விகடன் பவழவிழா கொண்டாட்டத்தின் போது, "நீர்மூழ்கி நீரில் மூழ்கி" என்ற எனது குறுநாவல் தெரிவாகிப் பரிசு பெற்ற போது, ஓவியர் மாருதி, ஜெயராஜ், ராமு, அர்ஸ், பாண்டியன் ஆகிய ஐந்து ஓவியர்களும் அந்தக் கதைக்கு ஓவியம் வரைந்ததன் மூலம் என்னை ஆச்சரியப் படுத்தியிருந்தனர். அப்பொழுது விகடன் ஆசிரியராக இருந்த வியெஸ்வி மூலம் தான் எனது கனவு நினைவானது, அதன் பின் அவர் மூலம்தான் எனக்கு ஓவியர் மாருதியின் அறிமுகம் கிடைத்தது. ஆனந்தவிகடனில் வெளிவந்த எனது கதைகளில் அனேகமான கதைகளுக்கு ஓவியர் மாருதியே ஓவியம் வரைந்திருந்தார். கற்பனைக் கதைகளில் வரும் பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து, அந்தப் பாத்திரங்களை வாசகர்கள் மனதில் இடம்பிடிக்க வைத்ததில் ஓவியர்களுக்கும் முக்கிய பங்குண்டு என்றால் மிகையாகாது.

கதையில் வரும் பாத்திரங்களின் முகபாவனையை அப்படியே எடுத்துக் காட்டுவதில் இவரது ஓவியங்கள் சிறப்பானவை. குறிப்பாகப் பெண் பாத்திரங்களை அப்படியே மனதில் நிலை நிறுத்தி விடக் கூடியது இவர் வரையும் பெண்களின்






ஓவியங்கள். குறிப்பாக விகடனில் வெளிவந்த "சார் ஐ லவ்யூ" என்ற எனது கதையின் இளம் கதாநாயகியையோ, நீர்மூழ்கி நீரில் மூழ்கி கதையில் வந்த கதாநாயகியையோ, அல்லது ரோசக்காரியில் வந்த சுபத்ரா என்ற பாத்திரத்தையோ மறக்க முடியாதவாறு ஓவியம் வரைந்திருந்தார். ரோசக்காரியில் தானே சுபத்ரா என்ற பாத்திரத்தோடு பூங்காவில் உட்காரந்து உரையாடுவது போல அவரது ஓவியம் வித்தியாமான கோணத்தில் அமைந்திருந்ததால் பலரின் பாராட்டையும் அப்போது பெற்றிருந்தார். "பாட்டிற்கு இசை என்றால் கதைக்கு ஓவியம்!".

"ஓவியக் கலைமாமணி" என்ற விருது பெற்ற, ஓவியர் மாருதி உயிரூட்டிய எனது சில கதாபாத்திரங்களின் படங்களை இங்கே தருகின்றேன். நேற்றிருந்தார் இன்றில்லை என்பதற்கிணங்க, அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருடன் சேர்ந்து அவர்களது துயரத்தில் நாங்களும் கலந்து கொள்கின்றோம். ஓம் சாந்தி!.

# Wimal Sockkanathan: A Voice Known for Diction and Punctuation in Tamil News Reading

- by Siva Prameswaran



I was woken early in the morning on 2nd August with a message "can you confirm"? followed by a call. Even before I could attend that call another call came in. People from across the globe messaged me to confirm if the 'rumours' they heard were true, since the relationship between both of us were that of a 'father and a son'.

The call from Canada was continuously ringing.

'Logan' Logendralingam, editor of the prominent Tamil weekly from Toronto was on the line. His brief call told me that he has information that Wimal Sockkanathan was no more and wanted to confirm it. It was deeply disturbing. My immediate call was to Mrs. Wimal who confirmed the tragic incident - albeit the details were sketchy. I was told "he died in a train accident". That even made me even more disturbing.

The calls continued and I kept confirming his demise globally. One of my earlier calls was to his contemporary and close friend B.H.Abdul Hameed, another globally recognized broadcaster, who immediately shared the news on his Facebook quoting me which subsequently went viral.

As recently in May this year, I was with him in Jaffna and Colombo for the release of his latest book-a compilation of his weekly columns in Sri Lanka's premier Tamil daily 'Virakesari' titled 'Londonilirunthu Wimal'.

Prof. Raghuram, Dean of Arts faculty at the Jaffna University, who presided over his book release spoke about the close relationship we both had.

"They know each other so close that Wimal Sockkanathan told all those involved in the book launch event to discuss all aspects with Siva Anna and once he approves its akin approval by him. That relationship and confidence amazed me and I have not come across such a bonding among two professionals who are not related".

The admiration between us was mutual.

We were discussing the next launch of his books in Canada over the last few months. The editor of Canada Uthayan was coordinating. The launch scheduled in June was postponed due to all of our other commitments and subsequently rescheduled for the 14th of October. The venue was booked and the draft invitation was ready. Wimal Anna consulted me on every single aspect of the event. And, he and the editor of Uthayan were particular that I participate in the event, which has now become an unrealized dream.

"There is no Rama without Hanuman," he told me when I asked about my presence at the Canada event.

We have been to Cafés and Coffee shops together where we used to discuss Tamil films, classical music, contemporary issues, and of course broadcasting. Many a time he has expressed his disappointment over the poor diction and rendering of news in the Tamil media and used to regret the rot that started with the media in Tamil Nadu.

Many like me in the BBC would turn to him for advice when we are struck for certain Tamil words while translating English news copies and other stories from Sri Lanka. Not a moment would he hesitate to render such advice.

Wimal Anna was a food lover and has never failed to appreciate if it's good and suits his palate. His passion for Thosai remained.

Our personal rapport extended beyond the BBC office. At my invitation, he travelled to Chennai to attend my daughter's wedding and was deeply moved by the way he was honoured by our family which he posted on his FB page along with pictures.

He was a deeply religious person and was at the forefront of charity works and donated to temples and other noble causes.

Wimal Sockkanathan was a lawyer by profession and a broadcaster by passion. He was energetic and ebullient always keeping people around him cheerful with his sharp wit and humour.

His voice transcended countries and continents and captivated audiences in the Tamil world. He was well-known for his punctuation and pronunciation.

Apart from being a popular radio newsreader and of late on TV too, he was a drama producer, actor, author, and stage compere. He was a popular face in the London Tamil cultural circuit.

He started his broadcasting career at the Sri Lanka Broadcasting Corporation and was producing and presenting various programmes including children's programme and radio dramas, film music-based features-which were a popular source of entertainment at the mid of the last century.

Later even as he moved to London half a century ago to pursue his higher studies in law, his passion for broadcasting continued in him. Wimal was a news reader with the BBC Tamil Service-Tamilosai-which came to an end in 2017- mostly working on weekends and holidays.

He never faulted on air and always had the perfect diction and had a good sense of time while reading his news and never inconvenienced the person on the other side of the studio. Irrespective of his age and seniority in the broadcasting circle he was a rare breed who maintained punctuality.

Apart from being with the BBC Tamilosai, he was also a news reader and presenter in the London-based broadcaster IBC. He never struggled with for translations while converting world news from English to Tamil. Even tricky global stories were never a challenge for him, as he was in tune with the global news and current affairs regularly and had the ability to translate a piece of global news in such a way it makes easy understanding for the Tamil audience.

Such was his broadcasting abilities; he was invited by the LTTE leadership in Vanni to train young Tamil journalists. His earlier book 'Vanoli Kalai' serves as a handbook for upcoming broadcasters.

He was reasonably proficient in Sinhala too, but never ventured to broadcast in it.

Wimal was a weekly contributor to Tamil outlets in the UK, Canada, and Sri Lanka including the most popular Tamil daily 'Virakesari' from Sri Lanka. His articles in the London-based 'Puthinam' titled 'Wimanil pakkangal' and 'Londonilirunthu Wimal' in Virakesari were a reflection on global contemporary issues relating it closely to the Sri Lankan Tamils living abroad.

While he finalized his weekly columns for various outlets, mostly I used to be the first one to read them. He used to send the manuscripts to me which I typed and sent back. Subsequently, we used to do it via calls.

His natural instinct of ingrained humour added value to the articles and sustained interest in reading. Colleagues in the BBC who worked with him will never forget his hospitality.

The solicitor office he and his wife administered in Croydon was always busy with immigrants not only from the Tamil country but other parts of the globe as well. Though they dealt with a vast variety of cases, they were among the leading solicitors specializing in immigration-related services in the city of London.

A popular Tamil radio voice has faded into eternity. And with it, I have lost a very close personal connection of over two decades.

# அதிகாரப் பகிர்வும் மாகாண சபைத் தேர்தலும் பிரிக்க முடியாதது என்று கூட்டமைப்பு வலியுறுத்து

- நடராசா லோகதயாளன்

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, 13ஆம் திருத்தம், மாகாண சபைத் தேர்தல் ஆகிய மூன்றையும பிரித்துப் பார்க்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது என நாணாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உறுதிபட வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில நாட்களிற்கு முன்னர் ஜனாதிபதி அழைத்திருந்த அனைத்து கட்சிக் கூட்டத்தில் காரசாரமாக வாக்குவாதங்கள் இடம்பெற்றிர்ந்தது. ஒரு கட்டத்தில் "உங்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையா அல்லது மாகாண சபை தேர்தல் தேவையா?" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை பார்த்து கேட்ட ரணில் விக்ரமசிங்க இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது என்று சுமந்திரன் விளக்கமளிக்க, கூட்டத்தை உடனடியாக முடித்துக் கொண்டு வெளியேறியது ஊடகங்களில் பரபரப்பு செய்தியானது.

இதையடுத்து ஊடகங்கள் மாறுபட்ட செய்திகளையும் கருத்துக்களையும் முன்வைத்திருந்தன. இந்நிலையில் இந்த விடயத்தை விளக்கி கூட்டமைப்பு விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் பேச்சாளரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் பெயரில் அந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13வது திருத்தம், நீண்டகாலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் வெளியிடப்படுகின்றது அந்த அறிக்கை வெளியிடப்படுவதாக கூட்டமைப்பு கூறியுள்ளது.

"தமிழ் மக்கள், 1956 ஆம் ஆண்டு முதல், வடக்கு - கிழக்கில் சமஷ்டி ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கான ஆணையை, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளனர். 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது, இதில் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தது" என்று கடந்தகால வரலாற்றை அந்த அறிக்கை நினைவூட்டியுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் விளைவாக இந்தியா வழங்கிய அனுசரணைகளை இலங்கை ஏற்றுக்கொண்டது முதல் கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசாங்கம் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என்பதையும் சுமந்திரன் தனது அறிக்கையில் விளக்கியுள்ளார்.

மிக சமீபத்தில் கூட, இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், இலங்கை அரசு தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்திற்க்கான மறுகட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லும் என்ற இந்தியாவின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருந்ததையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ரணிலுடனான சந்திப்பின் போது மேலும் 13வது திருத்தத்தை அமல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும், இலங்கையின் தமிழ் சமூகத்திற்கு சுயமரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யவும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என்றும் இந்தியப் பிரதமர் தனது நம்பிக்கையை தெரிவித்திருந்தார்.

பின்னர், செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் இந்திய வெளியுறவு செயலாளர் பின்வருமாறு கூறியிருந்தார் என்பதையும் அந்த அறிக்கை கூறுகிறது.

"ஒன்றுபட்ட மற்றும் வளமான இலங்கை எனும் கட்டமைப்பிற்குள் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள், நிச்சயமாக சமத்துவம், நீதி மற்றும் சுயமரியாதைக்கான அபிலாஷைகளை நிவர்த்தி செய்யும் அரசியல் தீர்வை இந்தியா தொடர்ந்து எதிர்நோக்குகிறது என்ற உண்மையின் அடிப்படையில் இதைவிட வெளிப்படையாக எதுவும் இருக்க முடியாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துதல் என்பன இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கும், அதனை எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகளாகும் என பிரதமர் மேலும் தெளிவாகக் கூறியிருந்தார். இதுவே எங்களின் நிலையான நிலைப்பாடாக இருந்து வருகின்றதோடு, இது இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போதும் முன்வைக்கப்பட்டது".

1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என்கிறது கூட்டமைப்பின் அறிக்கை.

"அரசியலமைப்பின் 13வது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்ல. ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியபிரமாணம் செய்துள்ளோம். இவ்வாறு அரசியலமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாதது விடுவது என்பது அரசியலமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும். எனவே எமது அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமல்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம். எனினும் அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஎகளை பூர்த்தி செய்யாது".

அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை பல்வேறு செயல்முறைகள் மூலம் அர்த்தமுள்ளதாக்க வேண்டும் என்பது,மங்கள முனசிங்க தெரிவுக்குழுவில் இருந்து 2016 - 2019 வரை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இடம்பெற்ற அரசியலமைப்பு பேரவை வரை, மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக்காலத்தின் போது இந்தியாவுடன் குறைந்தபட்சம் மூன்று தனித்தனி கூட்டு அறிக்கைகள் மூலம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் சுமந்திரன் கையொப்பமிட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை மீண்டும் எடுத்துக்காட்டியுள்ளது.

"தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள சட்ட காலதாமதங்கள் காரணமாக குறைபாடுகளுடன் இயங்கி வந்த ஒன்பது மாகாண சபைகள் செயலிழந்துள்ளன" என்று அறிக்கை வெளிப்படுத்துகிறது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான தேர்தல் சீர்திருத்தத் தெரிவுக்குழு கடந்த வருடம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், மூன்று வருடங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதாக இனங்கண்டு முன்பு இருந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என பரிந்துரை செய்ததோடு இதை செயல்படுத்த தகுந்த சட்டம் இயற்ற வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இந்த பரிந்துரைகளுக்கு இணங்க தான்ன் ஒரு தனி நபர் சட்டமூலம் ஒன்றினை தயாரித்து முன்வைத்திருந்ததை சுட்டிக்காட்டியுள்ள கூட்டமைப்பின் பேச்சாளர், அதன் முதல் வாசிப்பு முடிந்த நிலையில் இந்த சட்டமூலம் உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் இதில் உள்ள சில சரத்துகளில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களைச் செய்தால், அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது என்பதையும் அந்த அறிக்கையில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

2022 டிசம்பர் 10 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது சர்வகட்சி மாநாட்டிலேயே மாகாண சபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது. அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் த தே கூ விவாதித்திருந்தது. ஜனாதிபதியுடன் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், 2023 ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் மீண்டும் தமது நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்த கூட்டமைபு கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டிலும் இதே நிலைப்பாட்டையே மீண்டும் வலியுறுத்தியது.

"இவ்விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை அவ்வாறே உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு அழைப்பு விடுப்பதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. மேலும் கூறுவதானால் ஒன்று இல்லாது மற்றொன்றில் எவ்வித அர்த்தமும் இல்லை" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை காட்டமாக கோடிட்டு காட்டியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியுடனான கூட்டத்தை சுமந்திரனே குழப்பினார் என்று வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான க. வி. விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார். யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதை தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில், ரணில் அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலிற்கே முன்னுரிமை அளிக்கவுள்ளது என்றும், அதில் மக்கள் ஆதரவு பெற்று ஜனாதிபதி ஒருவர் தெரிவான பிறகு நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி அவர் அதிகாரப்பகிர்வு, மாகாண சபை தேர்தல்கள், பொருளாதார சீர்திருத்தம், இந்தியா - சினாவுடனான உறவுகளை ஆகியவற்றை முன்னெடுக்கட்டும் என்ற நிலைப்பாடு உள்ளது என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கடந்தவையும் கடப்பவையும்

(65)

**கோட்டையை**

**பார்த்து வரும் வழியினிலே - நல்ல
காற்று வாங்க என்பதற்காய்**

**அடர்ந்திருந்த மரத்தடிக்கு - மெல்ல
நடந்து நாமும் செல்கையிலே**

**ஓடிவந்த ஒரு தம்பி 'சாப்பிடுகிறீர்களா?'
எனக் கேட்டார் சிங்களத்தில்**

**கோட்டையிலே சாப்பாடா? ஆச்சரியம் -
'எங்களுக்கு
வேண்டாம் தம்பி நன்றி' என்றுவிட்டு**

**'சிங்களமா நீங்கள்' என்று
அங்கவரைக் கேட்டபோது**

**இல்லையென்றே பதில் சொன்னார்
நல்ல வெய்யிலிலே வந்தவர்க்கு**

**பசிக்குமென்ற சிந்தனையோ அன்றி - தமிழர்
விருந்தோம்பும் பண்பவனின் வளர்ப்புத்தானோ -
அல்லவெனில்**

**மிச்சமாய் இருப்பதை வீணாய் ஏன்
கொட்டுவான் என்றவனின் நினைப்போ -
தெரியவில்லை**

**பொட்டு வைத்துப் போன போதும்
சட்டென ஏன் கேட்டான் சிங்களத்தில்? -
புரியவில்லை**

**தொல் பொருள் திணைக்களத்தில்
நல்ல வேலை செய்வதற்குப் படிக்கிறானோ
தெரியவில்லை**

**உங்களுக்கு பரிமாற உணவேது இங்கென்று
வந்து நின்ற தம்பியை தன்மையாகக்
கேட்டபோது**

**சமைத்துக் கொண்டோம் தாமென்று
சுணக்பமின்றி பதில் சொன்னான்**

**எவ்வளவு சுதந்திரம் இவர்களுக்கு - தடையின்றி
இவ்விடத்தில் வருவதற்கும் - இங்கு**

**சமைத்து அவர்கள் உண்பதற்கும் - முன்பே
எடுத்துக் கொண்டார் போலும் அனுமதி**

**படிக்கும் இளைஞர்களோடு யுவதிகள்
வேடிக்கையாகப் பேசி சிரிப்பதுவும்**

**சுற்றவர இருந்து சிறியவர்கள் போல
ஒற்றைக் இலை போட்டு விளையாடுவதும்**

**சற்று பின்னோக்கி இழுத்ததெம்மை**

**கோட்டையை பெடியள் கைப்பற்றி ஐந்து
வருடங்கள்
கொண்டாட்ட காலமது அன்றைய இவர்களை
ஒத்தவர்க்கு - ஆனாலும்**

**கும்மியடித்துத் திரியவில்லை - எவரும்
கண்டும் காணாமலும் விடவில்லை**

**கட்டுப்பாட்டுக்குள் இருந்துகொண்டார் - அனால்
கட்டிப் போட்டதாயும் எண்ணவில்லை**

**தேவையான இடங்களைத் தேர்ந்தெடுத்து
நேர்மையான நட்பொடு போயும் வந்தார்**

**ஆண்களொடு பெண்கள் சேர்ந்து போவார்
சுற்றுலா - ஆனாலும்
ஆண்களொடு பெண்கள் கூடமாட்டார்**

**தனித்தனியாய் இருந்துவிட்டு - மீண்டும்
கூட்டாகத் திரும்புவார்கள் சேர்ந்த இடத்திற்கே**

**இன்று இவர்களில் எத்தனை மாற்றம்
நன்றுதான் மாற்றம் நட்பு நல்லபடி
இருக்குமானால்**

**எவ்வளவோ சத்தம் சுத்தவரக் கேட்டாலும்
எள்ளளவும் காதில் விழவில்லை என்பதுவாய்
இருவர்**

**ஒருவரா இருவரா இடைவெளி தெரியவில்லை
அவர்களை கேட்பதற்கு யாருமே இருக்கவில்லை**

**பேராதனைப் பூங்காவாய் இருந்திருந்தால்
ஆராக இருந்தாலும் கல்லெறிந்தே
கலைத்திடுவார் அங்கொருவர் - இங்கும் மிக**

**பக்கத்தில் இருப்பவர்கள் அவர் இனம்தான் -
ஏனோ
எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன**

**என்றேதான் விட்டாரோ தெரியவில்லை**

**( தொடரும்)**

**-- உமா மோகன் --**

**-- மொன்றியால் - கனடா --**

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள், தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

tasty தமிழா TASTY தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்



Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)



உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

- Painting
- Bathrooms
- Kitchens
- Decks
- Flooring
- Basements
- Pot lights
- Accent Walls

Contact us | 416.706.8160



VASANTHAM



Are you or a loved one struggling with ADDICTIONS?

Vasantham Presents: Recovery is Possible

Tamil Addiction Recovery Program

போதையில் இருந்து விடுபட இலவச வகுப்புகள் தமிழில்

- **Cost:** Free!
- **When:** Every Saturday 10:00 AM to 12:00 PM
- **Where:** The Hub Mid-Scarborough 2660 Eglinton Ave East
- **How to register:** Call Vasantham Wellness Centre at தொடர்புகளுக்கு அழைக்கவும் - வசந்தம் 416-847-4172
- **Who can participate:** People 18+ who are facing addiction challenges

Funded by the SUAP/ HEALTH CANADA



கனடா கதிரிப்பாய் மக்கள் ஒன்று கூடல் 2023

அன்பான கனடா வாழ் கதிரிப்பாய் உறவுகளே! மேற்படி நிகழ்வுக்கு உங்கள் அனைவரையும் குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

DATE: Sunday, August 06th
TIME: 10am
LOCATION: Morningside Park

தொடர்புகளுக்கு: கண்ணன் & ரமேஷ்



Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

# ONTARIO STRUGGLES TO REACH HOME CONSTRUCTION TARGET



Ontario reveals that cities that are set to meet targets set by Premier Doug Ford's government that aims to build 1.5 million new homes in the province by 2031 are struggling to do so as the progress is slowing recently.

The Canada Mortgage and Housing Corp show statistics on constructions of new homes from January 2022 to June 2023 which proves that cities are struggling to reach their goals.

Toronto and Vaughan, among larger cities are leading the way and are on track of building new homes whereas other cities like Ottawa, Hamilton, London, Markham, and Kitchener are only at 50-65% of the desired result with Missisauga and Brrampton at the bottom, only having achieved 23-29% of the required pace.


As interest rates increase and there is a major labour shortage in construction, there are not enough workers to help speed up the process. In order to reach the goal of 1.5 million new homes, 150, 000 new housing units must be built by 2025, which is difficult when considering the 2023 budget is not enough.

The Government of Ontario recognizes the work necessary in order to address housing supply issues and housing demands. With more collaboration between municipal parties, there may be an increase in housing starts.

As Ontario is struggling to meet the target goal and interest rates are increasing, it is essential to find innovative solutions as the population in certain cities are increasing, and not enough homes are being built. With determination and strategic planning, Ontario may be able to reach Ford's government's goals. The clock is ticking, and the time to act is now.

- Athisayaa Prabagar, Intern

# GOVERNMENT OF ONTARIO LAUNCHES MOBILE SKILL TRADES CLASSROOMS



$5.4 million will be invested by the Ontario government in building three mobile tech classrooms that will travel across the province and educate young students about skilled trades. The classrooms being built will be operated by Skills Ontario. The classrooms will provide hands on experience for young students interested in careers in skill trades. This opportunity for young students will give them the chance to experience 144 trades that are available to them.

The three classrooms that will be named "Trades & Tech Trucks" will offer hands-on-learning as well as simulators for trades such as electrical systems, auto-painting, tire and brake work, crane operation, heavy machine operation, and many other trades. These innovative mobile classrooms will be offered to around half a million individuals that will be able to discover careers in skill trades.

The significance of this launch is to address the labour shortages and introduce individuals to the many skill trades affected by the shortage. By 2025, one in five careers are expected to be in skill trades and the Ontario government is finding a way to introduce the multiple job opportunities available to Ontario citizens. This launch will also play a vital role in delivering the provinces' plan to build 1.5 million homes by 2031, meaning 100, 000 skill trade workers will be needed throughout the decade to reach that goal.

The government's investment in these tech classes shows commitment in growing both diversity and inclusivity in the skill trades industry as there was a 28 percent increase in female apprentices in the last year. As the government has invested over a billion in the establishment of Skilled Trades Ontario, the rise of registration has shown a great increase. By taking these steps to promote skills trades in Ontario, high school students will be required to take one tech education course to aim bringing in at least 150,000 students in well-paying skill trade careers.

In order to shape the workforce and promote careers in skill trades, the Ontario government will give the opportunity to help discover career choices that may be life-changing to young individuals. The classroom will offer many training, interaction, and skilled trade opportunities to help students find a skilled trades career they may be interested in. This initiative is a significant step in building a prosperous future for the province and empowering skill trades for future generations.

- Athisayaa Prabagar, Intern

# CANADIAN SPORTS INSTITUTE OF ONTARIO'S SPECIAL ANNOUNCEMENT

CANADIAN SPORT INSTITUTE — INSTITUT CANADIEN DU SPORT — ONTARIO

On July 18, 2023, the Canadian Sports Institute Ontario (CSIO) invited press and media to make a special announcement. There, Minister Neil Lumsden, the Minister of Tourism, Culture, & Sport, with Debbie Low, Ian Gordon, and Britney Maclean; announced CSIO's funding from the Government of Ontario. CSIO will receive $4.2 million from the Ontario Government in the next two years.

The funds received will be used towards supporting high performance sport in Ontario, this including: Coaches, Athletes, and funding towards mental health initiatives in the high-performance sport system. OHPSI, a 2010 high-performance sport system, since its creation has supported over 4500 Ontario athletes in coaching, mental health, training, camps, sport science, and sports medicine.

As the Olympic and Paralympic Games are yet to come in the next 5 years, the OHPSI intake will support 20 sport training programs and meet the needs for mental health support for Ontario athletes. The assistance of government funding for high-performance sports will allow provincial Ontario athletes to get any support they need; including wellness check and consultations.

CSIO, which is part of the Canadian Olympic and Paralympic Sport Institute Network, is committed to delivering sports science, medicine, services, coaching, and support to help Canadian athletes all over Canada. The Ministry of Tourism, Culture, and Sports is dedicated to deliver experiences and championships in sport and activities across Ontario. With the help of the Canadian Government, high-performance sport athletes will now be able to get the assistance they need as well as better support so they can continue to bring more championships back to Ontario.

- Athisayaa Prabagar, Intern

வர்த்தலை விளானென்ற வான்புகழ் கிராமம்
வளங்கள் பலவும் வாய்த்த கிராமம்
வருவோரைக் கரம்நீட்டி வரவேற்கும் கிராமம்
வளங்கள் குறைந்தோரை வாழவைக்கும்
கிராமம்.

குளத்தடிப் பிள்ளையார் எங்கள் குலதெய்வம்
குறைகள் பலதீர்த்த குஞ்சரத் தலையன்
குன்றுபோல் குவிந்த மருதின் கீழே
குறுமுனி போலே குந்தியுள்ள தெய்வம்.

அகரம் கற்பித்த அமெரிக்க மிசன்பள்ளி
அடிகொடுத்து ஆட்சேர்த்த செல்லையா
வாத்தியார்
அருமையாய் ஆடவைத்த இராசநாயகம்
வாத்தியார்
அவனியில் அவர்களை மறக்க முடியுமா?

கணேசையர் என்ற கனவான் வாழ்ந்தமண்
கவிகள் பலர் கவிபாடிக் களித்தமண்
கலைஞர் பலர்வாழ்ந்த களங்கம் இலாமண்
கனிமரங்கள் காய்த்துக் குலுங்கும்
கண்கொளாமண்.

முச்சந்தியில் இருந்த முத்தான சங்கக்கடை
முழுநேரம் இயங்கிய புற்றுநோய்வீடுதி
முழுமூச்சாய் வாலிபரால் கட்டிய
நூல்நிலையம்
முழுவதும் இழந்து முகவரி தொலைத்தோம்

மாதர்நலம் காத்த மாதர் கட்டடம்
மாபெரும் சாதனை செய்த மாதர்சங்கம்
மாட்சிமை நிகழ்ச்சிகள் பலகண்ட மண்டபம்
மாலை இழந்த மங்கைபோல் இருப்பதேன்?

சொர்க்கம் போலிருந்த சொந்தக் கிராமம்
சொந்தம் இழந்து சோர்ந்து போனதேன்?
சொல்லாமல் வந்த துயரமான யுத்தம்தானே?
சொல்லியழ முடியவில்லை சொந்தவூரில்
ஆருமில்லை.

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**

**(416) 844-7453**

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

Ceylon Citizenship bill was passed on August 20, 1948 and signed into law on November 15 of the same year. However, GG Ponnambalam joined DS Senanayake's cabinet and took oaths as Minister of Industries, Industrial research and Fisheries on September 3, 1948 just two weeks after the passage of the Bill! That is to say negotiations with D.S. Senanayake for a cabinet portfolio commenced weeks before August 20, 1948.

On the following year in 1949 the Ceylon Parliament passed the Ceylon (Parliamentary Elections) Amendment Act No.48 of 1949 which stripped the Indian Tamils of their franchise. The amendment simply said that only citizens are eligible to vote. Prior to independence Tamils of Indian origin have voted in parliamentary elections held in 1947 and all State councils held since 1931. Seven of the 95 MPs elected at the 1947 general elections were of Tamils of Indian origin. The Indian Tamils also influenced the result in 20 other constituencies where leftist parties contested.



Ceylon would not have gained independence if not for the votes cast by Tamil legislators for the Independence Bill introduced by DS Senanayake in 1946. Gullible Tamil legislators reposed trust in DS Senanayake not knowing his ulterior motive and subterfuges, His infamous pronouncement that "Do you want to be governed from London or do you want, as Ceylon, to help Ceylon? On behalf of the [Ceylon National} Congress [founded by Sir Ponnambalam Arunachalam in 1919] and on my behalf, I give the minority communities the sincere assurance that no harm needs you fear at our hands in a free Lanka". As subsequent events proved this was empty rhetoric and a sugar-coated pill to entice the Tamil legislators to vote for the constitution. When the Bill was put to vote, 51 of the 53 councillors voted in favour.

To revert back, it would be seen that Chief Justice H.N.G. Fernando and Justice G. P. A. Silva agreeing concluded that Kodeeswaran's right to sue the crown must be determined under English common law and not under Roman - Dutch law. Under English law a civil servant had no right to remuneration that could be enforced against the State. The Supreme Court failed to consider the constitutional issue but gave judgement on the preliminary point to the Crown. The Supreme Court, however, stated that if it became necessary to consider the constitutional issue, the matter would be placed by the Chief Justice before a five-judge court. This was the decision the government wanted; it was politically acceptable but legally erroneous.



The Soulbury constitution left important subjects undefined, namely the Official Language of an independent Ceylon, who are its citizens, individual and group rights particularly in a multi ethnic state. Though D.S. Senanayake and his Ministers "officially" boycotted the Soulbury Commission, but they worked behind the curtains to influence the Commission. It is they who asked the Soulbury Commission leave those subjects to an independent Ceylon. Obviously, DS Senanayake had other plans up his sleeve in an independent Ceylon.

The Soulbury constitution itself was more or less similar to the draft constitution presented to the Commission by D.S. Senanayake and the Board of Ministers. This draft constitution, authored by Sir Ivor Jennings, conferred Dominion status to Ceylon. The draft constitution also allocated 57 seats for the Sinhalese, 15 seats for the Ceylon Tamils, 14 for Tamils of Indian origin and 8 for Muslims in a parliament consisting of 95 elected and 6 appointed members.

When results of the 1947 general elections came, the UNP won 42 seats, the LSSP 10, the Tamil Congress 7, the CIC 7, the BLP 5, the CP 2, the Labor Party 1, with 21 independents winning. Ethnic-wise, the Sinhalese won 68 out of 95 seats, while the Ceylon Tamils won 13 seats in both the North and Eastern provinces, 7 seats were won by the Tamils of the Indian origin, while Muslims won 6 seats, and one went to the Burgher community.

A total of 1,710,150 people cast their votes, which amounted to 55.8 percent of the total eligible voters. The results of the 1947 elections to parliament revealed that UNP won 42 seats, the LSSP 10, the Tamil Congress 7, the CIC 7, the BLP 5, the CP 2, the Labor Party 1, with 21 independents winning. Ethnic-wise, the Sinhalese won 68 out of 95 seats, while the Ceylon Tamils won 13 seats in both the North and Eastern provinces, seven seats were won by the Tamils of the Indian origin, while Muslims won six seats, and one went to the Burgher community.

This figure excludes voters in the Puttalam electorate, where the H S Ismail (UNP) was elected uncontested. Accordingly, 71.58 % of the seats went to the Sinhalese against the 63 % they managed in the State Council general elections held on 1936. Ceylon Tamils managed to obtain 13.8 % of the seats. The losers were the Tamils of Indian origin who secured only 7.37% of the seats. So, it was obvious, that DS Senanayake in the draft constitution submitted to the Soulbury Commission deliberately understated the Sinhalese representation in the first parliament while inflating the Indian Tamil representation. The Soulbury Commission exhibited blissful ignorance that DS Senanayake was clandestinely scheming to deprive the Indian Tamils their citizenship within 285 days of independence in 1948. Or the Indian Tamils of their franchise the following year 1949. It also opened the floodgates for more discriminatory legislation like the Sinhala Only Act in 1956 and Standardization of Education Act in 1971Thus the Soulbury Constitution made the Tamils a minority community under the over lordship and at the mercy of the Sinhalese.

Even though GG Ponnambalam had pleaded with the Soulbury Commissioners for the introduction of measures to check the Sinhalese dominance and their practice of discrimination against the Tamils, the Commissioners adamantly refused to consider his plea. As an act of revenge, GG Ponnambalam defeated all the Tamil leaders who supported the Soulbury Commission Report and came forward to contest on the UNP ticket. Sir Arunachalam Mahadeva succumbed to a humiliating defeat in Jaffna. SJV Chelvanayakam, a complete newcomer to politics, defeated S Natesan. An independent candidate, C Sittampalam, squarely defeated Jeganathan Thiagarajah in Mannar. Sir Arunachalam Mahadeva and Thiagarajah subsequently never returned to politics.

Once the results were announced, G G Ponnambalam dispatched an urgent cable to the Colonial Office, claiming that the election results had vindicated his stand for balanced representation, and he called for the rejection of the Soulbury Constitution. He also claimed that the Tamil Congress had sought and obtained a mandate from the Tamils for his party to render "responsive cooperation" with the "progressive-minded" Sinhala parties. (See the annex for the Soulbury Commissioners' Report on G G Ponnambalam's submissions.)

Although the Soulbury Commission thought Section 29 of the constitution, which prohibited Parliament from enacting discriminatory legislation, is unalterable in perpetuity and an iron clad safeguard for the minority communities against tyranny by the majority Sinhalese, in practice it proved otherwise.

Lord Soulbury, after having served a term as governor general of independent Sri Lanka, in a spirit of repentance for the failure of the British, took the blame upon himself and later admitted: "I now think it is a pity that the Commission did not also recommend the entrenchment in the constitution of guarantees of fundamental rights." (To be continued)



# தமிழகத்தில் உறுப்பு தானம் ஓர் இயக்கமாக மாறியுள்ளது: மா.சுப்பிரமணியன் பெருமிதம்

இந்திய செய்திகள்

"திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 292 கொடையாளர்கள் இதுவரை உறுப்பு தானங்களை செய்துள்ளனர். அவர்கள் அளித்த உறுப்புகளின் பயன்பாடு என்பது, 1162 ஆக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில், தமிழகத்தில் இன்றைக்கு உறுப்பு தானம் என்பது ஓர் இயக்கமாக இருந்து வருகிறது" என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

National Organ and Tissue Transplantation Organization (NOTTO) எனும் அமைப்பின் மூலம் 13 வது இந்திய உறுப்பு தான தினம் வியாழக்கிழமை அனுசரிக்கப்பட்டது. அந்த வகையில் இந்தியா முழுமைக்கும் உறுப்பு தான சிகிச்சைகள், மாற்று சிகிச்சைகள் அதேபோல் அதற்கான விழிப்புணர்வு போன்ற பல்வேறு விஷயங்களில் சிறப்பாக செயல்படுகிற மாநிலங்கள் மற்றும் தனி மனிதர்கள், அமைப்புகள் என்று பலதரப்பட்டவர்களுக்கும் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. அதன்படி இந்திய அளவில் உறுப்பு தான திட்டத்தில் சிறப்பான செயல்பாட்டுக்காக சிறந்த மாநிலமாக தமிழகத்தை தேர்ந்தெடுத்து State Organ and Tissue Transplantation Organization (SOTTO) என்ற விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவிடம், தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக் கொண்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியது:

"இதன் மூலம் தமிழகம், ஏற்கெனவே கடந்த காலங்களில் பெற்றிருந்த இந்த சிறப்புக்குரிய தகுதியை தொடர்ந்து நிலைநிறுத்தி வைத்திருக்கிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் 2008ம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பகுதியில் ஜித்தேந்திரன் என்ற மாணவன் சாலை விபத்தில் மரணம் அடைந்த நேரத்தில் அவருடைய உறுப்புகளை பெற்றோர்கள் மனம் உகந்து உறுப்பு தானம் செய்தார்கள். அது அன்றைக்கு பெரிய அளவிலான செய்தியாக வந்தது, தொடர்ச்சியாக அன்றைய முதல்வர் கருணாநிதி, அந்த பெற்றோர்களை அழைத்து, அவர்களை கவுரவித்து, அவர்களுடைய அந்த சிறந்த குணத்துக்காக பாராட்டினார்.அதோடு மட்டுமல்லாமல் தமிழகத்தின் இன்றைய முதல்வர், நேரடியாகவே திருப்போரூர் பகுதிக்கு சென்று ஜித்தேந்திரனின் பெற்றோர்களுக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

அப்பொழுது தான் கருணாநிதியால், 2008 செப்டம்பர் மாதம் மூளைச்சாவு அடைந்தவர்களிடத்திலிருந்து உறுப்புகளை பெற்று அதன் மூலம் மற்றவர்களுக்கு பொருத்துகிற அந்த மகத்தான திட்டத்தை அறிவித்து, தமிழக அரசின் மூளைச் சாவு




உறுப்பு மாற்று சிகிச்சை திட்டம் என்கின்ற ஒரு திட்டத்தை தொடங்கினார். அந்த திட்டம் இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியான திட்டமாக இருந்தது. தொடர்ச்சியாக அந்த திட்டமானது தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையமாக உருவாக்கப்பட்டது.தற்போது தமிழகத்தில் 40 அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளிலும், 120 தனியார் மருத்துவ மனைகளிலும் இந்த Organ Harvest License உள்ளது. இந்தியாவிலேயே உறுப்பு தானம் அதிகமாக பெறக்கூடிய மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

இப்படி மிகச் சிறப்பான கட்டமைப்பினை பெற்றிருக்கிற காரணத்தினாலும், தொடர்ந்து இதய மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, கணையம் மாற்று அறுவை சிகிச்சை, இதயமாற்று அறுவை சிகிச்சை, உறுப்பு மாற்று அறுவை கிச்சை, கருவிழி மாற்று அறுவை கிச்சை, தோல் மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மாற்று அறுவை கிசிச்சை, எலும்பு மஞ்சை மாற்று அறுவை சிகிச்சை என்று பல வகைகளில் உறுப்பு மாற்று அறுவை கிச்சைகள் தமிழகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த காலங்களில் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மட்டுமே உறுப்பு மாற்று சிகிச்சை இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு டாக்டர் ரேலாவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, சென்னை அரசு ராஜீவ்காந்தி பொது மருத்துவமனையிலும், கோவை, மதுரை போன்ற அரசு மருத்துவமனைகளிலும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற துவக்கப்பட்டது. கடந்த ஒரு ஆண்டில் மட்டும் அரசு ராஜீவ்காந்தி பொது மருத்துவமனையில் 4 கல்லீரல் மாற்று அறுவை கிசிச்சைகள் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 4 பேரும் நல்ல உடல்நலத்துடன் இருக்கின்றார்கள்.

இதன்மூலம் ஏழை எளியவர்களுக்கு முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் உடல் உறுப்பு தானங்கள் மக்களிடத்தில் விழிப்புணர்வு பெற்றிருக்கிறது. ஆக இன்றைக்கு மாற்று அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. காப்பீட்டு திட்டத்தின் அடிப்படையில் 22 லட்சம் ரூபாய் அளவுக்கு கூட உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கான அரசு சார்பில் காப்பீட்டு திட்டத்தின்மூலம் மக்கள் பயன்பெற்று கொண்டிருக் கிறார்கள்.இதுவரை மொத்த உறுப்பு மாற்று பயனாளர்கள் 2008க்குப் பிறகு 1705 பேர் தந்து இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இப்படி 1705 பேர் தந்து இருக்கின்ற உறுப்புக் கொடைகளின் மூலம் 6267 பேருக்கு பயன் அடைந்துள்ளனர். இதில் இதயம் 786 பேருக்கும், நுரையீரல் 801 பேருக்கும், கல்லீரல் 1565 பேருக்கும், சிறுநீரகம் 3046 பேருக்கும், கணையம் 37 பேருக்கும், சிறுகுடல் 6 பேருக்கும், வயிறு 2 பேருக்கும், கைகள் 4 பேருக்கும், மொத்த திசுக்கள் 3946 என்று இதுவரை 6267 உறுப்புக் கொடைகள் இன்று வரை வழங்கப்பட்டு பயன் அடைந்துள்ளனர்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு குறிப்பாக முதல்வரின் வழிகாட்டுதலின்படி, 292 கொடையாளர்கள் இதுவரை உறுப்பு தானங்களை செய்திருக்கிறார்கள். அவர்கள் அளித்த உறுப்புகளின் பயன்பாடு என்பது 1162 ஆக இருக்கிறது. எனவே அந்த வகையில் உறுப்பு தானம் என்பது தமழகத்தில் ஒரு இயக்கமாக மிகச் சிறப்பாக பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. கடந்த நிதிநிலை அறிக்கையில் "விடியல்" என்கின்ற ஒரு தானியங்கி செயலி இதற்காக அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தோம். அந்தவகையில் இந்தியாவிலேயே முதன் முறையாக நோயாளிகளின் உடல் உறுப்புகளை கண்காணிக்க அந்த தானியங்கி இணையதளம் மற்றும் செயலி கடந்த ஆகஸ்ட் 13, 2021 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த செயலியில் கடந்த ஒன்றரை வருடங்களாக வெளிப்படைத்தன்மையிலும், மூப்பின் அடிப்படையிலும் நோயாளிகளுக்கு உறுப்பு ஒதுக்கீடுகளை அரசு வெளிப்படையாக செய்து வருகிறது. அதற்காக விடியல் என்கின்ற தானியங்கி இணையதளம் மிகச் சிறந்த வகையில் பயன்பாட்டில் இருக்கின்றது.கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் நானும், நமது துறையின் செயலாளர் அவர்களும் பங்கேற்று தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற பல்வேறு மாநிலங்களுடான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான இணையதள கருத்தரங்கம் நடத்தியிருக்கிறோம்.

அந்த கருத்தரங்கில் 500 பேருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி தொடர்ச்சியாக உறுப்பு மாற்று, உறுப்பு தானம், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், அதற்கான விழிப்புணர்வு போன்ற பணி களில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கின்றது. அதனை பாராட்டும் விதமாக Best State விருது தந்திருக்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

## ஆதரவற்ற நிலையில் இறந்து கிடந்த துணை நடிகர் மோகன்: கமலுடன் 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் நடித்தவர்

கமலின் 'அபூர்வ சகோதரர்' படத்தில் நடித்த துணை நடிகர் மோகன் வறுமையால் மதுரை திருப்பரங்குன்றம் பகுதியில் ஆதரவற்ற நிலையில் இறந்து கிடந்தார்.சேலம் மாவட்டம், மேட்டுரைச் சேர்ந்தவர் சின்னு. இவரது இளைய மகன் மோகன்(60). திரைப்படங்களில் துணை நடிகராக நடித்து வந்தார். கமல்ஹாசன் நடிப்பில் 1989ஆம் ஆண்டு வெளியான 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் அப்புவின் (கமல்) நண்பர்களில் ஒருவராக நடித்திருந்தார்.

மேலும், 'நான் கடவுள்', 'அதிசய மனிதர்கள்' உள்ளிட்ட பல திரைப்படங்களில் நடித்துள்ளார். பின்னர் மோகனுக்கு திரைப்பட வாய்ப்புகள் எதுவும்



கிடைக்காததால் சொந்த ஊரை விட்டு திருப்பரங்குன்றம் பகுதிக்கு சில ஆண்டுக்கு முன்பு வந்தார். அங்கே வறுமை காரணமாக பெரிய ரத வீதியில் அவர் பிச்சை எடுத்து வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் முன்தினம் (ஜூலை 31) பெரிய ரத வீதியில் மோகன் ஆதவற்ற நிலையில் இறந்து கிடந்தார்.

இது பற்றி தகவல் அறிந்த திருப்பரங்குன்றம் போலீஸார் மோகனின் உடலை மீட்டு, மதுரை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பினர். மேட்டூரில் உள்ள அவரது குடும்பத்தினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரசோதனைக்குப் பிறகு ஆம்புலன்ஸ் மூலம் அவரது உடல் மேட்டூருக்கு கொண்டு செல்லப்பட்டது. மோகனுக்கு 2 சகோதார்கள், 3 சகோதரிகள் உள்ளனர் என போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் | 2ம் கட்ட விண்ணப்ப பதிவு ஆரம்பம் : முதல்வர் ஆலோசனை



கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்கான 2ம் கட்ட விண்ணப்ப பதிவு முகாம் நாளை தொடங்க உள்ள நிலையில், அமைச்சர்கள், அதிகாரிகளுடன் முதல்வர் இன்று ஆலோசனை நடத்த உள்ளார்.தமிழகத்தில் குடும்பத் தலைவிக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் வரும் செப்.15ம் தேதி தொடங்கப்படுகிறது. காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்துக்கு ரூ.7 ஆயிரம் கோடி நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது இத்திட்டத்துக்கான பயனாளிகளை தேர்வு செய்யும் வகையில் விண்ணப்பம் விநியோகம், பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக கடந்த ஜூலை 24ம் தேதி முதல் 3 நாட்கள் விண்ணப்பங்கள் நியாயவிலைக்கடை ஊழியர் கள் மூலம் வீடுவீடாக விநியோகிக் கப்பட்டது.

இதனை தருமபுரியில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதன்பிறகு, ஜூலை 27ம் தேதி சிறப்பு முகாம்கள் மூலம் விண்ணப்ப பதிவு தொடங்கி இன்றுடன் முடிகிறது. நேற்றைய நிலவரப்படி 79.66 லட்சம் பயனாளிகள் தங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து, இரண்டாம் கட்ட விண்ணப்ப பதிவு நாளை (ஆக. 5) தொடங்கி, 16ம் தேதிவரை நடைபெறுகிறது. இதற்கான விண்ணப்ப விநியோகம் ஆக. 1ம்தேதி முதல் தொடங்கியது. குறிப்பாக 14,825 நியாய விலைக்கடைகளில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு இந்த விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் அனைத்தும் இதற்கென உருவாக்கப் பட்ட செயலியில் பதிவு செய்யப்பட்டு, அதன்பிறகு தகுதிகள் அடிப்படையில் விண்ணப்பம் பரிசீலிக் கப்படுகிறது. தமிழக அரசிடம் உள்ள ஆதார், வருமான வரித்துறை, மின்கட்டண தரவுகள் சரிபார்க்கப்பட்டு அதன் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.இந்நிலையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மற்றும் முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்கள் குறித்து அமைச்சர்கள். அதிகாரிகளுடன் முதல்வர் இன்று ஆலோசனை நடத்த உள்ளார். இதுவரை 79 லட்சத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் விண்ணப்பங்களை பதிவு செய்துள்ளனர்.

# இவ்வார ராசிபலன்

**04-08-2023 வெள்ளி தொடக்கம் 10-08-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வம்பு தும்புகள் ஒழியும். பூர்வீக சொத்து சேரும். உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். கனவு தொல்லை உண்டு. தேவைகள் பூர்த்தியாகும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத்தேடி வரும். இனிய தகவல் வந்து சேரும். புதியத் தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உடல் மனநிம்மதி தரும். பாராட்டுப் பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். புதிய முதலீடு தவிர்க்கவும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். புதிய நட்பை தவிர்க்கவும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். அந்நிய தேசப்பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,7,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L





**ரிஷபம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். சுபகாரியம் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளால் தாமதம் ஏற்படும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். இல்லத்தில் அமைதி கூடும். நீண்ட நாள் நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். சுபகாரியம் கைகூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**மிதுனம்:** மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் தரும். தன வரவில் தடங்கல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். உலோகத் தொழில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுப்ரமணியர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கடகம்:** பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய வாரம். தாராளமான தனவரவு உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புகள் தேடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். சிறிய இடையூறு ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சுய பலம் கூடும். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். தங்க நகைகள் சேரும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். புகழ்ச்சி அதிகரிக்கும். வெளியூர் பயணம் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். ஆரோக்கியம் சீராகும். குடும்ப மேன்மை தரும். எந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாகன அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,2,7,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,K




**சிம்மம்:** நம்பிக்கைக்குரியவர்களை சந்திக்கும் வாரம். வழக்குகள் வெற்றி தரும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் மறையும். நல்லோர்களின் நட்பு கிட்டும். நிதி நிலைமை சீராகும். வழிபாடு மாற்றம் தரும். முயற்சிகள் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சியில் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். திடீர் பயணம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் ‘ராஜயோகம்’

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**கன்னி:** இக்கட்டான சூழ்நிலைகள் அகலும் வாரம். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். அணிகலன் சேரும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். புதிய எண்ணம் நிறைவேறும். நண்பர்களால் நன்மையுண்டு. வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். கல்வியில் கவனம் தேவை. காதல் கசக்கும். வழக்குகள் சாதகமாகும். தொழில் மேன்மை உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். சோம்பல் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாதிப்புகள் அகலும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். உடல்நலம் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 3,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய கடன் வசூலாகும். பயணம் அனுகூலம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் கவனம் தேவை. கலைத்துறையில் திருப்பம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். போட்டிகள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். கவலைகள் ஒழியும். கடன் பிரச்சனைகள் அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பொறுப்புக்களால் சிறப்பு சேர்க்கும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பணிவான பேச்சுகள் தேவை. சச்சரவுகள் அகலும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 5,3,7,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K





**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். நன்மைகள் பெருகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரம் உயரும். சிந்தனைகள் மேலோங்கும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. தொலைபேசி தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பழைய பாக்கி வசூலாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பாராட்டுக்கள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பெருமைகள் சேரும். திட்டமிட்ட செயல் தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். பணப்பற்றாக்குறை நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. எள் தானம் ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம் இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**தனுசு:** வறுமைகள் விலகும் வாரம். விவசாயிகள் பயன்பெறும். தெளிவான முடிவுகள் உதயமாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். கௌரவத்தில் கவனம் தேவை. புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். கலக்கமான மனநிலை காணப்படும். பிரார்த்தனையால் பலன் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். அதிகாரம் உயரும். அணிமணிகள் சேரும். வாகன யோகம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். தேச பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். பொருளாதாரம் மேம்படும். திருமண தீபம் சுடர்விடும். கடன் பாக்கிகள் வசூலாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. உழைப்பில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். உடல்நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். திடீர் பயணம் ஏற்படும். மதிப்பு உயரும். மனைவி பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு கூடும். பூமியால் லாபம் உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உதவிகள் கிட்டும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது.

*(தொடர்ச்சி 30 பக்கம்)*

# அன்பின் தொனி - 700

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஆன்மீக எழுப்புதலின் முக்கியத்துவம்**

**எழுப்புதலுக்கு அவசியமானது:**

**மென்மையான இருதயமமும், தாழ்மையானஆவியும் -** Tender heart & Humble Spirit

நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ள வருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.
**- ஏசாயா 57: 15**

என் நாமம் தரிக்கப்பட்டஎன் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி,தங்கள் பொல்லா தவழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிறநான் கேட்டு, அவர்கள் பாவத்தைமன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.
**- 2 நாளாகமம் 7: 14**

நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால், திரும்பக் கட்டப்படுவீர், அக்கிரமத்தை உமது கூடாரத்துக்குத் தூரமாக் குவீர்.
**- யோபு 22: 23**

கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்குப் பயமுண்டாயிற்று, கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும், கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்.
**- ஆபகூக் 3: 2**

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?
**- சங்கீதம் 85: 6**

**இயேசுவின் ஜெபம்**

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக் கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதைஉலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என் னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.
**- யோவான் 17: 17- 23**

இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து, உம்முடையபரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும் படி உம்முடையகரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும் படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள். அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒரு வனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை, சகலமும் அவர்களுக்குப்பொது வாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள், அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலேவைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது, அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறை வாயிருந்ததில்லை.
**- அப்போஸ்தலர் 4: 29-35**

**தொடரும்...**

## இவ்வார ராசிபலன்

*(29 பக்கத் தொடர்ச்சி)*

**மகரம்:** பயணம் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வசதிகள் பெருகும். புதுமுயற்சிகள் பலன் அளிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். சொத்துக்கள் சேரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,7,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**கும்பம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். யோகமான காலம். எதிர்பார்ப்பினால் பலன் உண்டாகும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். தாய்வழி உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. வெற்றி சீக்கிரம் கிட்டும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை அமையும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். பூமியால் லாபம் அடைவீர்கள். புதிய பொருள் சேரும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பாராட்டுக்கள் கிடைக்கும். மற்றவர் தொல்லைக் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். கலைத்தொழிலில் திருப்பம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். முகப்பொலிவு உண்டாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். வாய்ச்சொல் பலன் உண்டு. தொழில் வளம் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: - , அதிர்ஷ்ட எண்: 8,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,S




**மீனம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். ஆதாயம் பெருகும். நிர்வாகத் திறமை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் திறமை பளிச்சிடும். நினைத்தக் காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கலை ஆர்வம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். வீண் செலவு அதிகமாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். பொன், பொருள் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிதான காரியம் நடைபெறும். குடும்ப மகிழ்ச்சி இருமடங்காகும். சகோதாரியால் லாபம் உண்டு. ஒப்பற்ற பலன் சேர்க்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரித் தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J



# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




NESAN Subramaniam 416-908-5656

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca


26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்


Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
• 905-808-9930
5 MCMURCHY AVE N, UNIT 12
BRAMPTON, ON L6X 2R6
• 905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35
MISSISSAUGA, ON L5M 2S4


உதயம் 1426 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 4, 2023




# தனது பேரன் அவனீஸ் கிரிகரனின் இசை அரங்கேற்றத்தை ரசிகர்கள் முன்னிலையில் சமர்ப்பித்த ஆசிரியை 'இசை கலைமணி' பவானி ஆலாலசுந்தரம்

அண்மையில் கனடாவின் ஜோர்ஜ் ரவுண் நகரத்தில் இடம்பெற்ற இளம் கர்நாடக சங்கீதக் கலைஞர் அவனீஸ் கிரிகரன் அவர்கள் தனது 'அம்மம்மாவும்'இசையாசிரியையுமான 'இசைக்கலைமணி' பவானி ஆலாலசுந்தரம் அவர்களின் வழிகாட்டுதலில் பயின்று அற்புதமான தனது இசையரங்கேற்றத்தை அனைவருக்குமாக சமர்ப்பித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)

# 12 நாட்கள் நடைபெறும் இவ்வருட ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஈழத்திலிருந்து கம்பவாருதி ஜெயராஜ், கனடாவிலிருந்து 'உதயன்' லோகேந்திரலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர் பட்டியல் இடம்பெற்றுள்ளனர்

## ஈழத்து தமிழறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவான உலகத் தமிழர் படைப்பரங்கமும் இடம்பெறுகின்றது



தமிழ்நாட்டில் பெருமளவில் மக்கள் வரவேற்பைப் பெற்று எதிர்வரும் 4ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 12 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்வருடத்தின் ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஈழத்திலிருந்து கம்பவாருதி ஜெயராஜ் கனடாவிலிருந்து 'உதயன்' லோகேந்திரலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர் பட்டியல் இடம்பெறுகின்றனர்.

இவ்வருடத்தின் ஈரோடு புத்தகத் திருவிழாவ-ில் 12 நாட்களும் மேற்படி இருவர் உட்பட 24 பேர் உரையாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசின் உதவியோடு நடத்தப்பெறும் ஈரோடு புத்தகத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளை நிறுவ-னர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் தலைமைய-ில் இயங்கும் விழாக்குழுவினர் செய்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# தன்னுடைய 20 வயது சம்பவங்களை 75 வயதில் நிறைந்த அனுபவத்தோடு எழுத்தாளர், வீணைமைந்தன் பண்டைய தமிழ் இலக்கியங்களோடு தொடர்புபடுத்தி எழுதியுள்ளார்

## – வெளியீட்டு விழாவில் விமர்சகர் பாலசிங்கம் கருணாநந்தன்



கனடா வாழ் எழுத்தாளரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தை நிறுவிய சிலரில் ஒருவருமாகிய வீணைமைந்தனின் மூன்று நூல்கள் கடந்த 30-07-2023 ஞாயிற்றுக்கிழமையன்று மொன்றியால் மாநகரில் வெளியிடப்பட்டன.

இந்த விழா பாரதி தமிழ்ச் சங்க ஆதரவில் மீட்பின் அன்னை மறைத்தள மண்டபத்தில் நடைபெற்றது. இந்த வெளியீட்டு விழாவில் பல எழுத்தாள நண்பர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோர் உரையாற்றினர். திருமதி உமா வேலு தொகுத்து வழங்கிய இந்த நிகழ்வில், மொன்றியல் அருள்திரு முருகன் ஆலய பிரதம குரு வெங்கடேஸ்வர சர்மா தலைமை ஏற்று ஆசி உரையும் தலைமை உரையையும் வழங்கினார். பாரதி தமிழ்ச்சங்க நிறுவுனர், ஆசிரியர் செல்லையா மூர்த்தியின் வரவேற்புரை வழங்க நூல் அறிமுகங்கள் இனிதே நடந்தேறின.

'கனடா உதயன்' பத்திரிகை பிரதம ஆசிரியர் ஆர் என் லோகேந்திரலிங்கம் அவர்களும் யுகம் வானொலி அதிபர், நாடகக் கலைஞர் கணபதி இரவீந்திரன் அவர்களும் ரொறொன்ரோவில் இருந்து வருகை தந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். (தொடர்ச்சி 22ம் பக்கம்)

# இலண்டன் பிபிசி வானொலி முன்னாள் ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் இலண்டனில் அகால மரணத்தைத் தழுவினார்



உலகப் புகழ்பெற்ற இலண்டன் பிபிசி வானொலியின் முன்னாள் ஒலிபரப்பாளரும் உலகெங்கும் வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கட்டுரைகளை எழுதிவந்தவரும் தொழில் ரீதியாக சட்டத்தரணியுமாகிய விமல் சொக்கநாதன் அவர்கள் இலண்டன் மாநகரில் அகால மரணத்தைத் தழுவினார் என்ற சோகமான செய்தியை அனைவரோடும் பகிர்ந்து கொள்கின்றோம்.

கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து தனது புத்தகங்களின் வெளியீட்டு விழாக்களை வெற்றிகரமாக நடத்தியும் எதிர்வரும் ஒக்டோபர் 14ம் திகதி சனிக்கிழமை கனடாவிலும் தனது
நூல்கள் சிலவற்றை வெளியிடும் முயற்சியில் இறங்கி அதற்கான ஏற்பாடுகளை செய்வதில் கனடாவில் உள்ள பல நண்பர்கள் பலரோடு கலந்துரையாடல்களை நடத்தி வந்த நிலையில் எதிர்பாராத விதமாக நாம் நண்பர் விமல் சொக்கநாதன் அவர்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவரது இழப்பு உலகெங்கும் வாழும் எம் போன்ற அவரது நண்பர்கள் உறவினர்கள். நேயர்கள். வாசகர்கள். அபிமானிகள். பத்திரிகையாளர்கள். எழுத்தாளர்கள். ஒலிபரப்பாளர்கள் என இலட்சக் கணக்கானவர்களின் இதயங்களை தாக்கியிருக்கும் என்பதையும் நாம் அறிவோம்.

அவரது இறுதிக்கிரியைகள் தொடர்பான விடயங்களை இலண்டனில் உள்ள அவரது குடும்பத்தினர் கவனித்து வருகின்றனர். அன்னாரின் இழப்பிற்கு எமது ஆழ்ந்த அஞ்சலிகள்!

*கனடா உதயன் ஆசிரிய பீடம்*

# கனடாவில் அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளர் ஆசி. கந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' நூல் வெளியீட்டு விழா



அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளரும் தனது படைப்புக்களுக்காக பல விருதுகளைப் பெற்றவருமான எழுத்தாளர் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' நாவல் வெளியீட்டு விழா கனடாவில் 29 யூலை 2023 அன்று சிறப்பாக நடைபெற்றது ஸ்காபுறோவில் பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேவாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் அவர்கள் தலைமை ◌ தாங்கினார்.

மங்கள விளக்கேற்றும் வைபவத்தில் பல அழைக்கப்பட்ட அன்பர்கள் பங்கெடுத்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)